- ✓ செப்புவழு x வினாவழு
- ✓ செம்மை x பசுமை
- ✓ செய்யோன் x கரியோன்
- ✓ செயப்படுபொருள் x செய்பொருள்
- ✓ செல்வம் x வறுமை
- ✓ ஞானக்கண் x ஊனக்கண்
- ✓ தக்கார் x தகவிலார்
- ✓ தகுதி x தகுதியின்மை
- ✓ தலைமாடு x கால்மாடு
- ✓ தவநெறி x அவநெறி
- ✓ தள்ளாமை x துடிதுடிப்பு
- ✓ தன்மைநவிற்சி x உயர்வு நவிற்சி
- ✓ தனி x கூட்டு
- ✓ தாளாண்மை x மடிகை
- ✓ திட்டவட்டம் x தெளிவின்மை
- ✓ திண்ணம் x பொய்
- ✓ திண்மை x மென்மை
- ✓ திரிசொல் x இயற்சொல்
- ✓ திருவினை x தீவினை
- ✓ தீயவை x நல்லவை
- ✓ தெவ்வர் x நண்பர்
- ✓ தேக்கம் x ஒழுக்கம்
- ✓ தொகுதியெண் x பகுதியெண்
- ✓ தொன்மை x புதுமை
- ✓ நசை x வெறுப்பு
- ✓ நல்லூழ் x அல்லூழ்
- ✓ நலிவு x பொலிவு
- ✓ நன்கொடை x கைம்மாறு
- ✓ நாத்திகம் x ஆத்திகம்
- ✓ நுண்ணறிவு x மழுங்கிய அறிவு

- ✓ நுண்பொருள் x பருப்பொருள்
- ✓ நூலறிவு x அனுபவ அறிவு
- ✓ நோவு x இன்பம்
- ✓ பழி x புகழ்
- ✓ பிறிதின்கிழமை x தற்கிழமை
- ✓ பீடு x கேடு
- ✓ புல்லறிவு x நல்லறி
- ✓ புலமை x பேதைமை
- ✓ பெருவழக்கு x அருவழக்கு
- ✓ பேதை x மேதை
- ✓ பேராண்மை x கோழைமை
- ✓ பொய்ம்மை x மெய்ம்மை
- ✓ போக்கிரி x நல்லவன்
- ✓ போகி x யோகி
- ✓ மகடூஉ x அகடூஉ
- ✓ மருள் x தெருள்
- ✓ மீக்கூர்தல் x குறைதல்
- ✓ வழிமொழிதல் x முன்மொழிதல்
- ✓ வாடை x தென்றல்
- ✓ விதி x புறனடை
- ✓ வெள்ளைமனம் x கள்ளமனம்
- ✓ வெஃகல் x விரும்புதல்
- ✓ நல்வினை x தீவினை
- ✓ வைதல் x புகழ்தல்
- ✓ வழுத்தல் x இகழ்தல்
- ✓ கீழ்த்திசை x மேற்றிசை
- ✓ நகை x அழுகை
- ✓ வலம்புரி x இடம்புரி
- ✓ மலர்தல் x கூம்பல்
- ✓ வெம்மை x தண்மை
- ✓ வல்லினம் x மெல்லினம்
- ✓ ஒற்றுமை x வேற்றுமை
- ✓ கனவு x நனவு
- ✓ சிற்றிலக்கியம் x பேரிலக்கியம்
- ✓ பழமை x புதுமை
- ✓ நல்லார் x அல்லார்
- ✓ ஓடுமீன் x உறுமீன்
- ✓ தெருள் x மருள்

தேர்வுக்குறிப்புகள்

| | | | |
|---|---|---|---|
| ✓ | புகட்டு | x | எளிமை |
| ✓ | தூங்குக | x | தூங்கற்க |
| ✓ | தூங்கி | x | தூங்காது |
| ✓ | மருவுக | x | ஒருவுக |
| ✓ | சிற்றூர் | x | பேரூர் |
| ✓ | நீதி | x | அநீதி |
| ✓ | நிறை | x | குறை |
| ✓ | இயற்கை | x | செயற்கை |
| ✓ | ஆக்கம் | x | அழிவு |
| ✓ | அகம் | x | புறம் |
| ✓ | பகை | x | நட்பு |
| ✓ | இரத்தல் | x | ஈதல் |
| ✓ | ஆடூஉ | x | மகடூஉ |
| ✓ | முற்பகல் | x | பிற்பகல் |
| ✓ | புகழ்ச்சி | x | இகழ்ச்சி |

தேர்வுக்குறிப்புகள்

## 5. பொருந்தா சொல்லைக் கண்டறிதல்

கொடுக்கப்பட்டிருக்கும் நான்கு சொற்களில் மூன்று சொற்கள் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் ஒரு சொல் மட்டும் தனித்து நிற்கும் அச்சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுதலே பொருந்தச்சொல்லைக் கண்டறிதல் எனப்படும்.

ஒன்றையொன்று சார்ந்திருக்கும் சொற்கள் பின்வருமாறு இவற்றை தெரிந்து கொண்டால் தேர்வில் பதிலளிக்க இன்னும் சுலபமாக இருக்கும்

தமிழில் கிட்டத்தட்ட 14 ஆம் நூற்றாண்டு வரையிலான நூல்கள் பெரும்பாலும் தொகுப்பு நூல்களாகவே உள்ளன. முச்சங்க நூல்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், பன்னிருதிருமுறைகள், நாலாயிரத்திவ்விய பிரபந்தம், சைவசித்தாந்த சாத்திரங்கள் என அனைத்தும் தொகுப்பு நூல்களே. பொருந்தாச் சொல்லை இதில் மாற்றி அமைப்பார்கள்.

- ✓ (1)காய்சின வழுதி (2) முடத்திருமாறன்
- ✓ (3)உக்கிரப் பெருவழுதி (4) நின்றசீர் நெடுமாறன்

இதில் நின்றசீர் நெடுமாறன் தவிர மற்ற மூவரும் முச்சங்கங்கள் ஆதரித்த அரசர்கள்

- ✓ (1)முல்லைப்பாட்டு - திருமுறுகாற்றுப்படை
- ✓ (2)நெடுநல்வாடை - சிறுபாணாற்றுப்படை
- ✓ (3)பட்டினப்பாலை - பதிற்றுப்பத்து
- ✓ (4)மலைபடுகடாம் - மதுரைக்காஞ்சி

இதில் பதிற்றுப் பத்து மட்டும் எட்டுத் தொகை மற்றவை பத்துப்பாட்டு நூல்

- ✓ (1)கூடலூர் கிழார் (2)நக்கீரர்
- ✓ (3)கபிலர் (4)மாங்குடி மருதனார்

இதில் கூடலூர் கிழார் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான முதுமொழிக் காஞ்சியில் ஆசிரியர், மற்றவர் பத்துப்பாட்டு நூல்களின் ஆசிரியர்கள்.

## பொருள் அடிப்படை :

பொருள் இலக்கணத்தை அகம், புறம் என இரண்டாகப் பிரிப்பர். ஆதன் அடிப்படையிலும் வினா அமைதல் உண்டு.

- ✓ (1)குறிஞ்சிப் பாட்டு (2)முல்லைப்பாட்டு
- ✓ (3)புறநானூறு (4)குறுந்தொகை

இதில் புறநானூறு புறநூல். மற்றவை அகநூல்கள்.

- ✓ (1)இன்னா நாற்பது (2)இனியவை நாற்பது
- ✓ (3)கார் நாற்பது (4)களவழி நாற்பது

இதில் கார் நாற்பதைத் தவிர மற்றவை புறநூல்களாகும்

## நூற்பெயர்:

நூலின் பெயர் சில தன்மைகளின் அடிப்படையில் இடப்பட்டிருக்கும். அதனாலும் வினா அமையலாம்.

- ✓ (1)சிறுபஞ்சமூலம் (2)ஆசாரக்கோவை
- ✓ (3)ஏலாதி (4)திரிகடுகம்

இதில் ஆசாரக்கோவை தவிர மற்றவை மருந்தால் பெயர் பெற்றவை.

- ✓ (1)சிலப்பதிகாரம் (2)மணிமேகலை
- ✓ (3)சூடாமணி (4)நீலகேசி

## சமய வகைப்பாடு:

சங்க காலத்திற்குப் பிறகு தமிழும் சமயமும் இணைந்தே வளர்ந்துள்ளன. இவற்றைப் பிரித்தல் அரிது. இதன் அடிப்படையிலும் வினா அமையும்.

- ✓ (1)சிலப்பதிகாரம் (2)சீவக சிந்தாமணி
- ✓ (3)குண்டலகேசி (4)வளையாபதி

இதில் குண்டலகேசி மட்டும் பௌத்தநூல். மற்றவை சமண நூல்கள்

- ✓ (1)பிரபுலிங்கலீலை (2)திருவருட்பயன்
- ✓ (3)தகராலயரகசியம் (4)திருவாய்மொழி

இதில் திருவாய்மொழி மட்டும் வைணவ நூல்கள், மற்றும் சைவ நூல்கள்

தேர்வுக்குறிப்புகள்

## இலக்கிய வகைப்பாடு:

காப்பிய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் என்பன போன்று இலக்கியங்களை வகைப்படுத்தியுள்ளனர். இதிலும் வினா அமைவதுண்டு

- ✓ குண்டலகேசி - நீலகேசி
- ✓ மணிமேகலை - சீவக சிந்தாமணி
- ✓ வளையாபதி - சிலப்பதிகாரம்
- ✓ மணிமேகலை - வளையாபதி

இதில் நீலகேசி மட்டும் ஐஞ்சிறு காப்பியம். மற்றவை ஐம்பெருங்காப்பிய நூல்கள் ஆகும்.

- ✓ (1)வளையாபதி (2)குண்டலகேசி
- ✓ (3)கம்பராமாயணம் (4)சிவகாமியின் சபதம்

இதில் சிவகாமியின் சபதம் மட்டும் உரைநடைக்காப்பியம். மற்றவை செய்யுட்காப்பியங்கள்.

## ஆசிரியரின் நூல்கள்:

ஓர் ஆசிரியர் பல நூல்கள் எழுதியிருப்பார். அதில் வேறு நூல் வந்து கலப்பதுண்டு.

- ✓ (1)பெருமாள் திருமொழி (2)பெரியதிருவந்தாதி
- ✓ (3)திருவிருத்தம் (4)திருவாசிரியம்

இதில் பெருமாள் திருமொழி குலசேகராழ்வார் பாடியது. மற்றமூன்றும் நம்மாழ்வார் பாடியவை.

- ✓ சஞ்சீவிபர்வத்தின் சாரல்
- ✓ கழைக்கூத்தியின் காதல்
- ✓ மணிமேகலை வெண்பா
- ✓ மலரும் மணமும்

இதில் மலரும் மணமும் என்பது பி.எஸ். ராமையா எழுதியது. மற்றவை பாரதிதாசன் எழுதியவை

**கதை மாந்தர்கள்:**

ஒரு நூலில் வரும் கதை மாந்தர்களின் நல்லோர் தீயோர் எனப் பிரிந்து வரலாம். ஒரு நூல் கதை மாந்தரிடையே வேறு நூல் கதை மாந்தர் வந்துகலக்கலாம் இதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- ✓ (1)இராமன் (2)சீதை
- ✓ (3)திரிசடை (4)இராவணன்

இதில் அனைத்தும் இராமாயணப் பாத்திரங்கள், எனினும் இராவணன் தவிர மற்றவர்கள் நல்லவர்கள்.

- ✓ (1)கர்ணன் (2)விகர்ணன்
- ✓ (3)கும்பகர்ணன் (4)அசுவத்தாமன்

இதில் கும்பகர்ணன் மட்டும் இராமாயணப் பாத்திரம், மற்றவர்கள் மகாபாரதப் பாத்திரங்கள்.

**கால மயக்கம்:**

முதற்காலப் பொருளோடு பிற்காலப் பொருளைச் சேர்த்தல், பிற்காலப் பொருளோடு முற்காலப் பொருளைச் சேர்த்தல்

- ✓ (1)பிசிராந்தையார் (2)ஔவையார்
- ✓ (3)கபிலர் (4)கோதைநாயகி

இதில் கோதைநாயகி பிற்காலத்தவர்

- ✓ (1)கவிமணி (2)நாமக்கல் கவிஞர்
- ✓ (3)அறிஞர் அண்ணா (4)உமாபதிசிவம்

இதில் உமாபதிசிவம் காலத்தால் மூத்தவர்.

## பல்வேறு வகைகள்:

குடி, குணம், வாழ்விடம், செய்கை, இனவகை, தலைமை, உறவு, உவமை என்பன போல வருவனவற்றின் அடிப்படையிலும் அமையும்.

- ✓ (1)தென்னவன் (2)பாண்டியன்
- ✓ (3)கிள்ளி (4)மாறன்

இதில் கிள்ளி என்பது சோழர் குடிப்பெயர். மற்றவை பாண்டியரின் பெயர்கள்

- ✓ (1)பாரி (2)அதியமான்
- ✓ (3)சேரன் (4)காரி

இதில் சேரன் முடியுடைவேந்தன். மற்றவர்கள் சிற்றரசர்கள் அல்லது சேரன் தவிர மற்றவர்கள் வள்ளல்கள்

- ✓ (1)கீரி (2)நாய்
- ✓ (3)குரங்கு (4)ஆமை

இதில் ஆமை மட்டும் நீரில் வாழ்வன. மற்றவை நிலத்தில் வாழ்வன

- ✓ (1)கழுகு (2)நெருப்புக்கோழி
- ✓ (3)வான்கோழி (4)சிவி

இதில் சிவி மட்டும் பறவையாக இருந்தும் பறக்காது. மற்றவை பறக்கும் பறவைகள்

- ✓ (1)பாம்பு (2)எலி
- ✓ (3)பல்லி (4)எறும்பு

இதில் எலி தவிர மற்றவை ஊர்வன ஆகும்.

- ✓ (1)சுறா (2)கெலுத்தி
- ✓ (3)தவளை (4)வரால்

இதில் தவளை மட்டும் நிலத்திலும் நீரிலும் வாழும். மற்றவை நீரில் மட்டும் வாழ்வன.

- ✓ (1)திமிங்கிலம் (2)வெளவால்
- ✓ (3)மாடு (4)உலுவை

இதில் உலுவை மட்டும் முட்டையிடும். மற்றவை பாலூட்டிகள்.

தேர்வுக்குறிப்புகள்

- ✓ (1)கண்ணகி (2)கூனி
- ✓ (3)மணிமேகலை (4)சீதை

இதில் கூனியை தவிர மற்றவர்கள் கதைத் தலைவியர் ஆவர்.

- ✓ (1)தாய் (2)மகள்
- ✓ (3)மருமகன் (4)மருமகள்

இதில் மருமகன் மட்டும் வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர். மற்றவர்கள் ஒரு குடும்ப உறுப்பினர் ஆவர்.

- ✓ (1)மயில் (2)குயில்
- ✓ (3)மைனா (4)கிளி

இதில் மைனா தவிர மற்றவை பெண்ணுக்கு உவமையாக வரும்

## பிற அலகு கருத்துகள்

இந்நூலின் மற்ற 19 அலகுகளில் உள்ளவையும் இதில் வினாவாக வரலாம்.

- ✓ (1)குரைக்கும் (2)கணைக்கும்
- ✓ (3)பிளிறும் (4)கரையும்

இதில் கரையும் காகம் பறவை இனம். மற்றவை விலங்கினம்

- ✓ (1)வாடகை - குடிக்கூலி (2)பந்தயம் - பணயம்
- ✓ (3)தெம்பு - ஊக்கம் (4)வாடிக்கை - ஒழுங்கு

இதில் வாடிக்கை என்ற பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் ‘வழக்கம்’ ஆகும். மற்ற மூன்றும் சரியான தமிழ்ச் சொல்லாகும்.

(எ.கா)நாலடியார், பழமொழி, நானூறு, கலிங்கத்துப்பரணி, இன்னா நாற்பது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டில் நாலடியார், பழமொழி நானூறு, இன்னா நாற்பது ஆகிய மூன்றும் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களாகும். கலிங்கத்துப் பரணி மட்டும் பரணி இலக்கிய வகையைச் சார்ந்ததால் இங்கு கலிங்கத்துப் பரணியே பொருந்தாச் சொல்.

## மேலும் சில எடுத்துக்காட்டுகள்:

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரம், மணிமேகலை, நந்திக்கலம்பகம், சீவகசிந்தாமணி | - | நந்திக்கலம்பகம் |
| குறிஞ்சி,முல்லை,மருதம், மிருகம் | - | மிருகம் |
| நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், மலைபடுகடாம் | - | மலைபடுகடாம் |
| அரிவை,காளை பெதும்பை, பேதை | - | காளை |
| தூது, உலா, பள்ளு, குயில்பாட்டு | - | குயில்பாட்டு |
| குலசேகரர், அப்பர், மாணிக்கவாசகர், சுந்தரர் | - | குலசேகரர் |
| அச்சம், நாணம், மடம், அறிவை | - | அறிவை |
| மூவண்ணம் | - | காவி, வெண்மை, பச்சை |
| மூவேந்தர்கள் | - | சேரன், சோழன், பாண்டியன் |
| முக்கனி | - | மா, பலா, வாழை |
| முத்தமிழ் | - | இயல், இசை, நாடகம் |
| முப்பால் | - | அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் |
| முக்காலம் | - | இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் |
| முந்நீர் | - | ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் |
| மூன்று முரசு | - | கொடை முரசு, படை முரசு, மங்கள முரசு |
| முச்சங்கம் | - | முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் |
| மூவிடம் | - | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| நாற்திசை | - | கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு |
| நாற்பால் | - | அரசன், அந்தணன், வணிகன், வேளாளன் |
| நான்கு குணம் | - | அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு |
| நால்வகை சொல் | - | பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் |
| நான்மறை | - | ரிக், யஜூர்,சாமம், அதர்வணம் |
| நாற்படை | - | தேர், யானை, குதிரை, காலாட்படை |
| பாவகை | - | வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா |
| ஐம்பெருங்காப்பியங்கள் | - | சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி |
| ஐஞ்சிறுங்காப்பியங்கள் | - | சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம் |

தேர்வுக்குறிப்புகள்

| | | |
|---|---|---|
| ஐந்தொகை | - | முதல், மரபு, செலவு, இருப்பு, ஆதாயம் |
| ஐம்பால் | - | ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் |
| ஐம்பெரும்பொருள் | - | நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் |
| ஐம்பொறி | - | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| ஐம்புலன் | - | ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை |
| ஐந்திணை | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| ஐம்பெருங்குழு | - | சாரணர், சேனாதியார், தூதர், புரோகிதர், அமைச்சர் |
| அறுசுவை | - | இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு |
| பெரும்பொழுது | - | கார்காலம், குளிர்காலம், முன்பனி, பின்பனி, இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் |
| சிறுபொழுது | - | காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம், வைகறை |
| ஏழிசை | - | குரல், துத்தம், கைக்கிளை, உழை, கிளி, விளரி, தாரம் |
| பெண்களின் ஏழு பருவங்கள் | - | பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் |
| எட்டுத்தொகை | - | நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு |
| நவரத்தினங்கள் | - | மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம், கோமேதகம், |
| நவதானியங்கள் | - | நெல், துவரை, பச்சைப்பயறு, உளுந்து, எள், அவரை, கடலை, கொள்ளு, கோதுமை |
| ஆண்பால் பிள்ளைத்தமிழ் 10 பருவங்கள் | - | காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் |
| பெண்பால் பிள்ளைத்தமிழ் 10 பருவங்கள் | - | காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மாணை, கழங்கு, ஊசல் |
| புறத்திணை | - | வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை |
| தொல்காப்பிய அகப்பொருள் கோட்பாடுகள் | - | முதல் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் |
| இரட்சண்ய யாத்திரிகத்தின் ஐந்து பருவங்கள் | - | ஆதிபருவம், குமாரப் பருவம், நிதான பருவம், ஆரண்யப் பருவம், இரட்சண்ய பருவம் |
| இராவண காவியத்தின் ஐந்து | - | தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், |

| | | |
|---|---|---|
| காண்டங்கள் | | விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க் காண்டம் |
| பாஞ்சாலி சபதத்தின் ஐந்து சருக்கங்கள் | - | சூழ்ச்சிச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் |
| மூவகை மொழிகள் | - | தனிமொழி, பொதுமொழி, தொடர்மொழி |
| உறுதிப் பொருள்கள் | - | அறம், பொருள், இன்பம், வீடு |
| திரிகடுகம் | - | சுக்கு, மிளகு, திப்பிலி |
| தேவாரம் பாடிய மூவர் | - | சம்பந்தர், அப்பர், சுந்தரர் |

இவ்வாறு தொடர்புடைய சொற்களைக் கொடுத்து இதில் தொடர்பில்லா ஒன்றைக் கண்டறிவது சிக்கலான ஒன்றாகும். பெரும்பாலும் நான்கும் ஒரே தொடர்புடையதாக இருக்கிற போது அதிகக் காரணங்களால் வேறுபடுவதையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

எ.கா. இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, மகாத்மா காந்தி, நேரு இதில் மகாத்மா காந்தி மட்டும்தான் பிரதமராகவும் இல்லை நேரு குடும்பத்தைச் சார்ந்தவரும் இல்லை. ஆனால் இந்திரா காந்தியைத் தேர்வு செய்தால் அவர் ஒருவர் மட்டுமே பெண்பால் என்று நினைக்கலாம். ஆனால் இரு காரணத்தால் மகாத்மா காந்தி வேறுபட்டிருப்பதால் இதுவே சரியான விடையாகும்.

## 6. பிழை திருத்தம் (i) சந்திப்பிழையை நீக்குதல் (ii) ஒருமை பன்மை /பிழைகளை நீக்குதல் மரபுப் பிழைகள், வழுவுச் சொற்களை நீக்குதல் / பிறமொழிச் சொற்களை நீக்குதல்

- ✓ சந்திப்பிழை திருத்தி எழுதுதல்
- ✓ மரபுப்பிழை நீக்கி எழுதுதல்
- ✓ வழூஉச் சொல் நீக்கி எழுதுதல்
- ✓ வேற்றுமொழிச் சொல் நீக்கி எழுதுதல்
- ✓ ஒருமை பன்மை தவறை நீக்கி எழுதுதல்

மேற்கண்டவற்றிலிருந்து வினாக்கள் அமையும். இவற்றை ஒருமுறை ஆழ்ந்து படித்தால் மனதில் நின்றுவிடும்.ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு வினா என் ஐந்து வினாக்கள் கேட்கப்படலாம்.

### 1.சந்திப்பிழை நீக்கி எழுதுதல்

எந்தெந்த இடத்தில் வல்லினம் மிகும் மிகாது என்பதை அறிந்து கொண்டால், எளிதாக சந்திப்பிழை நீக்கி எழுதலாம்.

### வல்லினம் மிகும் இடங்கள்

1. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி என்றும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
   - ★ (எ.கா) அந்தத் தோட்டம்
   - ★ இந்தக் கிணறு
   - ★ எந்தத் தொழில்
   - ★ அப்படிச் செய்தான்
   - ★ இப்படிக் கூறினான்
   - ★ எப்படிப் பார்ப்போம்
2. இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரிகளில் வல்லினம் ஆகும்.
   - ★ (எ.கா) பொருளைத் தேடினான்
   - ★ புத்தகத்தைப் படித்தான்
   - ★ ஊருக்குச் சென்றான்
   - ★ தோழனுக்குக் கொடு
3. ஆய், போய் எனும் வினையெச்சங்களின் பின் வல்லினம் ஆகும்.
   - ★ (எ.கா) படிப்பதாகச் சொன்னார்
   - ★ போய்ச் சேர்ந்தான்

4. சால, தவ எனும் உரிச்சொற்களின் பின் வல்லினம் ஆகும்.
    - (எ.கா) சாலப் பேசினான்
    - தவச் சிறிது
5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் உடன் தொக்க தொகைகளின் பின்மிகும்.
    - (எ.கா) தண்ணீர்ப்பானை, மரப்பலகை, சட்டைத்துணி
6. ஒரெழுத்துச் சொற்கள் சிலவற்றின் பின்பகும்.
    - (எ.கா) தைப்பாவை
    - தீச்சுடர்
7. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வலி மிகும்.
    - (எ.கா) ஓடாப்புலி, வளையாச் சொல்
8. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.
    - (எ.கா) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை
9. முற்றியலுகர சொற்களின் பின் வல்லினம் மிகும்
    - (எ.கா) திருக்குறள், பொதுச்சொத்து
10. உயிரீற்றுச் சொற்களின் பின் வல்லினம் மிகும்
    - (எ.கா) மழைக்காலம், பனித்துளி

## வல்லினம் மிகா இடங்கள்

1. வினைத்தொகையில் வில்லினம் மிகாது
    - (எ.கா)விரிசுடர், பாய்புலி
2. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது
    - (எ.கா)காய்கனி, தாய்தந்தை
3. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலிமிகாது
    - (எ.கா)தமிழ் கற்றார், கதை சொன்னார்.
4. வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் வல்லினம் மிகாது
    - (எ.கா)கற்க கசடற, வாழ்க தமிழ்
5. விளித்தொடரில் வலி மிகாது
    - (எ.கா)கண்ணா பாடு, அண்ணா பாடு
6. அத்தனை, இத்தனை, எத்தனை எனும் சொற்களுக்குப்பின் வலி மிகாது...
    - (எ.கா)அத்தனை பழங்கள், இத்தனை பழங்கள், எத்தனை கால்கள்
7. இரட்டைக் கிளவியிலும் அடுக்குத்தொடரிலும் வல்லினம் மிகாது.
    - (எ.கா)கலகல, பாம்பு பாம்பு
8. அவை இவை எனும் சுட்டுச் சொற்களின் பின் வல்லினம் மிகாது.
    - (எ.கா)அவை சென்றன, இவை செய்தன
9. அது இது எனும் எட்டுச் சொற்களின் பின் வலி மிகாது
    - (எ.கா)அது பிறந்தது, இது கடித்தது

தேர்வுக்குறிப்புகள்

10. எது, அது எனும் வினைச்சொற்களின் பின் வலி மிகாது
   - ★ (எ.கா)எது பறந்தது, யாது தந்தார்

## உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்றால் என்ன?

ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அவற்றை விளக்கும் பயனும் மறைந்து வருவது உடனும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும்.

- ★ (எ.கா) நீர்க்குடம்
- ➢ அதாவது நீரை உடைய குடம். இதில் 'ஐ' என்னும் 2 ம் வே.உருபும் 'உடைய' என அதை விளக்கும் பயனும் மறைந்து வந்துள்ளன.
- ➢ நீர்க்குடம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- ➢ மட்பானை - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- ➢ கூலிவேலை - நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- ➢ தொட்டித் தண்ணீர் - ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
- ➢ வீட்டுப்பூனை - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

ஆறாம் வேற்றுமைத் தொகையில் பயன் தரும் சொல் மறைந்து வருவதில்லை.

தேர்வுக்குறிப்புகள்

## 2. மரபுப் பிழையை நீக்குதல்

### பறவை மற்றும் விலங்களின் - ஒலி குறிப்பு சொற்கள்

| பறவைகள் | விலங்குகள் |
|---|---|
| ஆந்தை - அலறும் | நாய் - குரைக்கும் |
| கோழி - கொக்கரிக்கும் | நரி - ஊளையிடும் |
| குயில் - கூவும் | குதிரை- கனைக்கும் |
| காகம் - கரையும் | கழுதை - கத்தும் |
| கிளி - கொஞ்சும் | பன்றி - உறுமும் |
| மயில் - அகவும் | சிங்கம் - முழங்கும் |
| கோட்டான் - குழலும் | பசு - கதறும் |
| வாத்து - கத்தும் | எருது - எக்காளமிடும் |
| வானம்பாடி - பாடும் | எலி - கீச்சிடும் |
| குருவி - கீச்சிடும் | தவளை - கத்தும் |
| வண்டு - முரலும் | குரங்கு - அலம்பும் |
| சேவல் - கூவும் | பாம்பு - சீறிடும் |
| கூகை - குழலும் | யானை - பிளிரும் |
| புறா - குனுகும் | பல்லி - சொல்லும் |

### பறவை மற்றும் விலங்குகளின் இளமைப் பருவம்

- ★ புலிப்பரள்
- ★ சிங்கக்குருளை
- ★ பூனைக்குட்டி
- ★ எலிக்குஞ்சு
- ★ நாளிணிக்குட்டி
- ★ கோழிக்குஞ்சு
- ★ குதிரைக்குட்டி
- ★ கீரப்பிள்ளை
- ★ கழுதைக்குட்டி
- ★ மான்கன்று
- ★ ஆட்டுக்குட்டி
- ★ யானைக்கன்று
- ★ பன்றிக்குட்டி

தேர்வுக்குறிப்புகள்

## தாவரங்களின் உறுப்புப் பெயர்கள்

- சோளத்தட்டு
- முருங்கைக்கீரை
- தாழைமடல்
- தென்னங்கீற்று
- வாழையிலை
- பனையோலை
- வேப்பந்தழை
- மாவிலை
- மூங்கில் இலை
- நெல்தாள்

## செடி, கொடி மரங்களின் தொகுப்பு

- பூந்தோட்டம்
- மாந்தோப்பு
- வாழைத்தோட்டம்
- தேயிலைத் தோட்டம்
- சோளக்கொல்லை
- சவுக்குத்தோப்பு
- தென்னந்தோப்பு
- பனங்காடு
- வேலங்காடு

## பொருட்களின் தொகுப்பு பெயர்கள்

- ஆடு - மந்தை
- மாடு - மந்தை
- எறும்பு - சாரை
- கல் - குவியல்
- சாவி - கொத்து
- திராட்சை - குலை
- பசு - நிரை
- யானை - கூட்டம்
- வீரர் - படை
- வைக்கோல்- போர்
- விறகு - கட்டு
- மக்கள் - தொகுப்பு

தேர்வுக்குறிப்புகள்

## 3. வழூஉச் சொற்களும் தமிழ்ச்சொற்களும்

| வழூஉச்சொல் | தமிழ்சொல் |
|---|---|
| ★ உசிர் | உயிர் |
| ★ ஊரளி | ஊருளி |
| ★ ஒருத்தன் | ஒருவன் |
| ★ கடகால் | கடைக்கால் |
| ★ குடக்கூலி | குடிக்கூலி |
| ★ முயற்சித்தார் | முயன்றார் |
| ★ வண்ணத்திப்பூச்சி | வண்ணத்துப்பூச்சி |
| ★ வென்னீர் | வெந்நீர் |
| ★ எண்ணை | எணணெய் |
| ★ சிகப்பு | சிவப்பு |
| ★ தாவாரம் | தாழ்வாரம் |
| ★ புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| ★ கோர்வை | கோவை |
| ★ வலது பக்கம் | வலப்பக்கம் |
| ★ பேரன் | பெயரன் |
| ★ பேத்தி | பெயர்த்தி |
| ★ தலகாணி | தலையணை |
| ★ வேர்வை | வியர்வை |
| ★ சீயக்காய் | சிகைக்காய் |
| ★ சுவற்றில் | சுவரில் |
| ★ இருபல் | இருமல் |
| ★ அருவாமனை | அரிவாள்மனை |
| ★ அண்ணாக்கவுரு | அரைநாண்கயிறு |
| ★ புஞ்சை | புன்செய் |
| ★ புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| ★ நாத்தம் | நாற்றம் |
| ★ பதனி | பதிநீர் |
| ★ அருகாமை | அருகில் |
| ★ வெங்கலம் | வெண்கலம் |
| ★ பேட்டி | நேர்காணல் |
| ★ வெண்ணை | வெண்ணெய் |
| ★ ஒத்தடம் | ஒற்றடம் |
| ★ தேனீர் | தேநீர் |
| ★ கவுறு | கயிறு |
| ★ பயிறு | பயறு |

| | |
|---|---|
| ★ பாவக்காய் | பாகற்காய் |
| ★ ரொம்ப | நிரம்ப |
| ★ கோடாலி | கோடாரி |
| ★ கடப்பாறை | கடப்பாரை |
| ★ ஆம்பளை | ஆண்பிள்ளை |
| ★ ஈர்கோலி | ஈர்கொல்லி |
| ★ அவரக்கா | அவரைக்காய் |

## 4. வேற்றுமொழிச் சொல் நீக்கி எழுதுதல்

| வேற்றுமொழிச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| ★ பஜனை | கூட்டுவழிபாடு |
| ★ வைத்தியர் | மருத்துவர் |
| ★ ஜனம் | மக்கள் |
| ★ கர்வம் | செருக்கு |
| ★ வாபாஸ் | திரும்பபெறுதல் |
| ★ தபால் | அஞ்சல் |
| ★ கிஸ்தி | வரி |
| ★ அலமாரி | நெடும்பேழை |
| ★ முண்டாசு | தலைப்பாகை |
| ★ சிம்மாசனம் | அரியணை |
| ★ அகங்காரம் | ஆணவம் |
| ★ பஜார் | கடைத்தெரு |
| ★ சாதம் | சோறு |
| ★ சபை | அவை |
| ★ நாஷ்டா | சிற்றுண்டி |
| ★ ஆசீர்வாதம் | வாழ்த்து |
| ★ நமஸ்காரம் | வணக்கம் |
| ★ லாபம் | ஈவு |
| ★ இஷ்டம் | விருப்பம் |
| ★ வக்கீல் | வழக்குரைஞர் |
| ★ தராசு | துலாக்கோல் |
| ★ ஹாஸ்டல் | விடுதி |
| ★ சர்க்கார் | அரசு |
| ★ கேப்பை | கேழ்வரகு |
| ★ ஐதீகம் | சடங்கு |
| ★ வேதம் | மறை |
| ★ ஜானவாசம் | மாப்பிளை அழைப்பு |

தேர்வுக்குறிப்புகள்

| | |
|---|---|
| ★ அபிஷேகம் | திருமுழுக்கு |
| ★ யாத்திரை | புனிதப் பயணம் |
| ★ ஆயுள் | வாழ்நாள் |
| ★ தீர்த்தம் | புனித நீர் |
| ★ ஜனநாயகம் | குடியாட்சி |
| ★ நதி | ஆறு |
| ★ சந்தா | கட்டணம் |
| ★ பிரதிநிதி | சார்பாளர் |
| ★ பத்திரம் | ஆவணம் |
| ★ மத்தியாணம் | நண்பகல் |
| ★ சிபாரிசு | பரிந்துரை |
| ★ பரீட்சை | தேர்வு |
| ★ பிரார்த்தனை | தொழுகை |
| ★ சென்ட்ரல் கவர்ன்மெண்ட் | நடுவண் அரசு |
| ★ தாலுகா ஆபிஸ் | வட்டாட்சியர் அலுவலகம் |

## 5. ஒருமை பன்மை தவறை நீக்கி எழுதுதல்

இது ஒரு எளிய வகை வினா, தேர்வரின் தமிழறிவை சோதிக்கும் வண்ணம், வாக்கியங்களில் வரும் ஒருமை/பன்மை (singular/flural) வேறுபாடுகளை கண்டறியும் திறனை சோதிக்கும் வண்ணம் இருக்கும்.

**உதாரணம் : ஒருமை/பன்மை பிழைகளைக் கண்டறிக ?**

- ★ அ.தமிழ்நாடு அணி போட்டியில் வென்றனர்
- ★ ஆ.தமிழ்நாடு அணி போட்டியில் வென்றார்கள்
- ★ இ.தமிழ்நாடு அணி போட்டியில் வென்றது
- ★ ஈ.தமிழ்நாடு அணி போட்டியில் வென்றன.

விடை : இ.தமிழ்நாடு அணி போட்டியில் வென்றது (தமிழ்நாடு என்ற பெயர் ஒருமையில் வந்ததால் வென்றது என்பது ஒருமையிலேயே வர வேண்டும்.)

**ஒருமை - பன்மை பிழைகளை நீக்குதல்**

- ★ வினா: குயில் மயில் ஒன்றாய் இருந்தன .
- ★ விடை: குயிலும் மயிலும் ஒன்றாய் இருந்தன
- ★ வினா: தோட்டத்தில் மாடுகள் மேய்கிறது .
- ★ விடை: தோட்டத்தில் மாடுகள் மேய்கின்றன
- ★ வினா: அன்று பார்த்தப் பெண் அவள் அல்ல .

- விடை: அன்று பார்த்தப் பெண் அவள் அல்லள்
- வினா: தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றன .
- விடை: தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றது
- வினா: ஐந்தாண்டு திட்டங்கள் ஏற்கப் பெற்றது .
- விடை: ஐந்தாண்டு திட்டங்கள் ஏற்கப் பெற்றன
- வினா: மரத்தில் பழங்கள் பழுத்தன .
- விடை: மரங்களில் பழங்கள் பழுத்தன
- வினா: சில வீரர்கள் கீழே விழுந்தனர் .
- விடை: வீரர்கள் சிலர் கீழே விழுந்தனர்
- வினா: பள்ளியில் குழந்தைகள் பாடம் படிக்கிறார்கள் .
- விடை: பள்ளியில் குழந்தைகள் பாடங்களைப் படிக்கிறார்கள்
- வினா: குதிரை வேகமாக ஓடின
- விடை: குதிரைகள் வேகமாக ஓடின
- வினா: முருகன் கவிதை எழுதுகிறார்
- விடை: முருகன் கவிதை எழுதுகிறான்
- வினா: அணை உடைகின்றன
- விடை: அணைகள் உடைந்தன
- வினா: மான்கள் காட்டில் மேய்ந்தது
- விடை: மான்கள் காட்டில் மேய்ந்தன
- வினா: புலிகள் வந்தது, எருதுகள் ஓடியது
- விடை: புலி வந்தது, எருதுகள் ஓடின
- வினா: தமிழர் திரைகடல் ஓடி திரவியம் தேடினார்
- விடை: தமிழர் திரைகடல் ஓடி திரவியம் தேடினர்.
- வினா: கோயிலில் திருமுழுக்கும் கூட்டு வழிபாடும் நடந்தது
- விடை: கோயிலில் திருமுழுக்கும் கூட்டு வழிபாடும் நடந்தன.

## 7. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்

| ஆங்கிலச் சொற்கள் | தமிழ் சொற்கள் | ஆங்கிலச் சொற்கள் | தமிழ் சொற்கள் |
|---|---|---|---|
| Accident | நேர்ச்சி | ஃபிளாஷ் நியூஸ் | சிறப்புச் செய்தி |
| Acknowledgement Card | ஒப்புகை அட்டை | ஃபுட் போர்டு | படிக்கட்டு |
| Admission | சேர்க்கை | ஃபேக்நியூஸ் | பொய்ச்செய்தி |
| Agency | முகவாண்மை | ஃபேன் | மின்விசிறி |
| Agent | முகவர் | ஃபோலியோஎண் | இதழ் எண் |
| Allergy | ஒவ்வாமை | அகாதெமி | கழகம் |
| Assurance | காப்பீடு | அசெம்பிளி | சட்டசபை |
| Attendance Register | வருகைப் பதிவேடு | அட்டெண்டன்ஸ் | வருகைப்பதிவு |
| Attestation | சான்றொப்பம் | அட்மிஷன் | சேர்க்கை |
| Automobile | தானியங்கி | அட்லஸ் | நிலப்படச்சுவடி |
| Bench | விசிப்பலகை | அட்லஸ் | நிலப்படத்தொகுப்பு |
| Binding | கட்டமைப்பு | அடாப்டர் | பொருத்தி |
| Bona fide certificate | ஆளறி சான்றிதழ் | அப்பாயின்ட் மென்ட் | பணிஅமர்த்தல் |
| Brass | பித்தளை | அஸ்ட்ரோநோமி | வானநூல் |
| Bronze | வெண்கலம் | அஸ்தெடிக் | இயற்கை வனப்பு |
| Bio Technology | உயிரி தொழில்நுட்பவியல் | ஆக்ஸிடென்ட் | நேர்ச்சி |
| Casting | வார்ப்பு | ஆட்டோகிராப் | வாழ்த்தொப்பம் |
| Central Government | நடுவண் அரசு | ஆட்டோமொபைல் | தானியங்கி |
| chalk piece | சுண்ணக்கட்டி | ஆடியோகேசட் | ஒலிப்பேழை |
| Champion | வாகை சூடி | ஆபிஸ் | அலுவலகம் |
| Code | குறிப்புகள் | ஆயில் ஸ்டோர் | எண்ணெய்ப் பண்டகம் |
| Company | குழுமம் | ஆர்டர் ஆஃப் நேச்சர் | இயற்கை ஒழுங்கு |
| Compound | கூட்டுப் பொருட்கள் | ஆஸ்பத்திரி | மருத்துவமனை |
| Compounder | மருந்தாளுநர் | இண்டர்வ்யூ | நேர்காணல் |
| Deposit | இட்டு வைப்பு | இண்டஸ்ட்ரி | தொழிலகம் |
| Design | வடிவமைப்பு | இம்ப்ரூ | பெருக்கு |
| Document | ஆவணம் | இன்டர்நெட் | இணையம் |
| E-Mail | மின்னஞ்சல் | எடிட்டோரியல் | தலையங்கம் |
| Ever silver | நிலைவெள்ளி | எவர்சில்வர் | நிலைவெள்ளி |
| Evidence Act | சட்ட ஆவணங்கள் | என்வொரான்மென்ட் | சுற்றுச்சூழல் |
| Fax | தொலை நகலி | எஸ்டிமேட் | மதிப்பீடு |
| Fiction | புனைக்கதை | ஏரோப்ளேன் | வானூர்தி |
| Hardness | கடினத்தன்மை | ஏஜென்சி | முகவாண்மை |
| Insurance | ஈட்டுறுதி | ஏஜென்ட் | முகவர் |
| Interview | நேர்காணல் | ஐடென்டிபிகேஷன் சர்டிபிகேட் | ஆளறி சான்றிதழ் |

| | | | |
|---|---|---|---|
| Inorganic | கனிமம் | ஐஸ்- கிரீம் | பனிக்குழைவு |
| Irregular | ஒழுங்கற்ற | ஐஸ்வாட்டர் | குளிர்நீர் |
| Key | திறவுகோல் | ஒன்வே | ஒருவழிப்பாதை |
| Keyboard | விசைப்பலகை | ஓட்டல் | உணவகம் |
| Knight hood | வீரத்திருத்தகை | கண்ட்ரி | நாடு |
| Laptop | மடிக்கணினி | கண்ட்ரோல் | கட்டுப்பாடு |
| License | உரிமம் | கம்ப்யூட்டர் | கணினி |
| Lift | மின்தூக்கி | கம்பெனி | குழுமம் |
| Lorry | சரக்குந்து | கரண்ட் | மின்சாரம் |
| Mammal | பாலூட்டி | கரஸ்பாண்டேன்ட் | தாளாளர் |
| Metal | உலோகம் | கலெக்டர் | சேகரிப்பவர் |
| Missile | ஏவுகணை | கவர் | மறை உறை |
| Mortuary | பிணக்கிடங்கு | கவுன்சில் | குழு |
| Network | வலையகம் | கவுன்சில் | மன்றம் |
| Organic | கரிமம் | காண்ட்ரக்ட் | ஒப்பந்தம் |
| Offspring | சந்ததி | காபி பார் | குளம்பியகம் |
| Passport | கடவுச்சீட்டு | காம்பாக்ட் டிஸ்க் | வட்டத்தகடு |
| Password | கடவுச் சொல் | கார் | மகிழுந்து |
| Permanent | நிரந்தரம் | காலேஜ் | கல்லூரி |
| Photo Graph | நிழற்படம் | காஸ்ட்யூம் | உடை |
| Photocopy (Xerox) | ஒளிப்படி | கிரீடம் | மணிமுடி |
| Planet | கோள் | கிரீன் ப்ரூ.ஃ | திருத்தப்படாத அச்சுப்படி |
| Plastic | நெகிழி | கிரீன் ரூம் | பாசறை |
| Print out | அச்சுப் படி | கிரைண்டர் | அரவை இயந்திரம் |
| Probationary Period | தகுதிகாண் பருவம் | கிளாசிக்கல் லாங்குவேஜ் | உயர்தனிச் செம்மொழி |
| Proposal | கருத்துரு | கிளாத் ஸ்டோர்ஸ் | துணியங்காடி |
| Receiver | அலை வாங்கி | கூல் டிரிங்ஸ் | குளிர்பருகு நீர் |
| Radio wave | வானொலி அலை | கூல்ட்ரிங்க்ஸ் | குளிர்பானம் |
| Remote Sensing | தொலை உணர்தல் | கெலிகாப்டர் | உலங்கு வானூர்தி |
| Research Centre | ஆராய்ச்சி நிலையம் | கெஸ்ட் கவுஸ் | விருந்தகம் |
| Satellite | செயற்கைக்கோள் | கேபிள் | கம்பிவடம் |
| Scanning | வரிக் கண்ணோட்டம் | கேரண்டி | பொறுப்புறுதி |
| Search Engine | தேடுபொறி | கோட்டல் | உணவகம் |
| Substantive Law | சான்றுச் சட்டம் | கோர்ட் | மன்றம் |
| Succession Act | உரிமைச் சட்டங்கள் | சக்சஸ் | வெற்றி |
| TeaStall | தேனீர் அங்காடி | சட்ஜ்மெண்ட் | தீர்ப்பு |
| Technical | தொழில்நுட்பம் | சயின்ஸ் | அறிவியல் |
| Tele Print | தொலை அச்சு | சர்ஜரி | அறுவைச் சிகிச்சை |

| | | | |
|---|---|---|---|
| Telex | தொலை வரி | சாக்பீஸ | சுன்னக்கட்டி |
| Temporary | தற்காலிகம் | சாம்பியன் | வாகை சூடி |
| Temperature | வெப்ப நிலை | சிட்டி | நகரம் |
| Traitor | துரோகி | சிலிண்டர் | உருளை |
| Ultra Sound Scanning | மீயொலி வரிக் கண்ணோட்டம் | சினிமா | திரைப்படம் |
| Visa | நுழைவு இசைவு | சுவிட்சு | பொத்தான் |
| Visiting card | காண்புச்சீட்டு | சூப்பர் | சிறப்பு |
| Writs | வாரிசுரிமைச் சட்டம் | செக் | காசோலை |
| | | செல்போன் | கைப்பேசி |
| ட்ராவலர்ஸ் பங்களா | பயணியர் மாளிகை | சென்ட்ரல் கவர்ன்மென்ட் | நடுவன் அரசு |
| டாக்டர் | மருத்துவர் | சேர் | நாற்காலி |
| டிக்கெட் | பயணச்சீட்டு | சேலான் | செலுத்துச்சீட்டு |
| டிசிப்ளின் | ஒழுக்கம் | சைக்கிள் | மிதிவண்டி |
| டிசைன் | வடிவமைப்பு | | |
| டிபன் | சிற்றுண்டி | தம்ளர் | குவளை |
| டிபார்ட்மெண்டல் ஸ்டோர் | பல்பொருள் அங்காடி | தியேட்டர் | திரை அரங்கு |
| டிமாண்ட் டிராப்ட் | வரைவோலை | தெர்மா மீட்டர் | வெப்பமானி |
| டிவி | தொலைக்காட்சி | நம்பர் | எண் |
| டிஸ்க் | குறுந்தகடு | நாலெட்ஜ் | அறிவு |
| டீ | தேநீர் | நிபுணர் | வல்லுநர் |
| டீ பார்ட்டி | தேநீர் விருந்து | நோட்புக் | குறிப்பேடு |
| டீ ஸ்டால் | தேநீர் அங்காடி | பயாலாஜி | உயிரியல் |
| டீப் போர் வெல் | ஆழ்துளைக் கிணறு | பர்னிச்சர் | அறைக்கலன்கள் |
| டெட்லைன் | குறித்தகாலம் | பர்ஸ்ட் கிளாஸ் | முதல் வகுப்பு |
| டெய்லி | அன்றாடம் | ப்ரீப்கேஸ் | குறும்பெட்டி |
| டெலஸ்கோப் | தொலைநோக்கி | ப்ரீவ் கேஸ் | குறும்பெட்டி |
| டெலிபோன் | தொலைபேசி | ப்ரொஜெக்டர் | படவீழ்த்தி |
| டைப்பிஸ்ட | தட்டச்சர் | பல்பு | மின்குமிழ் |
| டைப்ரைட்டர் | தட்டச்சுப்பொறி | பஸ் | பேருந்து |
| டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் | தட்டெழுத்துப் பயிலகம் | பஸ் ஸ்டாண்டு | பேருந்து நிலையம் |
| டைரி | நாட்குறிப்பு | பஸ் ஸ்டாப் | பேருந்து நிறுத்தம் |
| | | பாய்லர் | கொதிகலன் |
| மதர்லேண்ட் | தாயகம் | பார்லிமென்ட் | நாடாளுமன்றம் |
| மார்க்கெட் | அங்காடி | பால்கனி | முகப்பு மாடம் |
| மீட்டிங் | கூட்டம் | பாஸ்போர்ட் | கடவுச்சீட்டு |
| மெஸ் | உணவகம் | பிக்னிக் | சிற்றுலா |

| | | | |
|---|---|---|---|
| மேஜிக் | செப்பிடுவித்தை | பிரிசன் | சிறைச்சாலை |
| மைக் | ஒலிவாங்கி | பிரிட்ஜ் | குளிர்சாதனப்பெட்டி |
| மைக்ராஸ்கோப் | நுண்ணோக்கி | பிரிண்டிங் பிரஸ் | அச்சகம் |
| மோட்டல் | பயணவழி உணவகம் | பிளாட்பாரம் | நடைபாதை |
| யுனிவர்சிட்டி | பல்கலைகழகம் | பிளாஸ்டிக் | நெகிழி |
| ரப்பர் | தேய்ப்பம் | பிளே கிரவுண்ட் | விளையாட்டுத்திடல் |
| ரயில் | தொடர்வண்டி | பிளைட் | விமானம் |
| ராக்கெட் | ஏவுகணை | பீரோ | இழுப்பறை |
| ரிப்பைரர் | பழுதுபார்ப்பவர் | புரபோசல் | கருத்துரு |
| ரிவர் | நதி | புரோட்டோகால் | மரபுத் தகவு |
| ரிஜிஸ்டர் போஸ்ட் | பதிவு அஞ்சல் | புரோநோட் | ஒப்புச்சீட்டு |
| ரூம் ரெண்ட் | குடிக்கூலி | புல்லட்டின் | சிறப்புச் செய்தி இதழ் |
| ரெக்கார்ட் | ஆவணம் | பெல்ட் | அரைக்கச்சு |
| ரேடியோ | வானொலி | பேக்கர் | ரொட்டி சுடுபவர் |
| ரோடு | சாலை | பேக்கிங் சார்ஜ் | கட்டுமானத்தொகை |
| லாண்டரி | வெளுப்பகம் | பேங்க் | வங்கி |
| லாரி | சரக்குந்து | பேட்மிட்டன் | பூப்பந்து |
| லிவ்வர் | கல்லீரல் | பேரண்ட்ஸ் | பெற்றோர் |
| லீவ்லெட்டர் | விடுமுறை கடிதம் | பேனா | தூவல் |
| லெமினே~ன் | மென்தகடு | பைக் | விசையுந்து |
| லே அவுட் | செய்தித்தாள் வடிவமைப்பு | பைல் | கோப்பு |
| லேட் | காலம் கடந்து | போலீஸ் ஸ்டேசன் | காவல் நிலையம் |
| லைசென்ஸ் | உரிமம் | போனஸ் | மகிழ்வூதியம் |
| லைட் | விளக்கு | போஸ்ட் ஆபிஸ் | அஞ்சல் நிலையம் |
| விசிட்டிங்கார்டு | காண்டிச்சீட்டு | | |
| விஞ்ஞானம் | அறிவியல் | ஜங்ஷன் | கூடல் |
| வீடியோகேசட் | ஒளிப்பேழை | ஜட்ஜ் | நீதிபதி |
| வெரிபிகே~ன் | சரிபார்த்தல் | ஜனங்கள் | மக்கள் |
| வொர்க்~hப் | பணிமனை | ஜீப் | கரட்டுந்து |
| வோல்டு | உலகம் | ஜெராக்ஸ் | ஒளிப்படி |
| ஸ்டேசனரி சாப் | எழுது பொருள் அங்காடி | ஸ்கூல் | பள்ளி |
| ஸ்டேட் கவர்ன்மென்ட் | மாநில அரசு | ஸ்டேடியம் | விளையாட்டரங்கம் |
| ஸ்டோர் | பண்டகம் | ஸ்நாக்ஸ் | சிற்றுணவு |
| ஸ்பீக்கர் | பேசுபவர் | ஸ்பெ~ல் | தனி |
| ஹெலிகாப்டர் | சுருள் வானூர்தி | ஹேர்கட்டிங் சலூன் | முடித்திருத்தகம் |

## 8. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்

விளக்கம் :

ஒலி வேறுபாடறிந்து பொருளைத் தேர்வு செய்தல் என்பது கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளின் பொருளை புரிந்து அதற்கான சரியான விடையை தேர்ந்தெடுத்தல் ஆகும்.

**ரகர-றகர, லகர, ளகர, னகர, ணகர வேறுபாடுகள் பின்வருமாறு :**

**னகர, ணகர சொற்களின் பொருள் வேறுபாடு**

| | |
|---|---|
| கன்னன் - கர்ணன் | கண்ணன்- திருமால் |
| மன்னன் - அரசன் | மண்ணன்- மனிதன் |
| பனி - குளிர் | பணி - வேலை |
| ஊன் - இறைச்சி | ஊண் - உணவு |
| மன் - நிலையான | மண் - தரை |
| என் - என்னுடையது | எண் - எண்ணிக்கை |
| தனி - தனிமை | தணி - குளிர்மை |
| கனி - பழம் | கணி - கணித்தல் |
| அரன் - ஈஸ்வரன் | அரண் - பாதுகாப்பு, அரண்மனை |
| மனம் - நெஞ்சம் | மணம் - வாசனை |
| கான் - கானகம், காடு | காண் - பார் |
| கனம் - பாரம் | கணம் - கூட்டம், நொடி |
| வன்மை - திடமான, உறுதியான | வண்மை - ஈகை குணம் |
| நுனி - முனை | நுணி - நுட்பம் |
| சுனை - நிரூற்று | சுணை - முட்கள் |
| கன்னி - குமரிப்பெண் | கண்ணி - மாலை |
| அனை - அத்தனை | அணை-நீர்த்தேக்கம் |
| மனை - வீடு, வீட்டிடம் | மணை - அமரும் பலகை |
| ஆனி - மாதம் | ஆணி - சுவற்றில் அடிப்பது |
| கனை - அம்பு | கணை - பேழை |
| ஆனை - யானை | ஆணை - கட்டளை |
| குனி - குனிதல் | குணி - ஆலோசித்தல் |

தேர்வுக்குறிப்புகள்

## ரகர-றகர பொருள் வேறுபாடுகள்

| | |
|---|---|
| சீரிய - சிறப்பான | சீறிய - வெகுண்ட |
| தரி - அணிந்துகொள் | தறி - வெட்டு |
| இரு - இருத்தல் | இறு - முறிதல் |
| பரி - குதிரை | பறி - பிடுங்கிக்கொள் |
| குரம் - நகரம் | குறம் - பக்கம் |
| அரம் - கருவி | அறம் - ஈகை |
| அரை - பாதி, இடுப்பு | அறை - வீட்டு அறை |
| இறை - தீனி | இறை - கடவுள், நீர் இறைத்தல் |
| உரு - வடிவம் | உறு - மிகுதி |
| அரவு - பாம்பு | அறவு - விலக்கம் |
| உரல் - மாவு இடிக்கப்பயன்படுவது | உறல் - பெருத்த துன்பம் |
| அரி - வெட்டு | அறி - தெரிந்துகொள் |
| பொரி - உண்ணும் பொரி | பொறி - இயந்திரம் |
| உரி - உரித்தல் | உறி - உறி அடித்தல் |
| குரை - நாய் குரைத்தல் | குறை - குறைத்தல் |
| திரை - அலை | திறை - கப்பம் |
| கரை - ஓரம் | கறை - அழுக்கு |
| துறவு - துறத்தல் | துரவு - கேணி |
| பறவை - பறக்கும் பறவை | பரவை - கடல் |
| இரை - உணவு | இறை - கடவுள் |
| விறல் - வெற்றி | விரல் - விரல் |
| மறை - வேதம் | மரை - மான் |
| இரும்பு - உலோகம் | இறும்பு - புதர் |
| ஏரி - நீர் தேக்கம் | ஏறி - ஏறுதல் |
| கருப்பு - பஞ்சம் | கறுப்பு-நிறம் |
| குரம் - நரகம் | குறம்-பக்கம் |
| பெரு - பருமன் | பெறு -பெறுதல் |
| குரவர் - சமயக்குரவர் | குறவர்-மலைசாதியினர் |
| ஒரு - ஒன்று | ஒறு - தண்டித்தல் |
| அரு - அருகாமை | அறு - அறுத்தல், புல்வகை |
| பொறுத்து - தாமதித்து | பொருத்து- சேர்த்து |
| அரிவை - பெண் வகை | அறிவை - அறிந்துகொள் |

| | |
|---|---|
| பொரு - போரிடு | பொறு - பொறுத்துக்கொள் |
| தெரி - சிதறுதல் | தெறி - நொறுங்குதல் |
| கூரை - வீட்டின் முகடு | கூறை - புடவை |
| உரை - பேச்சு | உறை - உறைவிடம், மூடி |
| நெரி - நசுக்குதல், உடைத்தல் | நெறி - நீதிநெறி, |
| புரம் - காப்பு, நகர் | புறம் - வெளி, பக்கம் |
| மருகி - மருமகள் | மறுகி - தாங்கி |
| செரு - போர் | செறு - திணி, வயல் |
| சீரடி - சிறப்பான அடி | சீறடி - சிறிய அடி |
| நரை - தலை நரை | நறை - தேன் |
| பாரை - கடப்பாரை | பாறை - கற்பாறை |

## ளகர-லகரப் பொருள் வேறுபாடு

| | |
|---|---|
| அளகு - காட்டுக்கோழி | அலகு - அளவைக்கூறு |
| அள் - கூர்மை, காது | அல் - இரவு |
| அளை - குகை, கல் | அலை - திரி, கடல் அலை |
| இளை - மெலிதல் | இலை - மரத்தின் இலை |
| உளை - மயிர் | உலை - நீர் உலை |
| களம் - போர்க்களம் | கலம் -கப்பல் |
| கள் - தேன், பானம் | கல் - பாறை, கல்வி |
| காளை - எருது | காலை - பொழுது |
| குளவி - பூச்சி | குலவி - குலவுதல் |
| குளம் - நீர்நிலை | குலம் - இனம் |
| கொல் - கொலை | கொள் - பெறுதல் |
| கூளி - பூதம் | கூலி-சம்பளம் |
| தோள் - உறுப்பு | தோல் - சருமம் |
| பள்ளி - பாடசாலை | பல்லி-விலங்கு |
| வாளி - நீர் இறைக்கப்பயன்படுவது | வாலி - சுக்ரீவனின் தமயன் |
| வாள் - கருவி | வால் - விலங்கின் வால் |
| வேள் - இறைவன் | வேல் - கருவி |
| வளி - காற்று | வலி - வேதனை |
| விளை - விளைச்சல் | விலை - மதிப்பு |
| எள் - பயிர்வகை | எல் - சூரியன், வெளிச்சம் |
| தாள் - பாதம் | தால் - நாக்கு |

| | |
|---|---|
| கொள்ளி - நெருப்பு | கொல்லி - ஒருமலை |
| நீளம் - நெடுமையாக | நீலம்-நிறம் |
| விள் - விடுதல் | வில் - கருவி |
| கோள் - கிரகம் | கோல் - கொம்பு |
| நால் - நான்கு | நாள் - தினம் |
| மால் - திருமால் | மாள் - இறத்தல் |

| லகர | ளகர | ழகர |
|---|---|---|
| அலகு - பறவை மூக்கு | அளகு - பெண்பறவை | அழகு - வனப்பு |
| அலி - பேடி | அளி - கொடு | அழி - கெடு |
| அலை - நீரலை | அளை - புற்று | ஆழை - கூப்பிடு |
| ஆல் - ஆலமரம் | ஆள் - ஒருமனிதன் | ஆழ் - மூழ்கு, அமுக்கு |
| இலை - தழை | இளை - மெளி | இழை - நூல் இழை |
| உலவு - நட | உளவு - ஒற்றன் | உழவு - தொழில் |
| ஒலி - ஓசை | ஒளி - வெளிச்சம் | ஒழி - நீக்கு |
| உலை - கொள்ளர் உலை | உளை - பிடரிமயிர் | உழை - பயிற்தொழில் |
| கலை - ஓவியம், ஆடை, கல்வி | களை - நீக்கு, அழகு, பயிரில் முளைப்பது | கழை - மூங்கில் |
| கலி - துன்பம் | களி - மகிழ்சி | கழி - மிகுதி, நீக்கு |
| கிலி - பயம் | கிளி - பறடிவ | கிழி - கிழித்தல் |
| சூல் - கற்பம் | சூள் - சபதம் | சூழ் - திட்டமிடு |
| தால் - நாக்கு, தாலாட்டு | தாள் - பாதம் | தாழ் - பணி |
| வலி - வளிமை, உடல் வளி | வளி - காற்று | வழி - பாதை |
| பாலை - தினை | பாளை - தென்னம்பாளை | பாழை - துன்புறுவோர் |
| ஆலி - மழைதுளி | ஆளி - சிங்கம் | ஆழி - கடல், கடல் மோதிரம் |
| நாலி - முத்து | நாளி - நாய் | நாழி - நாழிகை |
| வாலி - மன்னம் | வாளி - அம்பு | வாழி - வாழ்க |
| வால் - விலங்குஉறுப்பு | வாள் - அறம், கருவி | வாழ் - வாழ்தல் |

| | | |
|---|---|---|
| வாலை - இளம்பெண் வாலினை | வாளை - மீன் | வாழை - செடி |
| மூலை - கோடியில் சந்து | மூளை - மண்டை ஓட்டுமூளை | மூழை - துடுப்பு |
| தலை - ஓர் உறுப்பு | தளை - கட்டு, விளங்கு, அடிமை தளை | தழை - இளை |
| குலவி - கொஞ்சு, குலவி | குளவி - வண்டு | குழவி - குழந்தை |
| தாலி - மாங்கல்யம் | தாளி - பனை, கொடி, மருந்துசெடிவகை | தாழி - தாழ்ந்த அகன்ற குதிர் |
| பொலி - விலங்கு, அழகு | பொளி - கொத்து | பொழி - ஊற்று |
| விலா - ஏலும்பு | விளா - மரவகை | விழா - திரவிழா, பண்டிகை |
| விலை - விற்க, மதிப்பு, கிரயதொகை | விளை - விளைவு, அனுபவம் | விழை - விருப்பம், விரும்பு |
| வேலம் - ஒருவகை மரம் | வேளம் - சிறைகளம் | வேழம் - யானை, ஆனை |
| கலம் - அளவு | களம் - போர் நடக்கும் இடம் | |
| கல் - செங்கல் | கள் - மது | |
| காலை - பொழுது | காளை - எருது | |
| குலம் - சாதி | குலம் - நீர் நிலை,குட்டை | |
| கொல் - கொன்றுவிடு | கொள் - தெரு | |
| கோல் - மம்வு | கோள் - கோள்சொல்லுதல், கிரகங்கள் | |
| தலலை - பாத்திரம் | தவளை - உயிரினம் இருவாழ்வி | |
| புல் - பயிர் | புள் - பறவை | |
| வேல் - முருகன் வேல் | வேள் - வேள்வி, யாகம் | |
| வெல்லம் - இனிப்பு | வெள்ளம் - நீர் | |
| வேலை- பணி | வேளை - பொழுது | |
| அகலம் - விரிவு | அகளம் - தாழி, குதிர் | |
| நால் - நான்கு | நாள் - கிழமை | |
| நீலம் - நிரம் | நீளம் - அளவு,நெடு, நீட்டம், | |
| எலும்பு - என்பு விலா | | எழும்பு - எழுந்திரு |

| | | |
|---|---|---|
| குலை - பாக்கு குலை | | குழை -<br>குழைத்தல், கலத்தல் |
| வலு - வலிமை | | வழு - பிழை |
| பால் - ஆண்பால்<br>பெண்பால், உணவு | | பாழ் - வரியஇடம் ஏழை<br>எளிய<br>இடம், வீணாகிபோனது |
| | குளி - மூழ்கு | குழி - ஆழம், பல்லம் |
| | சுளி - முகசுளித்தல் | சுழி - வளை |
| | கிளவி - சொல் | கிழவி - மூதாட்டி |
| | விளி - அழை | விழி - கண்திற |
| | தோளன் - தோளை உடையன் | தோழன் - நண்பன் |

தேர்வுக்குறிப்புகள்

## 9. ஓரெழுத்து ஒருமொழி உரிய பொருளைக் கண்டறிதல்

தமிழில் உள்ள 256 எழுத்துக்களில் ஒரேழுத்து ஒரு மொழி எண்ணிக்கை 42 ஆகும். 42 எழுத்துக்களுக்கு தனிப்பெயர்கள் உண்டு.

*"உயிர், மவில் ஆறும் த, ப, நவில் ஐந்தும்*
*க, வ, சவில் நாலும் யவ்வில் ஒன்றும்*
*ஆகும் நெடில் நொ, து ஆம்குறில் இரண்டோடு*
*ஓரெழுத்து இயல்பதம் ஆறுஏழ் சிறப்பின"* - **நன்னூல் 129**

- ★ உயிர் வருக்கம், ம - வருக்கம் ஒவ்வொன்றிலும் ஆறும்,
- ★ த, ப, ந வருக்கங்கள் ஒவ்வொன்றிலும் ஐந்தும்,
- ★ க, வ, ச வருக்கங்கள் ஒவ்வொன்றிலும் நான்கும்,
- ★ ய - கர வருக்கத்தில் ஒன்றும்

ஆக நெட்டெழுத்துகளால் ஆகிய சொற்கள் நாற்பது.

- ★ நொ, து என்னும் குறிலெழுத்துகளால் ஆகிய சொற்கள் இரண்டு.

ஆக மொத்தம் ஓரெழுத்துகளால் ஆகிய சொற்கள் **நாற்பத்திரண்டு ஆகும்**.

| | |
|---|---|
| ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ | உயிர் வருக்கத்தில் ஆறு |
| மா, மீ, மூ, மை,மோ, மே | மகர வருக்கத்தில் ஆறு |
| தா, தீ, தூ, தே, தை | தகர வருக்கத்தில் ஐந்து |
| பா, பூ, பே, பை, போ | பகர வருக்கத்தில் ஐந்து |
| நா, நீ, நே , நை, நோ | நகர வருக்கத்தில் ஐந்து |
| கா,கூ, கை, கோ | ககர வருக்கத்தில் நான்கு |
| வா, வீ, வை, வெள | வகர வருக்கத்தில் நான்கு |
| சா, சீ, சே, சோ | சகர வருக்கத்தில் நான்கு |
| யா | யகர வருக்கத்தில் ஒன்று |
| நொ, து | தனிக் குறில் பதம் இரண்டு |

தேர்வுக்குறிப்புகள்

## ஓரெழுத்து சொற்களும் அவற்றின் பொருளும்

### உயிர் இனம் (6) - ஆ, ஈ, ஊ, ஏ,ஐ, ஓ

1. ஆ - பசு
2. ஈ - பறக்கும் பூச்சி, கொடு
3. ஊ - இறைச்சி
4. ஏ - அம்பு
5. ஐ - அழகு, தலைவன், வியப்பு
6. ஓ - வியப்பு,வினா, மதகுநீர் தாங்கும் பலகை

### 'ம்' இனம் (6) - மா, மீ, மு, மே, மை, மோ

1. மா - பெரிய, சிறந்த உயர்ந்த, மாமரம், அழகு, மேன்மை, விலங்கு
2. மீ - மேலே, உயர்ச்சி, வான்
3. மு - மூப்பு, முதுமை
4. மே - மேன்மை,அன்பு
5. மை - கண்மை (கருமை), அஞ்சனம்
6. மோ - முகர்தல், முகத்தல்

### 'த்' இனம் (5) - தா, தீ, தூ, தே, தை

1. தா- கொடு,கேட்பது
2. தீ- நெருப்பு, தீமை
3. தூ - வெண்மை, தூய்மை
4. தே - கடவுள்
5. தை - தமிழ்மாதம், தைத்தல்

### 'த்' இனம் (1) - து - குறிலெழுத்துகளால் ஆகிய சொல்

1. து - கெடு,பிரிவு, உண்

### 'ப்' இனம் (5) - பா, பூ, பே, பை, போ

1. பா - பாட்டு, பாடல்
2. பூ - மலர்,புவி
3. பே ; நுரை, மேகம்
4. பை - இளமை,கைப்பை
5. போ - செல்

**'ந்' இனம் (5) - நா, நீ,நே, நை, நோ**

1. நா - நாக்கு, நாவு
2. நீ - முன்னிலை ஒருமை, நீக்குதல்
3. நே - அன்பு
4. நை - வருந்து, இழிவு
5. நோ - வறுமை

**'ந்' இனம் (1) - நொ- குறிலெழுத்துகளால் ஆகிய சொல்**

1. நொ - துன்பம், நோய்

**'க்' இனம் (4) - கா, கூ, கை, கோ**

1. கா - காத்தல், சோலை
2. கூ - பூமி
3. கை - உறுப்பு,கரம், ஒழுக்கம்
4. கோ - வேந்தன்,அரசன்

**'ச்' இனம் (4) - சா, சீ, சே, சோ**

1. சா - மரணம்,பேய், இறந்துபோ
2. சீ - இகழ்ச்சி
3. சே - எருது, உயர்வு
4. சோ - மதில், அரண்

**'வ்' இனம் (4) - வா, வீ, வை, வெள**

1. வா - வருக, அழைத்தல்
2. வீ - மலர்
3. வை - வைத்தல், புல்
4. வெள - வவ்வுதல், கெளவுதல், கவர்

**'ய்' இனம் (1) - யா**

1. யா- ஒரு வகை மரம், யாவை, அகலம்

தேர்வுக்குறிப்புகள்

## நாம் பயன்படுத்தும் ஓரெழுத்துச் சொற்கள்

- பூ - என்பது ஓரெழுத்து ஒரு மொழி.
- கா - என்பதும் ஓரெழுத்து ஒரு மொழி.

இவை இரண்டையும் இணைத்துப் **பூங்கா** எனக் கலைச்சொல் ஆக்கி வைத்துள்ளனர்.

- யா - என்பது வினா.

யாது, யாவர், யாவன், யாவள், யாங்கு, யாண்டு, யார், யாவை என்றெல்லாம் வினாவுவதற்கு முன் வந்து நிற்கும் எழுத்து' 'யா' தானே!

ஆ, மா, நீ, மீ, பீ, ஊ, சே, தே இன்னவாறான ஓரெழுத்து ஒரு மொழிகளும் உள்ளன. பூங்கா இணைந்தது போல ஆ, மா என்பவை இணைந்து ஆமா என்னும் கலைச்சொல் வடிவம் கொண்டமை பண்டைக் காலத்திலேயே உண்டு. காட்டுப் பசுவுக்கு 'ஆமா' என்று பெயர்.

- மா - என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று.

நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை **மாநாடு** என்கிறோம். பல குறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை **மாநிலம்** என்கிறோம். உலகப் பெரும் பரப்பையும் இயக்கத்தையும் சுட்ட **மாஞாலம்** என்கிறோம். இவ்வாறெல்லாம் இயல்பாக மா என்னும் ஓரெழுத்து ஒருமொழி மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் திகழ்கின்றது. மாநிறம் என மாந்தளிர் நிறத்தை ஒப்புமை காட்டி உரைப்பது பெருவழக்கு.

- மா - என்பது விலங்கையும் குறிக்கும்.

அரிமா, பரிமா, நரிமா, வரிமா, கரிமா என்றெல்லாம் வந்து விலங்கினப் பெயராகி நிற்கின்றது.

- ஈ - என்னும் பொதுப் பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது.

மாட்டு ஈ, தேன் ஈ எனப் பகுத்து வழங்கும் வழக்கம் உள்ளது. ஈ என்பது ஈக என்னும் பொருளில் வழங்குதல் வெளிப்படை. ஈ என்று பல்லைக் காட்டாதே என்று அறிவுரை கூறுவதும் உண்டு.

போ, வா, நீ, சூ, சே, சை, சோ என்பவை எல்லாம் இக்காலத்தில் அனைவரும் வழங்கும் சொற்களே.

- ★ ஆன் என்பது ஆ ஆகியது;
- ★ மான் என்பது மா ஆகியது;
- ★ கோன் என்பது கோ ஆகியது;
- ★ தேன் என்பது தே ஆகியது;
- ★ பேய் என்பது பே ஆகியது.

இவையெல்லாம் காலவெள்ளத்தில் கரைந்து தேய்ந்தவை.

- ★ **ஏய்** என்பது **ஏ** என வழக்கில் ஊன்றிவிட்டது.

எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏய் என்பது என்னோடு கூடு பொருந்து, சேர் என்னும் பொருளை உடையது. ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது. அம்பை ஏவு என்பர். ஏவுதல் என்பது 'அம்புவிடுதல்'. ஏவும் அம்பு 'ஏ' என்றாகியது.

- ★ அம்பு விரைந்து செல்வது போலச் சென்று உரிய கடமை புரிபவன் **ஏவலன்** எனப்பட்டான்.
- ★ அம்புவிடும் கலையை **ஏகலை** என்றது தமிழ்;
- ★ அதில் வல்லவனை **ஏகலைவன்** என்று பாராட்டியது.

ஏவு என்னும் சொல் 'ஏ' என்று ஆனது மட்டுமன்றி 'எய்' எனவும் ஆயிற்று.

- ✓ ஏவுகின்ற அம்பைப் போல் கூர்முள்ளை உடைய முள்ளம்பன்றியின் பழம்பெயர் **எய்ப்பன்றி**.
- ✓ அம்பை எய்பவர் **எயினர்**. அவர்தம் மகளிர் **எயினியர்**. சங்கப்புலவர்களுள் எயினனாரும் உளர். எயினியாரும் உளர்.

## 10. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்

பிரிக்க முடியாத அடிப்படைச் சொல்லே **வேர்ச்சொல்,** அதனைப் **பகுதி** என்றும் கூறலாம்.

- (எ.கா) நட – என்ற சொல்லை மேலும் பிரித்தால் ந, ட என்ற எழுத்துகளே ஆகும்.
- நடப்பான் – என்ற சொல்லை உறுப்பிலக்கண அடிப்படையில் பிரிக்க முடியும்.
- நட+ப் + ப் + ஆன்

நட – பகுதி (பகாப்தம்) அதுவே வேர்ச்சொல். அந்த வேர்ச்சொல்லைக் கொண்டு உறுப்புகளை இணைத்துப் பகுபதம் ஆக்கலாம்.

- (எ.டு) வீழ்ந்தார் – என்பதன் வேர்ச்சொல் யாது?
- (அ) வீழ்ந்து (ஆ) வீழ்க (இ) வீழ் (ஈ) வீழின்

**வேர்ச்சொல் என்பது பொதுவாகக் கட்டளையாகவோ, ஏவலாகவோ இருக்கும். அதில், 'வீழ்' என்பது தான் கட்டளையாக உள்ளது.**

**வேர்ச்சொல்:** பகுதி விகுதிகளில் பகுதியாக அமைவதே வேர்ச்சொல்லாகும்.

- நடந்தான் – நட
- படித்தான் – படி
- வைத்தான் – வை
- போயினான் – போ
- தின்றான் – தின்
- பார்த்தான் – பார்
- கேட்டான் – கேள்
- வந்தான் – வா
- மடிந்தான் – மடி
- விட்டான் – விடு
- உண்டான் – உண்
- அஃகினான் – அஃகு
- தேய்த்தான் – தேய்
- சென்றான் – செல்
- வாழ்ந்தான் – வாழ்

வேர்ச்சொல் என்பது கட்டளைப் பொருளில் அமைய வேண்டும். உங்களுக்கு முன்னிருப்பவரைப் பார்த்துச் சொல்வது போல் இருக்க வேண்டும். (எ.கா) ஓடு, விளையாடு, படி, மகிழ், தூங்கு, சிரி, எழு, செய்.

(எ.டு)

1. அளித்தல் என்ற சொல்லின் வேர்ச்சொல் - அளி
2. ஆடினான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - ஆடு
3. அணிந்தான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - அணி
4. அறுந்தது என்ற சொல்லின் வேர்ச்சொல் - அறு
5. இழப்பர் என்ற சொல்லின் வேர்ச்சொல் - இழ
6. ஈட்டினான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - ஈட்டி
7. உண்பார் என்ற சொல்லின் வேர்ச்சொல் - உண்
8. ஊர்ந்தது என்ற சொல்லின் வேர்ச்சொல் - ஊர்
9. எய்தான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - எய்
10. ஒழிந்தான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - ஒழி
11. ஓதியவர் என்ற சொல்லின் வேர்ச்சொல் - ஓதி
12. கண்டோம் என்ற சொல்லின் வேர்ச்சொல் - காண்
13. கொய்தான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - கொய்
14. செய்யார் என்ற சொல்லின் வேர்ச்சொல் - செய்
15. சொல்வான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - சொல்
16. தட்டுவான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - தட்டு
17. தெளிந்தனர் என்ற சொல்லின் வேர்ச்சொல் - தெளி
18. தொடர்ந்தான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - தொடர்
19. நின்றார் என்ற சொல்லின் வேர்ச்சொல் - நில்
20. பிரித்தார் என்ற சொல்லின் வேர்ச்சொல் - பிரி
21. புகழ்ந்தான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - புகழ்
22. பெற்றாள் என்ற சொல்லின் வேர்ச்சொல் - பெறு
23. வென்றார் என்ற சொல்லின் வேர்ச்சொல் - வெல்
24. வனைந்தான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - வனை
25. உறங்கினான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - உறங்கு
26. தின்றான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - தின்
27. பாடினார் என்ற சொல்லின் வேர்ச்சொல் - பாடு
28. நடித்தான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - நடி
29. பற்றினான் என்ற சொல்லின் வேர்ச்சொல் - பற்று
30. வாழ்க என்ற சொல்லின் வேர்ச்சொல் - வாழ்

தேர்வுக்குறிப்புகள்

## 11. வேர்ச்சொல்லைக் கொடுத்து, வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற் பெயரை, உருவாக்குதல்.

இப்பகுதி வினாக்களை எளிதில் விடையளிக்க வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் இலக்கணத்தை அறிந்திருத்தல் அவசியம்

### வினைச்சொல்

இராமன் வந்தான், கண்ணன் நடந்தான்

இத்தொடர்களில் இராமன், கண்ணன் என்பன பெயர்ச்சொற்கள், அவைய எழுவாய்களாகவும் உள்ளன. வந்தான், நடந்தான் ஆகிய சொற்கள் வருவதும், நடப்பதும் ஆகிய செயல்களை குறிப்பதால் இவை வினைச்சொற்கள், இவையோ பயனிலைகளாகவும் (முடிக்கும் சொற்களாகவும்) உள்ளன. இவ்வாறு எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள்.

### வினைமுற்று

மலர்விழி எழுதினாள், கண்ணன் பாடுகிறான், மாடு மேயும்.

இத்தொடர்களில் எழுதினாள், பாடுகிறான், மேயும் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் பொருள் முழுமை பெற்று விளங்குகிறது. இவ்வாறு பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்களை முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர்.

- ★ வினைமுற்று ஐந்து பால், மூன்று காலம், மூன்று இடம் ஆகிய அனைத்திலும் வரும்.
- ★ வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

## தெரிநிலை வினைமுற்று

ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

(எ.கா.) மாணவி கட்டுரை எழுதினாள்.

- செய்பவர் - மாணவி
- காலம் - இறந்தகாலம்
- கருவி - தாளும் எழுதுகோலும்
- செய்பொருள் - கட்டுரை
- நிலம் - பள்ளி
- செயல் - எழுதுதல்

## குறிப்பு வினைமுற்று

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

- பொருள் - அவன் பொன்னன் - பொன்னை உடையவன்
- சினை - அவன் கண்ணன் - கண்களை உடையவன்
- இடம் - அவன் தென்னாட்டார் - தொன்னாட்டில் வாழ்பவன்
- பண்பு (குணம்) - அவன் கரியன் - கருமை நிறத்தவன்
- காலம் - சித்திரையன் - சித்திரையின் பிறந்தவன்
- தொழில் - அவன் எழுத்தன் - எழுதுபவன்

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதலல மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே

- நன்னூல் 321

அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த 'பொன்னன்' என்பதே குறிப்பு வினை ஆகும். பொன்னை உடையவனாய் இருந்தான். இருக்கிறான், இருப்பான் எனப் பொன்னன் என்பது முக்காலத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது.

### எச்சம்

- கயல்விழி படித்தாள், கோதை சென்றாள்
- இத்தொடர்களில் படித்தாள், சென்றாள் என்பன வினைமுற்றுகள்.

இவ் வினைமுற்றுகள் சில இடங்களில் 'ஆள்' என்ற விகுதி குறைந்து படித்த, சென்று எனவும் வரும். இச்சொற்கள் பொருளில் முற்றும் பெறாத முழுமையடையாத வினைச்சொற்கள். ஆதலால் எச்சம் எனப்படும். அல்லது வினைமுற்றின் (ஆள்) விகுதி குறைந்து நிற்கும் சொல்லே எச்சம் எனப்படும்.

### பெயரெச்சம்

படித்த என்னும் சொல் மாணவன், மாணவி, பள்ளி, புத்தகம், ஆண்டு போன்ற பெயர்ச்சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

(எ.கா.)

- படித்த மாணவன், படித்த பள்ளி.

இவ்வாறு பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆகும். பெயரெச்சம் மூன்று காலத்திலும் வரும்.

(எ.கா.)

- பாடிய பாடல் - இறந்தகாலப் பெயரெச்சம்
- பாடுகின்ற பாடல் - நிகழ்காலப் பெயரெச்சம்
- பாடும் பாடல் - எதிர்காலப் பெயரெச்சம்

பெயரெச்சங்கள் தெரிநிலை பெயரெச்சங்கள், குறிப்புப் பெயரெச்சங்கள் என இருவகைப்படும்.

தேர்வுக்குறிப்புகள்

## தெரிநிலை பெயரெச்சங்கள்

வந்த பையனைப் பாரத்து கண்ணன் நின்றான்.

இத்தொடரில் வந்து என்பது பையன் என்னும் பெயரைக் கொண்டு முடிவதால் பெயரச்சம் எனப்படும். செய்த செய்கின்ற செய்யும் என்பன முறையே முக்காலத்திற்கும் உரிய பெயரச்ச வாய்ப்பாடுகள், இவை முக்காலத்தையும் செயலையும் வெளிப்டையாக காட்டிச் செய்பவன் முதலான ஆறம் எஞ்சி நிற்கும். இவன் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

எ.கா.

- ★ செய்பவன் - இளங்கோவன்
- ★ கருவி - கலம்
- ★ நிலம் - வீடு
- ★ செயல் - உண்ணுதல்
- ★ காலம் - இறந்த காலம்
- ★ செய்பொருள் - சோறு

உண்கின்ற இளங்கோவன், உண்ணும் இளங்கோவன் என நிகழ்காலம், எதிர்காலம் காட்டும் பெயரெச்சங்களையும் மேற்கண்டவாறு பொருத்திக் காணலாம்.

உடன்பாடு - எதிர் மறை

எ.கா.

உண்ட இளங்கோவன் - உண்ணாத இளங்கோவன்

எழுதிய கடிதம் - இத்தொடரில் உள்ள எழுதிய என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்தகாலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.

## குறிப்புப் பெயரெச்சங்கள்

காலத்தையோ, செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல் கொண்டு முடியும் எச்சம் குறிப்பு பெயரெச்சம் எனப்படும்.

எ.கா.

- ★ நல்ல பையன்

இத்தொடரில் நல்ல என்னும் சொல் காலத்தையோ, சொல்லையோ உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி நின்ற பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது. இது காலத்தைக் (இன்று நல்ல பையன், நேற்று நல்ல பையன், நாளை நல்ல பையன்) குறிப்பால் உணர்த்தும்.

## வினையெச்சம்

முற்றுபெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினை முற்றைக் கொண்டுமுடிந்தால் அது வினையெச்சம் எனப்படும்

(எ.கா.)

- ★ படித்து வந்தான்
- ★ பாடக்கேட்டான்
- ★ ஓடிச்சென்றான்
- ★ போய்ப் பார்த்தான்

இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் **காலவகையால் மூன்று** வகைப்படும்.

- ★ இறந்தகால வினையெச்சம் - படித்து வந்தான், ஓடிச் சென்றான்
- ★ நிகழ்கால வினையெச்சம் - படித்து வருகின்றான், ஓடிச் செல்கின்றான்
- ★ எதிர்கால வினையெச்சம்- படித்து வருவான், ஓடிச் செல்வான்

இது தெரிநிலை வினையெச்சங்கள், குறிப்பு வினையெச்சங்கள் என இரு வகைப்படும்.

தேர்வுக்குறிப்புகள்

## தெரிநிலை வினையெச்சங்கள்

எழுதி வந்தான் - இத்தொடரில் உள்ள எழுதி என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

## குறிப்பு வினையெச்சங்கள்

மெல்ல வந்தான் - இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்திவரும் வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

## முற்றெச்சம்

வள்ளி படித்தனள்.

இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்தாள் என்னும் வினைமுற்றுப் பொருளைத் தருகிறது.

வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.

இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்து என்னும் வினையெச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

## தொழிற்பெயர்

வேர்ச்சொல்லோடு ‘தல்’ விகுதி சேர்ந்தால் அது தொழிற்பெயர். அல், வை, வு, கை ஆகிய விகுதிகள் சேர்ந்தாலும் அது தொழிற்பெயராகும்.

- தல் - கூறு + அல் = கூறல்
- வை - பார் + வை = பார்வை
- வு - வாழ் + வு = வாழ்வு
- கை - படு + கை = படுக்கை
- தல் = கல் + தல் =கற்றல்

| வேர்ச்சொல் | வினைமுற்று | வினையெச்சம் | வினையாலணையும் பெயர் | தொழிற்பெயர் |
|---|---|---|---|---|
| கொடு | கொடுத்தான் | கொடுத்து | கொடுத்தவன் | கொடுத்தல் |
| படு | படுத்தார | படுத்து | படுத்தவரை | படுத்தல் |
| நடி | நடித்தது | நடித்து | நடித்தவனை | நடித்தல் |
| பெறு | பெற்றான் | பெற்று | பெற்றோரை | பெறல் |
| உண் | உண்டான் | உண்டு | உண்டரை | உண்டல் |
| செல் | சென்றார் | சென்று | சென்றவரை/சென்றவன் | செல்லல்/செல்லுதல் |
| தொடு | தொட்டது | தொட்டு | தொட்டவனை | தொடல் |
| வீழ் | வீழ்ந்தான் | வீழந்து | வீந்தவணை | வீழ்ச்சி |
| காண் | கண்டான் | கண்டு | கண்டாரை | காணல் |
| தேர் | தேர்ந்தார் | தேர்ந்து | தேர்ந்தவரை | தேர்தல் |
| தின் | தின்றது | தின்று | தின்றாரை | தின்னுதல் |
| குடி | குடித்தான் | குடித்து | குடித்தாரை | குடித்தல் |
| அறு | அறுத்தான் | அறுத்து | அறத்தவனை | அறுத்தல் |
| உடை | உடைத்தார் | உடைத்து | உடைத்தவரை | உடைப்பு |
| பறி | பறித்தான் | பறித்து | பறித்தானை | பறித்தல் |
| ஒடி | ஒடித்தாள் | ஒடித்து | ஒடித்தவனை | ஒடித்தல் |
| ஓடு | ஓடியது | ஓடு | ஓடுயதை | ஓட்டம் |
| வெட்டு | வெட்டினான் | வெட்டி | வெட்டியவனை | வெட்டல் |
| பூசு | பூசினார் | பூசி | பூசியவரை | பூசுதல் |
| அடி | அடித்தார் | அடித்து | அடிப்பாரை | அடித்தல் |
| இயற்று | இயற்றுனர் | இயற்றி | இயற்றியவணை | இயற்றுதல் |
| எழுது | எழுதினார் | எழுதி | எழுதியவனை | எழுதுதல் |
| பற | பறந்தது | பறந்து | பறந்ததை | பறத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| கிழி | கிழித்தது | கிழித்து | கிழித்ததை | கிழித்தல் |
| வரை | வரைந்தான் | வரைந்த | வரைந்ததை | வரைதல் |
| எய் | எய்தான் | எய்து | எய்தவனை | எய்தல் |
| குத்து | குத்தினார் | குத்தி | குத்தியவனை | குத்துதல் |
| பாய்ச்சு | பாய்ச்சினார் | பாய்ச்சி | பாய்ச்சியவனை | பாய்ச்சுதல் |
| பிள | பிளந்தான் | பிளந்து | பிளந்தானை | பிளத்தை |
| கொய் | கொய்தது | கொய்து | கொய்தவனை | கொய்தல் |
| அரி | அரிந்தார் | அரிந்து | அரிந்தவரை | அரிதல் |

தேர்வுக்குறிப்புகள்

## 12. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்

**விளக்கம்:**

- **உயிர் எழுத்துக்கள்** - 12 (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ)
- **ஆய்த எழுத்து** - 1 (ஃ)

**மெய்யெழுத்து மற்றும் அதன் வர்க்கம்**

- க், ங், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்
- க, ங, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன

மாறி மாறி கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களை அகராதிப்படி வரிசைப் படுத்துவதே அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல் எனப்படும் .

**உயிரெழுத்துக்களை வரிசைப்படுத்துதல்:**

முதலில் அ,ஆ,இ,ஈ என உயிரெழுத்துக்களை வரிசைப்படுத்த வேண்டும்.

- (எ.கா): ஒட்டகம் , இலை, அரும்பு, ஊஞ்சல்
- **விடை:** அரும்பு , இலை , ஊஞ்சல் , ஒட்டகம்
- எளிமை, ஊக்கம், இனிமை, ஆயிரம்
- **விடை:** ஆயிரம், இனிமை, ஊக்கம், எளிமை

**மெய்யெழுத்துக்களை வரிசைப்படுத்துதல் :**

முதல் எழுத்திற்கு அடுத்த எழுத்து மெய்யெழுத்தாக இருந்தால் அதனை வரிசைப் படுத்தவேண்டும்.

- (எ.கா): நன்மை, நம்பகம் , நல்லது , நட்சத்திரங்கள்
- விடை: நட்சத்திரங்கள், நம்பகம், நல்லது, நன்மை

**உயிர் மெய் எழுத்துக்களை வரிசைப்படுத்துதல் :**

- உயிர் மெய் எழுத்துக்களை க,கா,கி,கீ என்றே வரிசைப் படுத்த வேண்டும்.
- குறிப்பாக எக்காரணத்தைக் கொண்டும் க,ங,ச என்ற முறையில் வரிசைப் படுத்தக் கூடாது.
- (எ.கா): மிருகம், முத்து, மௌனம், மதி
- விடை: மதி , மிருகம், முத்து , மௌனம்

**சில உதாரணங்கள்:**

1. தத்தை, தண்ணீர், தந்தம், தங்கை
   விடை: தங்கை, தண்ணீர், தத்தை, தந்தம்
2. கோமாளி, காலை, கலை, கொக்கு
   விடை: கலை, காலை, கொக்கு, கோமாளி
3. நிதி, நான்கு, நட்பு, நேற்று
   விடை: நட்பு, நான்கு, நிதி, நேற்று
4. எளிமை, ஊக்கம், இனிமை, ஆயிரம்
   விடை: ஆயிரம், இனிமை, ஊக்கம், எளிமை
5. கொக்கு, கீரி, கௌதாரி, கிளி
   விடை: கிளி, கீரி, கொக்கு, கௌதாரி
6. ஏணி, ஈடுபாடு, ஆசை, ஊண்
   விடை: ஆசை, ஈடுபாடு, ஊண், ஏணி
7. தமிழ், படித்தல், ஊக்கம், இனிமை
   விடை: இனிமை, ஊக்கம், தமிழ், படித்தல்
8. இமயம், உலகம், அன்பு, ஐவர்
   விடை: அன்பு, இமயம், உலகம், ஐவர்
9. கண்டம், கண்டி, கண்டகம், கண்
   விடை: கண், கண்டகம், கண்டம், கண்டி
10. எண், எடுப்பு, எண்ணம், எடை
    விடை: எடுப்பு, எடை, எண், எண்ணம்
11. திரை,தளிர், துறைமுகம், தாமரை
    விடை: தளிர், தாமரை, திரை, துறைமுகம்
12. கொல்லன், காவலன், அரசன், தச்சர்
    விடை: அரசன், காவலன், கொல்லன், தச்சர்
13. பச்சை, பட்டம், பங்கு, பஞ்சு
    விடை: பங்கு, பச்சை, பஞ்சு, பட்டம்
14. உழும், ஆடும், அடும், ஊரும்
    விடை: அடும், ஆடும், உழும், ஊரும்
15. மீன், முத்து, மாங்காய், மச்சம்
    விடை: மச்சம், மாங்காய், மீன், முத்து
16. காட்சி, பேறு, தெய்வம், உழைப்பு
    விடை: உழைப்பு, காட்சி, தெய்வம், பேறு
17. சௌக்கியம், சுக்கு, சங்கு, சொல்
    விடை: சங்கு, சுக்கு, சொல், சௌக்கியம்
18. சிறப்பு, சனி, சீற்றம், சாலை
    விடை: சனி, சாலை, சிறப்பு, சீற்றம்

தேர்வுக்குறிப்புகள்

19. உழவன், வாணிபம், இடையன், ஊதியம்
 விடை: இடையன், உழவன், ஊதியம், வாணிபம்
20. தூண்டில், தங்கம், தேர், திங்கள்
 விடை: தங்கம், திங்கள், தூண்டில், தேர்
21. கை, காட்சி, கேணி, கோபுரம்
 விடை: காட்சி, கேணி, கை, கோபுரம்
22. ஐயம், எழில், ஈசன், ஔடதம்
 விடை: ஈசன், எழில், ஐயம், ஔடதம்
23. சந்திரன், திங்கள், ஞாயிறு, கதிரவன்
 விடை: கதிரவன், சந்திரன், ஞாயிறு, திங்கள்
24. யோகி, நகம், வீறு, மாசு
 விடை: நகம், மாசு, யோகி, வீறு
25. ஒலி, எள், இடி, அகிலம்
 விடை: அகிலம், இடி, எள், ஒலி
26. பூடான், தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா
 விடை: கேரளா, தமிழ்நாடு, பூடான், மகாராஷ்டிரா
27. நேற்று, நவில்தல், நீலம், நோய்
 விடை: நவில்தல், நீலம், நேற்று, நோய்
28. புதன், செவ்வாய், வெள்ளி, திங்கள்
 விடை: செவ்வாய், திங்கள், புதன், வெள்ளி
29. கடல், கடவுள், கடமை, கடன்
 விடை: கடமை, கடல், கடவுள், கடன்
30. நீதி, வழக்கு, தீர்ப்பு, சாட்சி
 விடை: சாட்சி, தீர்ப்பு, நீதி, வழக்கு
31. பாண்டம், பழமொழி, பாசறை, பழிப்பு
 விடை: பழமொழி, பழிப்பு, பாசறை, பாண்டம்
32. மண்ணு, மந்தி, மிதி, மண்டு
 விடை: மண்டு, மண்ணு, மந்தி, மிதி
33. அதிபதி, அதிர்ச்சி, அந்தகன், அதியமான்
 விடை: அதிபதி, அதியாமான், அதிர்ச்சி, அந்தகன்
34. கோவலர், சுட்டி, சவலை, சுட்டு
 விடை: கோவலர், சவலை, சுட்டி, சுட்டு
35. மேகலை, மேடம், மேசை, மேடு
 விடை: மேகலை, மேசை, மேடம், மேடு
36. ஒப்படை, ஒப்பம், ஒட்டு, ஒடுக்கு
 விடை: ஒட்டு, ஒடுக்கு, ஒப்படை, ஒப்பம்
37. ஐவர், இறக்கம், ஓம்பல், ஊமை.
 விடை: இறக்கம், ஊமை, ஐவர், ஓம்பல்

38. தப்பு, மஞ்சு, கட்டு, பட்டு, சுக்கு, நண்டு
    விடை: கட்டு, சுக்கு, தப்பு, தண்டு, பட்டு, மஞ்சு
39. வாசகம், வால், வாய்ப்பாடு, வாலிபம்
    விடை: வாசகம், வாய்பாடு, வால், வாலிபம்
40 புண், பிடி, பாலை, பிள்ளையார்
    விடை: பாலை, பிடி, பிள்ளையார், புண்
41. ஏற்றல், உண்ணல், அன்னம், இன்னல்
    விடை: அன்னம், இன்னல், உண்ணல், ஏற்றல்
42. வழங்கு, வளையம், வனப்பு, வரை
    விடை: வரை, வழங்கு, வளையம், வனப்பு
43. நிறை, நீட்டம், நிறம், நினைவு
    விடை: நிறம், நிறை, நினைவு, நீட்டம்
44. ஈன்றனள், இசை, அரசியல், எழுதினேன்
    விடை: அரசியல், இசை, ஈன்றனள், எழுதினேன்
45. இளக்கம், இளவல். இளநீர், இளமை
    விடை: இளக்கம், இளநீர், இளமை, இளவல்
46. நொறுங்கு, பண்ணை, பனி, நரை
    விடை: நரை, நொறுங்கு, பண்ணை, பனி
47. அந்தாதி, உலா, இராசராசன், ஆராய்தல்
    விடை: அந்தாதி, ஆராய்தல், இராசராசன், உலா
48. பேச்சு, பெயர், பை, பேரம்
    விடை: பெயர், பேச்சு, பேரம், பை
49. இலங்கை, அணில், ஏணி, உலகம்
    விடை: அணில், இலங்கை, உலகம், ஏணி
50. சக்கரம், குருவி, வானம்பாடி, மேளம்
    விடை: குருவி, சக்கரம், மேளம், வானம்பாடி
51. மழவன், மருட்சி, மழி, மருந்து
    விடை: மருட்சி, மருந்து, மழவன், மழி
52. கச்சை, கச்சி, கசடு, கங்கை
    விடை: கங்கை, கச்சி, கச்சை, கசடு
53. புருவம், புனைவு, புளி, புலி
    விடை: புருவம், புலி, புளி, புனைவு
54. மயில், மருகன், மல்லை, மந்திரி
    விடை: மந்திரி, மயில், மருகன், மல்லை
55. எண்ணம், எண், எடுப்பு, எடை
    விடை: எடுப்பு, எடை, எண், எண்ணம்
56. இலக்கணம், அத்தி, கொழுந்து, சவால்
    விடை: அத்தி, இலக்கணம், கொழுந்து, சவால்

57. நல்வினை, நலம், தூது, தூணி
    விடை: தூணி, தூது, நல்வினை, நலம்
58. விதி, விரை, விரதம், விரோதி
    விடை: விதி, விரதம், விரை, விரோதி
59. எருது , ஆமை, ஓடம், உறக்கம்
    விடை: ஆமை, உறக்கம், எருது, ஓடம்
60. கல்வி, பண்பு, சங்கம், தகைமை
    விடை: கல்வி, சங்கம், தகைமை, பண்பு

## கொள்குறி வினாக்கள்

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:**

அ) போற்றி, பொய்கை, மகன், மகிடம்
ஆ) பொய்கை, போற்றி, மகன், மகிடம்
இ) மகிடம், மகன், பொய்கை, போற்றி
ஈ) மகன், மகிடம், பொய்கை, போற்றி

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) பந்தர், படம், பண்பு, பத்தினி
ஆ) பத்தினி, படம், பண்பு, பந்தர்
இ) படம், பண்பு, பத்தினி, பந்தர்
ஈ) பந்தர், பண்பு, படம், பத்தினி

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) இணக்கம், இணங்குதல், இதயம், இதிகாசம்
ஆ) இதிகாசம், இணக்கம், இணங்குதல், இதயம்
இ) இதயம், இதிகாசம், இணக்கம், இணங்கல்
ஈ) இதிகாசம், இதயம், இணக்கம், இணங்கல்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) மிருகம், முழுமை, மூட்டு, மூடி
ஆ) மூடி, மூட்டு, முழுமை, மிருகம்
இ) மிருகம், மூட்டு, மூடி, முழுமை
ஈ) மூட்டு, மூடி, முழுமை, மிருகம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) கண், கண்டகம், கண்டம், கண்டி
ஆ) கண்டகம், கண்டம், கண்டி, கண்
இ) கண், கண்டி, கண்டகம், கண்டம்
ஈ) கண்டம், கண், கண்டி, கண்டகம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) கிளி, குடம், குரல், காதல்
ஆ) கிளி, காதல், குடம், குரல்
இ) காதல், கிளி, குடம், குரல்
ஈ) குரல், கிளி, காதல், குடம்

அகர வரிசைப்படி அமைந்த சொற்தொகுப்பு தேர்க :
அ) சீற்றம், சட்டம், சிறப்பு, சாலை
ஆ) சட்டம், சாலை, சிறப்பு, சீற்றம்
இ) சிறப்பு, சட்டம், சாலை, சீற்றம்
ஈ) சாலை, சட்டம், சிறப்பு, சீற்றம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) சக்கரம், திக்கு, பிடி, வலம்
ஆ) திக்கு, பிடி, வலம், சக்கரம்
இ) பிடி, வலம், சக்கரம், திக்கு
ஈ) வலம், சக்கரம், திக்கு, பிடி

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) யாமம், யாளி, ய10கம், யோகம்
ஆ) யாளி, ய10கம், யோகம், யாமம்
இ) யாமம், ய10கம், யாளி, யோகம்
ஈ) ய10கம், யாமம், யாளி, யோகம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) மேலாடை, மேல், மேல்வரி, மேலாக்கு
ஆ) மேலாக்கு, மேல், மேல்வரி, மேலாடை
இ) மேல், மேல்வரி, மேலாக்கு, மேலாடை
ஈ) மேலாடை, மேல்வரி, மேல், மேலாக்கு

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) தைலம், தையல், தேன், தேறல்
ஆ) தேறல், தேன், தையல், தைலம்
இ) தேறல், தையல், தேன், தைலம்
ஈ) தையல், தேறல், தேன், தைலம்

அகர வரிசையில் அமைந்த சொற்களைத் தேர்வு செய்க :
அ) கடமை, கேண்மை, கிழமை, கைக்கிளை
ஆ) கேண்மை, கடமை, கைக்கிளை, கிழமை
இ) கிழமை, கேண்மை, கடமை, கைக்கிளை
ஈ) கடமை, கிழமை, கேண்மை, கைக்கிளை

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) வம்பு, வடம், வடகம், வடக்கு
ஆ) வடக்கு, வடகம், வடம், வம்பு
இ) வடக்கு, வடம், வடகம், வம்பு
ஈ) வடகம், வடம், வடக்கு, வம்பு

அகர வரிசையில் அமைந்த சொற்களைத் தேர்வு செய்க :

அ) சங்கம், தகைமை, கல்வி, பண்பு
ஆ) தகைமை, சங்கம், கல்வி, பண்பு
இ) கல்வி, சங்கம், தகைமை, பண்பு
ஈ) கல்வி, பண்பு, சங்கம், தகைமை

அகர வரிசையில் அமைந்த சொற்களைத் தேர்க.

அ) எருது , ஆமை, ஓடம், உறக்கம்
ஆ) ஓடம், எருது, ஆமை, உறக்கம்
இ) ஆமை, உறக்கம், எருது, ஓடம்
ஈ) எருது, ஆமை, உறக்கம், ஓடம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) விதி, விரதம், விரை, விரோதி
ஆ) விரதம், விரை, விரோதி, விதி
இ) விதி, விரை, விரதம், விரோதி
ஈ) விரோதி, விதி, விரை, விரதம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) மறு, மறி, மனசு, மறுசொல்
ஆ) மறி, மற, மறுசொல், மனசு
இ) மறுசொல், மறு, மறி, மனது
ஈ) மனச, மறு, மறி, மறுசொல்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) தூணி, தூது, நல்வினை, நலம்
ஆ) தூது, தூணி, நல்வினை, நலம்
இ) நல்வினை, நலம், தூது, தூணி
ஈ) நலம், தூது, தூணி, நல்வினை

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) வகுப்பு, மொழி, யமன், யாக்கை
ஆ) யாக்கை, மொழி, யமன், வகுப்பு
இ) மொழி, யாக்கை, யமன், வகுப்பு
ஈ) மொழி, யமன், யாக்கை, வகுப்பு

தேர்வுக்குறிப்புகள்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) கொழுந்து, சவால், அத்தி, இலக்கணம்
ஆ) அத்தி, இலக்கணம், கொழுந்து, சவால்
இ) இலக்கணம், அத்தி, கொழுந்து, சவால்
ஈ) சவால், அத்தி, இலக்கணம், கொழுந்து

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) எடை, எடுப்பு, எண், எண்ணம்
ஆ) எண், எண்ணம், எடுப்பு, எடை
இ) எடுப்பு, எடை, எண், எண்ணம்
ஈ) எண்ணம், எண், எடுப்பு, எடை

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) மயில், மந்திரி, மருகன், மல்லை
ஆ) மந்திரி, மயில், மருகன், மல்லை
இ) மல்லை, மருகன், மயில், மந்திரி
ஈ) மயில், மருகன், மல்லை, மந்திரி

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) யாத்திரை, யாசகம், யாக்கை, யவனம்
ஆ) யவனம், யாசகம், யாக்கை, யாத்திரை
இ) யாசகம், யவனம், யாக்கை, யாத்திரை
ஈ) யவனம், யாக்கை, யாசகம், யாத்திரை

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) மஞ்சள், மட்டம், மடம், மண்டு
ஆ) மட்டம், மடம், மண்டு, மஞ்சள்
இ) மடம், மண்டு, மஞ்சள், மட்டம்
ஈ) மட்டம், மஞ்சள், மண்டு, மடம்

அகர வரிசைப்படி சீர் செய்க :

காகம், ஊசி, ஞானம், அச்சுதன்

அ) ஊசி, ஞானம், காகம், அச்சுதன்
ஆ) அச்சுதன், ஊசி, ஞானம், காகம்
இ) ஞானம், காகம், அச்சுதன், ஊசி
ஈ) அச்சுதன், ஊசி, காகம், ஞானம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) புலி, புளி, புனைவு, புருவம்
ஆ) புருவம், புனைவு, புளி, புலி
இ) புளி, புலி, புனைவு, புருவம்
ஈ) புருவம், புலி, புளி, புனைவு

அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

அ) வைகாசி, மார்கழி, பங்குனி, சித்திரை
ஆ) சித்திரை, பங்குனி, வைகாசி, மார்கழி
இ) மார்கழி, சித்திரை, பங்குனி, வைகாசி
ஈ) சித்திரை, பங்குனி, மார்கழி, வைகாசி

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) கசடு, கங்கை, கச்சி, கச்சை
ஆ) கச்சை, கச்சி, கசடு, கங்கை
இ) கங்கை, கசடு, கச்சை, கச்சி
ஈ) கங்கை, கச்சி, கச்சை, கசடு

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) பசு, பசி, பசுமை, பசை
ஆ) பசை, பசி, பசு, பசுமை
இ) பசி, பசு, பசுமை, பசை
ஈ) பசுமை, பசை, பசு, பசி

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) மழி, மருட்சி, மருந்து, மழவன்
ஆ) மழவன், மருட்சி, மழி, மருந்து
இ) மருந்து, மருட்சி, மழி, மழவன்
ஈ) மருட்சி, மருந்து, மழவன், மழி

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) ஓணான், ஒட்டு, ஓடு, ஓணம்
ஆ) ஒட்டு, ஓடு, ஓணம், ஓணான்
இ) ஓணம், ஓணான், ஓட்டு, ஓடு
ஈ) ஒடு, ஓட்டு, ஓணம், ஓணான்

அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க :

அ) குருவி, மேளம், வானம்பாடி, சக்கரம்
ஆ) சக்கரம், குருவி, வானம்பாடி, மேளம்
இ) குருவி, சக்கரம், மேளம், வானம்பாடி
ஈ) சக்கரம், வானம்பாடி, குருவி, மேளம்

அகர வரிசையில் அமைந்த வரிசையைத் தேர்க :

அணில், இலங்கை, உலகம், ஏணி

அ) இலங்கை, அணில், ஏணி, உலகம்
ஆ) அணில், ஏணி, உலகம், இலங்கை
இ) அணில், இலங்கை, உலகம், ஏணி
ஈ) உலகம், இலங்கை, அணில், ஏணி

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) ஓவியம், ஓமம், ஓலம், ஓவம்
ஆ) ஓவம், ஓலம், ஓமம், ஒவியம்
இ) ஓமம், ஓலம், ஓவம், ஒவியம்
ஈ) ஓலம், ஓமம், ஓவியம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) தீரம், துடுப்பு, துண்டம், தினவு
ஆ) தினவு, தீரம், துடுப்பு, துண்டம்
இ) தினவு, துடுப்பு, தீரம், துண்டம்
ஈ) துண்டம், தினவு, தீரம், துடுப்பு

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) பை, பேச்சு, பேரம், பெயர்
ஆ) பெயர், பேச்சு, பேரம், பை
இ) பெயர், பேரம், பேச்சு, பை
ஈ) பேச்சு, பெயர், பை, பேரம்

அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க :

அ) வேதம், வைகாசி, விவேகம், வளமை
ஆ) வேதம், வைகாசி, வளமை, விவேகம்
இ) வைகாசி, வளமை, வேதம், விவேகம்
ஈ) வளமை, விவேகம், வேதம், வைகாசி

அகர வரிசைப்படி அமைந்த விடை

அ) இராசராசன், ஆராய்தல், உலா, அந்தாதி
ஆ) அந்தாதி, ஆராய்தல், இராசராசன், உலா
இ) அந்தாதி, ஆராய்தல், உலா, இராசராசன்
ஈ) அந்தாதி, உலா, இராசராசன், ஆராய்தல்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) நியமம், நிரப்பு, நிருதர், நிலைமை
ஆ) நிரப்பு, நிருதர், நிலைமை, வியமம்
இ) நியமம், நிருதர், நிரப்பு, நிலைமை
ஈ) நிலைமை, நிருதர், நியமம், நிரப்பு

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) வட்டம், வட்டி, வட்டில், வஞ்சி
ஆ) வஞ்சி, வட்டி, வட்டம், வட்டில்
இ) வஞ்சி, வட்டம், வட்டி, வட்டில்
ஈ) வட்டில், வட்டி, வட்டம், வஞ்சி

தேர்வுக்குறிப்புகள்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) நொறுங்கு, பண்ணை, பனி, நரை
ஆ) நரை, பண்ணை, நொறுங்கு, பனி
இ) நரை, நொறுங்கு, பண்ணை, பனி
ஈ) பனி, நரை, நொறுங்கு, பண்ணை

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) பிடி, பிசின், பிஞ்சு, பிடவம்
ஆ) பிசின், பிஞ்சு, பிசின், பிடி
இ) பிடவம், பிடி, பிசின், பிஞ்சு
ஈ) பிஞ்சு, பிடி, பிடவம், பிசின்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) இளவல், இளமை, இளநீர், இளக்கம்
ஆ) இளக்கம், இளவல். இளநீர், இளமை
இ) இளநீர், இளக்கம், இளமை, இளவல்
ஈ) இளக்கம், இளநீர், இளமை, இளவல்

அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்தல்
அ) எழுதினேன், இசை, அரசியல், ஈன்றனள்
ஆ) ஈன்றனள், இசை, அரசியல், எழுதினேன்
இ) அரசியல், இசை, ஈன்றனள், எழுதினேன்
ஈ) அரசியல், எழுதினேன், ஈன்றனள், இசை

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) நீட்டம், நிறம், நிறை, நினைவு
ஆ) நிறம், நிறை, நினைவு, நீட்டம்
இ) நினைவு, நீட்டம், நிறம், நிறை
ஈ) நிறை, நீட்டம், நிறம், நினைவு

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) பவுன், பலம், பலன், பலி
ஆ) பலி, பலம், பலன், பவுன்
இ) பலன், பலி, பலம், பவுன்
ஈ) பலம், பலன், பலி, பவுன்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) வனப்பு, வரை, வழங்கு, வளையம்
ஆ) வரை, வழங்கு, வளையம், வனப்பு
இ) வளையம், வனப்பு, வரை, வழங்கு
ஈ) வழங்கு, வளையம், வனப்பு, வரை

அகர வரிசையில் அமைந்த சொற்களைத் தேர்க.
அ) அன்பு, இன்பம், உவகை, ஏற்றம்
ஆ) இன்பம், அன்பு, ஏற்றம், உலகை
இ) ஏற்றம், உலகை, இன்பம், அன்பு
ஈ) உவகை, ஏற்றம், அன்பு, இன்பம்

அகர வரிசையில் அமைந்த சொற்களைத் தேர்க :
அ) அன்னம், இன்னல், உண்ணல், ஏற்றல்
ஆ) இன்னல், அன்னம், ஏற்றல், உண்ணல்
இ) ஏற்றல், உண்ணல், அன்னம், இன்னல்
ஈ) உண்ணல், ஏற்றல், அன்னம், இன்னல்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) பாலை, பிடி, பிள்ளையார், புண்
ஆ) புண், பிடி, பாலை, பிள்ளையார்
இ) பிள்ளையார், பிடி, பாலை, புண்
ஈ) பிடி, பிள்ளையார், புண், பாலை

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) உப்பரிகை, உப்பளம், உப்பால், உப்பு
ஆ) உப்பு, உப்பளம், உப்பரிகை, உப்பால்
இ) உப்பால், உப்பு, உப்பளம், உப்பரிகை
ஈ) உப்பளம், உப்பரிகை, உப்பு, உப்பால்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:
அ) வாய்பாடு, வால், வாலிபம், வாசகம்
ஆ) வாசகம், வால், வாய்ப்பாடு, வாலிபம்
இ) வாலிபம், வாசகம், வாய்பாடு, வால்
ஈ) வாசகம், வாய்பாடு, வால், வாலிபம்

அகர வரிசையில் அமைந்த சொற்களைத் தேர்வு செய்க :
தப்பு, மஞ்சு, கட்டு, பட்டு, சுக்கு, நண்டு
அ) கட்டு, தப்பு, சுக்கு, நண்டு, மஞ்சு, பட்டு
ஆ) கட்டு, சுக்கு, தப்பு, தண்டு, பட்டு, மஞ்சு
இ) நண்டு, மஞ்சு, பட்டு, கட்டு, சுக்கு, தப்பு
ஈ) தப்பு, மஞ்சு, நண்டு, பட்டு, கட்டு, சுக்கு

அகர வரிசையில் அமைந்த சொற்களை தேர்க :
அ) எருமை, ஆடு, ஓணான், உடும்பு
ஆ) ஓணான், எருமை, ஆடு,உடும்பு
இ) ஆடு, உடும்பு, எருமை, ஓணான்
ஈ) ஓணான், எருமை, ஆடு, உடும்பு

அகர வரிசையில் அமைந்த சொற்களைத் தேர்க.

அ) ஓம்பல், இறக்கம், ஊமை, ஐவர்

ஆ) இறக்கம், ஊமை, ஐவர், ஓம்பல்

இ) ஊமை, ஐவர், இறக்கம், ஓம்பல்

ஈ) ஐவர், இறக்கம், ஓம்பல், ஊமை.

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) ஒட்டு, ஒடுக்கு, ஒப்படை, ஒப்பம்

ஆ) ஒடுக்கு, ஒப்படை, ஒப்பம், ஒட்டு

இ) ஒடுக்கு, ஒட்டு, ஒப்படை, ஒப்பம்

ஈ) ஒப்படை, ஒப்பம், ஒட்டு, ஒடுக்கு

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) மேகலை, மேசை, மேடம், மேடு

ஆ) மேடம், மேடு, மேசை, மேகலை

இ) மேகலை, மேடம், மேசை, மேடு

ஈ) மேடு, மேகலை, மேடம், மேசை

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ)சவலை, சுட்டி, சுட்டு, கோவலர்

ஆ) கோவலர், சுட்டி, சவலை, சுட்டு

இ) சுட்டு, சுட்டி, கோவலர், சவலை

ஈ) கோவலர், சவலை, சுட்டி, சுட்டு

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) அந்தகன், அதிர்ச்சி, அதியமான், அதிபதி

ஆ) அதிபதி, அதியாமான், அதிர்ச்சி, அந்தகன்

இ) அதிபதி, அதிர்ச்சி, அந்தகன், அதியமான்

ஈ) அதியமான், அதிபதி, அதிர்ச்சி, அந்தகன்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ)மண்ணு, மந்தி, மிதி, மண்டு

ஆ) மண்டு, மிதி, மந்தி, மண்ணு

இ) மண்டு, மண்ணு, மந்தி, மிதி

ஈ) மந்தி, மண்ணு, மண்டு, மிதி

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) மன்னி, மனது, மனைவி, மாக்கள்

ஆ) மனது, மன்னி, மனைவி, மாக்கள்

இ) மாக்கள், மன்னி, மனது, மனைவி

ஈ) மனைவி, மன்னி, மாக்கள், மனது

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ) பாசி, ப10ரிப்பு, ப10ழி, பரிவட்டம்

ஆ) பரிவட்டம், பாசி, ப10ரிப்பு, ப10ழி

இ) ப10ழி, ப10ரிப்பு, பாசி, பரிவட்டம்

ஈ) பாசி, ப10ழி, ப10ரிப்பு, பரிவட்டம்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ)பழிப்பு, பாசறை, பாண்டம், பழமொழி

ஆ) பழமொழி, பழிப்பு, பாசறை, பாண்டம்

இ) பாசறை, பாண்டம், பழமொழி, பழிப்பு

ஈ) பாண்டம், பழமொழி, பாசறை, பழிப்பு

அகர வரிசைப்படி அமைந்த சொல் வரிசை-யைத் தேர்க.

அ) நீதி, வழக்கு, தீர்ப்பு, சாட்சி

ஆ) சாட்சி, தீர்ப்பு, நீதி, வழக்கு

இ) சாட்சி, தீர்ப்பு, வழக்கு, நீதி

ஈ) சாட்சி, நீதி, வழக்கு, தீர்ப்பு

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படி தேர்க:

அ)கடன், கடவுள், கடல், கடமை

**ஆ) கடமை, கடல், கடவுள், கடன்**

இ) கடமை, கடவுள், கடல், கடன்

ஈ) கடல், கடவுள், கடமை, கடன்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆ | 11 | ஆ | 21 | இ | 31 | ஆ | 41 | இ | 51 | அ | 61 | அ |
| 2 | இ | 12 | ஈ | 22 | ஆ | 32 | இ | 42 | ஆ | 52 | ஈ | 62 | ஆ |
| 3 | அ | 13 | ஆ | 23 | ஈ | 33 | இ | 43 | ஈ | 53 | ஆ | 63 | ஆ |
| 4 | அ | 14 | இ | 24 | அ | 34 | இ | 44 | இ | 54 | இ | 64 | ஆ |
| 5 | அ | 15 | இ | 25 | ஈ | 35 | ஆ | 45 | ஆ | 55 | ஆ | 65 | ஆ |
| 6 | இ | 16 | அ | 26 | ஈ | 36 | ஆ | 46 | அ | 56 | அ | | |
| 7 | ஆ | 17 | ஆ | 27 | ஈ | 37 | ஈ | 47 | ஆ | 57 | அ | | |
| 8 | அ | 18 | அ | 28 | ஈ | 38 | ஆ | 48 | அ | 58 | ஈ | | |
| 9 | அ | 19 | ஈ | 29 | இ | 39 | அ | 49 | அ | 59 | ஆ | | |
| 10 | இ | 20 | ஆ | 30 | ஈ | 40 | இ | 50 | அ | 60 | இ | | |

தேர்வுக்குறிப்புகள்

## 13. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

- ✓ வார்த்தைகள் மாற்றி கொடுக்கப்பட்டிருக்கும் சொற்றொடரை சீர் செய்து சரியான சொற்றொடராக மாற்றி அமைத்து தேர்ந்தெடுக்கவேண்டும்
- ✓ **எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை** என்ற முறைப்படி அமைந்திருந்தால் அதுவே சரியான சொற்றொடர் ஆகும்.
- ✓ இப்பகுதியில் பழமொழிகள், பொன்மொழிகள், அல்லது பிரபலாமான கவிதை வரிகளும் உள்ளடங்கும்

### 1. எழுவாய் பயனிலை அமைப்பு:

எழுவாய் முதலில் வரும் அடுத்து பயனிலை வரும் எழுவாயும், பயனிலையும் **பால், இடம்** ஒத்து இருத்தல் வேண்டும்.

நான் வந்தேன் நாம் வந்தோம், நாங்கள் வந்தோம், நீ வந்தாய், நீர் வந்தீர், நீங்கள் வந்தீர்கள் அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன.

- ➢ வண்டி ஓடும் வண்டிகள் ஓடும்
- ➢ மரம் விழும், மரங்கள் விழும்
- ➢ எழுத்தறிவித்தவன், இறைவன் ஆகும்
- ➢ நாட்டை ஆண்டவன் அரசன் ஆகும்.

- ✓ செய்யும் என்னும் வாய்பாட்டில் அமையும் வினைகள் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால், போன்ற நான்கு பாலுக்கும் வரும்.
- ✓ தன்மை, முதனிலை, படர்க்கை (பலர்பால்) இவற்றில் செய்யும் என்னும் வாய்பாடு முற்று வராது.
  - ➢ வண்டி ஓடியது வண்டிகள் ஓடின.
  - ➢ பறவை பறந்தது பறவைகள் பறந்தன.

- குதிரை மேய்ந்தது குதிரைகள் மேய்ந்தன.

**2. எழுவாய் செயப்படுபொருள் பயனிலை அமைப்பு:**

இராமன் வில்லை வளைத்தான் - எனத் தொடர் அமையும்.

**3. தொகுதி பெயர் : ஒன்றன் பால்விகுதிபெறும்**

- ஊர் சிரித்தது
- உலகம் அழுதது.

**4. பெயரெச்சத்தின் முடிவில் பெயர்வரும்:**

- இன்று வந்த மழைக்காலம் என அமையும்.
- இன்று மழை வந்த காலம் எனத் தொடர் அமையாது. கோயிலுக்குப் போன மாலா திரும்பினாள் என அமையும்.

**5. வினையெச்சத்தை அடுத்து வினை வரும்:**

- (வினையெச்சத்தில் அடைச்சொற்கள் சில வரும்)
- முருகன் வந்து போனான், முருகன் வேகமாக வந்து போனான்.

**6. செயப்படு பொருளும் வினையெச்சமும் வரும் போது முதலில் செயப்படு பொருள் வரும்:**

- இராமன்/ வில்லை / வளைத்துப் / புகழ் / பெற்றான்.
- அவன் / பெண்ணைக் / கொடுத்துத் / திருமணம் செய்வித்தான்.
- முருகன் / அரக்கனை /அழித்து / வெற்றி / பெற்றான்.
- நான் / பணத்தைக் / கொடுத்துப் / பழம் / வாங்கினேன்.
- நான் பணம் கொடுத்துப் பழம் வாங்கினேன் என்று அஃறிணையில் 'ஐ' மறைந்தும் வரும்.

### 7. பெயரடை சிதறாது /பெயரை விட்டு விலகாது:

- நான் நேற்று நல்ல பையனைப் பார்த்தேன் (பெயரை - மத்தியில் எதுவும் வராது)
- நான் நேற்று (என்வீட்டிற்குப் பக்கத்திலிருந்த குடியிருந்த நல்ல பையனைப்) பார்த்தேன்.
- நான் கடையில் (திருவள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறளை) வாங்கினேன்.
- பெட்டியில் உள்ள சொற்கள் சிதறாது.

### 8. வேற்றுமை உருபுகள்: (2 - ஐ, 3-ஆல், 4-கு, 5-இன், 6-அது, 7-கண்)

அ) 2 - 3 நான் முருகனைப் பார்த்தேன்

- நான் முருகனைக் கண்ணால் பார்த்தேன்
- என இரண்டாம் வேற்றுமை உருபு முதலில் வந்து மூன்று வேற்றுமை உருபு அடுத்து வரும்.

ஆ) 4 - 2 - 3 கு - ஐ - ஆல்

- தாய் குழந்தைக்கு உணவைக் கையால் ஊட்டினாள்

இ) 4 - 2 - 7 கு - ஐ - கண் (இடம்)

இராமனுக்கு புத்தகத்தை கடையில் வாங்னேன்

ஈ) 3 - 2 - 3 ஆல் - ஐ - ஆல்

கண்ணால் பார்த்தவனைக் கையால் அடித்தேன்

### 9. விளிச்சொல் முதலில் நிற்கும்:

- இராமா இங்கே வா (சரியானது)
- இங்கே வா இராமா (தவறானது)

**உதாரணங்கள்:**

A) பாரதியார் காவியங்களைப் பாடியுள்ளார்

B) பாரதியார் பாடியுள்ளார் காவியங்களைப்

C) பாடியுள்ளார் பாரதியார் காவியங்களைப்

D) காவியங்களை பாடியுள்ளார் பாரதியார்

✓ விடை:A) பாரதியார் காவியங்களைப் பாடியுள்ளார்

A) தவிர்த்தார் செலவுகளை ஆடம்பர காந்தியடிகள்

B) செலவுகளை தவிர்த்தார் ஆடம்பர காந்தியடிகள்

C) காந்தியடிகள் செலவுகளைத் தவிர்த்தார் ஆடம்பர

D) காந்தியடிகள் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தார்

✓ விடை: D) காந்தியடிகள் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தார்

A) எதிர்க்கவோ கூடாது அவமதிக்கவோ முதியோர்களை

B) கூடாது முதியோர்களை எதிர்க்கவோ அவமதிக்கவோ

C) முதியோர்களை எதிர்க்கவோ அவமதிக்கவோ கூடாது

D) கூடாது எதிர்க்கவோ அவமதிக்கவோ முதியோர்களை

✓ விடை: C) முதியோர்களை எதிர்க்கவோ அவமதிக்கவோ கூடாது

A) அரசன் கட்டப்பட்டது கரிகாலனால் கல்லணை

B) கட்டப்பட்டது அரசன் கல்லணை கரிகாலனால்

C) கல்லணை அரசன் கட்டப்பட்டது கரிகாலனால்

D) அரசன் கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது

✓ விடை: D) அரசன் கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது

A) இந்திய அறிவியலாளர்களால் செயற்கைக் கோள் செலுத்தப்பட்டது

B) செயற்கைக்கோள் செலுத்தப்பட்டது அறிவியலாளர்களால் இந்திய

C) இந்திய செலுத்தப்பட்டது செயற்கைக்கோள் அறிவியலாளர்களால்

D) அறிவியலாளர்களால் இந்திய செலுத்தப்பட்டது செயற்கைக் கோள்

✓ விடை: A) இந்திய அறிவியலாளர்களால் செயற்கைக் கோள் செலுத்தப்பட்டது

A) பெறலாம் வெற்றி செயல்பட்டால் சோம்பலின்றி

B) சோம்பலின்றிச் செயல்பட்டால் வெற்றி பெறலாம்

C) செயல்பட்டால் சோம்பலின்றி வெற்றி பெறலாம்

D) சோம்பலின்றி வெற்றி பெறலாம் செயல்பட்டால்

✓ விடை: B) சோம்பலின்றிச் செயல்பட்டால் வெற்றி பெறலாம்

A) தன்னை நேசி பிறரைப் போல்

B) தன்னை பிறரைப் போல் நேசி

C) பிறரைப் போல் தன்னை நேசி

D) தன்னைப் போல் பிறரை நேசி

✓ விடை: D) தன்னைப் போல் பிறரை நேசி

A) ஆத்மா சக்தியால் காந்தியடிகளின் மக்கள் ஈர்க்கப்பட்டனர்

B) காந்தியடிகளின் ஈர்க்கப்பட்டனர் ஆத்மா சக்தியால் மக்கள்

C) காந்தியடிகளின் ஆத்மா சக்தியால் மக்கள் ஈர்க்கப்பட்டனர்

D) ஈர்க்கப்பட்டனர் ஆத்மா சக்தியால் மக்கள் காந்தியடிகளின்

✓ விடை: C) காந்தியடிகளின் ஆத்மா சக்தியால் மக்கள் ஈர்க்கப்பட்டனர்

A) தூய மனத்தினின்று வெளிப்படும் உணர்வே மெய்யானது.

B) மெய்யானது வெளிப்படும் உணர்வே தூய மனத்தினின்று

C) உணர்வே மெய்யானது வெளிப்படும் தூய மனத்தினின்று

D) வெளிப்படும் உணர்வே மெய்யானது தூய மனத்தினின்று

✓ விடை: A) தூய மனத்தினின்று வெளிப்படும் உணர்வே மெய்யானது.

தேர்வுக்குறிப்புகள்

A) தொழிற்கல்வியே ஆகும் ஆதாரமானது வாழ்விற்கு

B) ஆகும் தொழிற்கல்வியே ஆதாரமானது வாழ்விற்கு

C) வாழ்விற்கு ஆகும் ஆதாரமானது தொழிற்கல்வியே

D) தொழிற்கல்வியே வாழ்விற்கு ஆதாரமானது ஆகும்.

- ✓ விடை: D) தொழிற்கல்வியே வாழ்விற்கு ஆதாரமானது ஆகும்.

A) விளையும் பயிர் முளையிலேயே தெரியும்

B) விளையும் பயிர் தெரியும் முளையிலேயே

C) முளையிலேயே தெரியும் விளையும் பயிர்

D) தெரியும் பயிர் விளையும் முளையிலேயே

- ✓ விடை: A) விளையும் பயிர் முளையிலேயே தெரியும்

A) ஊட்டும் ஊழ்வினை உருத்துவந் தென்பதூஉம்

B) ஊழ்வினை உருத்துவந் தூட்டு தென்பதூஉம்

C) உருத்துவந்து ஊழ்வினை ஊட்டு மென்பதூஉம்

D) ஊழ்வினை என்பதூஉம் உருத்துவந் தூட்டும்

- ✓ விடை: B) ஊழ்வினை உருத்துவந் தூட்டு தென்பதூஉம்

A) நன்று சாலவும் தொழுவது ஆலயம்

B) சாலவும் நன்று ஆலயம் தொழுவது

C) தொழுவது ஆலயம் சாலவும் நன்று

D) ஆலயம் தொழுவது சாலவும் நன்று

- ✓ விடை: D) ஆலயம் தொழுவது சாலவும் நன்று

வினா : எழுந்தவுடன் சென்றான் மோகன் பள்ளிக்குச் காலையில்

- ✓ விடை : மோகன் காலையில் எழுந்தவுடன் பள்ளிக்குச் சென்றான்

வினா: பிறர்தர தீதும் வாரா நன்றும்

- ✓ விடை: தீதும் நன்றும் பிறர்தர வாரா.

வினா: மக்கள் வாழ்வை செயற்க்கை விட்டு இயற்கை வாழ்வை நாடுகின்றனர்

- ✓ விடை: மக்கள் செயற்கை வாழ்வை விட்டு இயற்கை வாழ்வை நாடுகின்றனர்.

வினா: பொழுது செவல் விழித்தான் கண் கூவி விடிந்தது

- ✓ விடை: செவல் கூவி கண் விழித்தான் பொழுது விடிந்தது.

வினா: சென்றார் பாரி கபிலர் மகளிரை அழைத்து

- ✓ விடை: கபிலர் பாரி மகளிரை அழைத்துச் சென்றார்.

வினா: கற்றுக்கொள் ஒன்றை கைத்தொழில்

- ✓ விடை: கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

வினா :குறைவற்ற செல்வம் நோயற்ற வாழ்வு

- ✓ விடை: நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்

வினா : பெரிய அவர் வீரர் வாள்

- ✓ விடை: அவர் பெரிய வாள் வீரர்

தேர்வுக்குறிப்புகள்

## 14. பெயர்ச்சொல்லின் வகையறிதல்

### பெயர்ச்சொல் என்றால் என்ன?

ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும். அது இடுகுறியாகவோ காரணமாகவோ இருக்கலாம்.

### இடுகுறிபெயர்:

ஒரு பொருளுக்கு எந்த காரணமும் இல்லாமல் இட்டு வழங்கிய பெயரே இடுகுறிப்பெயர்.

(எ.கா): மரம்,மலை,மண்

### காரணப்பெயர்:

ஒரு பொருளுக்கு காரணம் கருதி இட்டு வழங்கிய பெயரே காரணப்பெயர்.

(எ.கா): நாற்காலி, கருப்பன்,

### பெயர்ச்சொல்லின் வகைகள்

பெயர்ச்சொல் **ஆறு** வகைப்படும்.

- பொருட் பெயர்
- இடப் பெயர்
- காலப் பெயர்
- சினைப் பெயர்
- பண்புப் பெயர்
- தொழிற் பெயர்

| | |
|---|---|
| பொருட்பெயர் | மனிதன், ஆடு, பந்து |
| இடப்பெயர் | மதுரை , தமிழகம், இந்தியா |
| காலப்பெயர் | மணி, கிழமை, வாரம்,மாதம், இளவேனில் |
| சினைப்பெயர் | கண், காது, கை, கால் |
| பண்புப்பெயர் | கசப்பு , மஞ்சல்,அகலம், வட்டம் |
| தொழிற்பெயர் | பாடுதல், ஓடுதல் , உறங்குதல் |

தேர்வுக்குறிப்புகள்

## 1. பண்புப்பெயர்

பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும். அது **நிறம், சுவை, வடிவம், அளவு** என்னும் நான்கின் அடிப்படையில் அமையும்.

வெண்மை - நிறப்பண்புபெயர்.

இனிப்புச்சுவை - சுவைப்பண்புப்பெயர்

வட்டவடிவம் - வடிவப்பண்புப்பெயர்

| பண்புப்பெயர் | விகுதிகள் |
|---|---|
| நன்மை | மை |
| தொல்லை | ஐ |
| மாட்சி | சி |
| மாண்பு | பு |
| மழவு | உ |
| நன்கு | கு |
| நன்றி | றி |
| நன்று | று |
| நலம் | அம் |
| நன்னர் | அர் (அ) நர் |
| திட்பம் | பம் |
| (மை - விகுதி பெரும்பான்மையாக வரும்) | |

எ.கா.

செம்மைகோல், மூவேந்தர், மும்மாரி, சதுரவயல், கருங்கல், வட்டக்கிணறு, கோபம், கசப்பு, துவப்பு, முக்கோணம், சதுரம், குட்டை, செவ்வகம், உயரம், உருண்டை, செம்மை, வட்டநிலா, நீர்நகர், முக்குணம்

## 2. தொழிற்பெயர்

மாதவி ஆடல் கண்டு கோவலன் மகிழ்ந்தான்

இத்தொடரில் உள்ள பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், தொழிற்பெயர்களை அறிவோம்.

- மாதவி, கோவலன் - இவை **பெயர்ச்சொற்கள்**
- கண்டு, மகிழந்தான் - இவை **வினைச்சொற்கள்**
- ஆடல் - என்பது **தொழிற்பெயர்**

அறுவகைப் பெயர்ச்சொற்களுள் தொழில்பெயரும் ஒன்று என்பதனை முன் வகுப்பிலேயே கற்றிருக்கிறீர்கள். ஆடல் - என்பது ஆடுதல் என்னும் தொழிலைக் குறிப்பதனால், அது தொழில் பெயர் எனப்பட்டது.

ஆடு + அல் = ஆடல், அல் - என்பது தொழிற்பெயர் விகுதி இவ்வாறு தொழிற்பெயரைக் குறிக்க வரும் விகுதிகள் **தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து** போன்றவை தொழிற்பெயர் விகுதிகளாக வரும்.

வினைப்பகுதியுடன் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து வருவது விகுதி பெற்ற தொழிற்பெராகும்.

| | |
|---|---|
| பெறுதல் | பெறு + தல் |
| ஆட்டம் | ஆடு + ஆம் |
| போக்கு | போ + கு |
| பறவை | பற + வை |
| தொற்றரவு | தோற்ற + அரவு |
| பாய்த்து | பாய் + து |
| கோடல் | கோடு + இரங |
| வாழ்க்கை | வாழ் + கை |
| புளிப்பு | புளி + பு |
| வரவு | வர + உ |
| கோட்பாடு | கோள் + பாடு |
| கேளானை | கேள் + ஆனை |

தொழிற்பெயரை **முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர்** என வகைப்படுத்துவர்.

## முதனிலைத் தொழிற்பெயர்

தொழிற் பெயர் விகுதிகளே இல்லாமல், பகுதி மட்டும் வந்து, தொழிலை உணர்த்துவதற்கு முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

எ.கா. கபிலனுக்கு அடி விழுந்தது

இத்தொடரில் அடி, என்பது விகுதி பெறாமல், பகுதியாய் நின்று தொழிலை உணர்நத்துகிறது.

## முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

தொழிற் பெயரின் முதனிலையாக பகுதி திரிந்து வருவது முதனிலைத் திரிந்ததொழிற்பெயர் எனப்படும்.

எ.கா. அறிவறிந்த மக்கட் பேறு. அவனுக்கு என்ன கேடு?

இங்கு 'பெறு, கெடு' என்னும் முதனிலைகள் 'பேறு, கேடு' எனத் திரிந்து 'பெறுதல், கெடுதல் என்னும் பொருளை உணர்த்துகின்றன.

## 3. வினையாலணையும் பெயர்

- முருகன் பரிசு பெற்றான்.
- பரிசு பெற்றானைப் பாராட்டினர்

இவ்விரு தொடர்களிலும், பெற்றான் என்னும் வினைச்சொல் வந்துள்ளது.

முதல் தொடரிலுள்ள பெற்றான் என்பது, முருகன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்துள்ளது. இரண்டாவது தொடரில் உள்ள 'பெற்றானை' என்பது முருகனை குறிக்கும் பெயராக வந்துள்ளது.

இவ்வாறு வினைமுற்று, வினையைக் குறிக்காமல் வினை செய்தவவரைக் குறிப்பது வினையாலணையும் பெயர் எனப்படும். இது வினைக்குரிய காலம் காட்டும் ; பெர்க்குரிய வேற்றுமை உருபுகளையும் பெற்றுவரும்

- பெற்றான் - இறந்தகாலம்
- பெறுகின்றானை - நிகழ்காலம்
- பெறுவானை - எதிர்காலம்

பெற்றான் + ஐ என, இரண்டாம் வேற்றுமை உருபான ஐ ஏற்று வந்துள்ளமை காண்க.

தொழில்பெயர்க்கும், வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள்

| தொழில்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| தொழிலுக்குப் பெயராய் வரும் | தொழில் செய்பவருக்குப் பெயராய் வரும் |
| படர்க்கை இடத்தில் வரும் | மூவிடங்களில் வரும் |
| காலங்காட்டாது | முக்காலத்தையும் காட்டும் |

தேர்வுக்குறிப்புகள்

## 4. ஆகுபெயர்

- இந்தியா மிகப்பெரிய நாடு
- மட்டைப்பந்தில் இந்தியா வென்றது

இவ்விரு தொடர்களிலும் அமைந்துள்ள இந்தியா என்னும் சொல்லை உற்று நோக்குங்கள். முதல் தொடரில் உள்ள இந்தியா இடத்தைக் குறிக்கின்றது. இரண்டாம் தொடரில் உள்ள இந்தியா, இந்திய வீரர்களை குறிக்கின்றது. இவ்வாறு ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

### ஆகு பெயர் பதினாறு (16) வகைப்படும்

### 1. பொருளாகுபெயர் (முதலாகு பெயர்)

- ஒரு முழுப்பொருளின் பெயர், அதனைச் சுட்டாது அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது பொருளாகுபெயர் எனப்படும்.
- **சான்று** :- முல்லையைத் தொடுத்தாள்
- முதற்பொருளாகிய முல்லைக்கொடி, அதன் சினை (உறுப்பு) யாகிய **பூவுக்கு** ஆகி வந்தது.

### 2. இடவாகு பெயர்

- **சான்று** :- வகுப்பறை சிரித்தது
- வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது.

### 3. காலவாகு பெயர்

- காலப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகி வருவது காலவாகு பெயர் எனப்படும்.
- **சான்று** :- கார் அறுத்தான்
- கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது.

## 4. சினையாகு பெயர்

- சினைப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.
- **சான்று** :- மருக்கொழுந்து நட்டான்
- மருக்கொழுந்து என்னும் சினைப் (உறுப்பு) பெயர், அதன் செடிக்கு ஆகிவந்தது.

## 5. பண்பாகுபெயர்

- பண்புப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும்.
- **சான்று** :- மஞ்சள் பூசினாள்
- மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகிவந்தது.

## 6. தொழிலாகு பெயர்

- தொழில்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.
- **சான்று** :- வற்றல் தின்றான்
- வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வந்தது.

## 7. எண்ணலளவை ஆகுபெயர்

- எண்ணின் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எண்ணலளவை ஆகுபெயர் எனப்படும்.
- **சான்று** :- ஒன்று பெற்றால் ஒளிமயம்
- ஒன்று என்னும் எண்ணுப்பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்தது.

## 8. எடுத்தலளவை ஆகுபெயர்

- அளவை குறிக்காமல் அவ்வளவுடைய பொருளுக்கு ஆகி வருவது
- சான்று :-இரண்டு கிலோ கொடு
- நிறுத்தி அளக்கும் எடுத்தல் என்னும் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

### 9. முகத்தலளவை ஆகுபெயர்

- முகத்தல் அளவை குறிக்காமல் அவ்வளவுடைய பொருளுக்கு ஆகி வருவது
- **சான்று** :- அரை லிட்டர் வாங்கு
- முகந்து அளக்கும் முகத்தல் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

### 10. நீட்டலளவை ஆகுபெயர்

- நீட்டல் அளவைப் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது நீட்டலளவை ஆகுபெயர் எனப்படும்.
- **சான்று** :- ஐந்து மீட்டர் வெட்டினான்
- நீட்டி அளக்கும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

### 11. சொல்லாகு பெயர் ஆகுபெயர்

- **சான்று** :- வள்ளுவர் சொல் வாழ்க்கைக்கு இனிது.
- இத்தொடரில் வள்ளுவர் சொல் என்பது, சொல்லைக் குறிக்காது பொருளுக்குப் பெயராகி வந்தால், இது சொல்லாகி பெயர்

### 12. தானியாகு பெயர் ஆகுபெயர்

- **சான்று** :- பாலை இறக்கு
- பாலின் பெயர் பாலைக் குறிக்காமல் பாத்திரத்தை குறிக்கிறது.
- ஓர் இடத்தில் உள்ள பொருளின் பெயர் (தானி) அது சார்ந்திருக்கும் இடத்திற்குப் (தானித்திற்கு) பெயராகி வருவது தானியாகு பெயர்.

✓ இடம், பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயர்
✓ பொருள், இடத்திற்கு ஆகி வருவது தானியாகுபெயர்

### 13. கருவியாகு பெயர்

- கருவியின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகி வருவது கருவியாகு பெயர் எனப்படும்.
- **சான்று** :- வானாெலி கேட்டு மகிழ்ந்தனர்
- வானாெலி என்னும் கருவி, அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது

### 14. காரியவாகு பெயர்

- சான்று :- நான் சமையல் கற்றேன்.
- இங்கு சமையல் என்னும் காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்குப் (கருவிக்கு) பெயராகி வருவது காரியவாகு பெயர்
- **காரியவாகு பெயர்** : காரியப்பொருள் கருவிப்பொருள் கருவிப்பொருளுக்கு ஆகி வருவது (எ-டு) நன்னூல் கற்றேன்.

### 15. கருத்தாவாகு பெயர்

- **சான்று** :- திருவள்ளுவரைப் படித்துப்பார்.
- இத்தொடரில் திருவள்ளுவர் என்பது, அவரால் இயற்றப்பெற்ற நூலுக்கு ஆகி வந்தால், கருத்தாவாகு பெயராயிற்று

### 16. உவமையாகு பெயர்

ஒருவரைப் பாரத்து, நாரதார் வருகிறார் எனல், இத்தொடரில் நாரதர் என்னும் பெயர் அவரைக் குறிக்காமல், அவரைப் பாேன்ற (கலகமூட்டுபவர்) வேற்றொருவருக்கு ஆகி வந்து. அதனால் இஃது உவமையாகு பெயராயிற்று.

பொருள் முதல் ஆறோடு அளவை சொல்தானி
கருவி காரியம்கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகுபெயரே - நன்னூல் - 290

| | |
|---|---|
| பொருளாகுபெயர் | தாமரைமுகம் |
| முதலாகுபெயர் | மல்லிகை மாலை (மலர்) |
| இடவாகு பெயர் | ஊர் திரண்டது |
| | உலகம் விழித்துக் கொண்டது |
| காலவாகு பெயர் | கார் அறுத்தார் |
| சினையாகு பெயர் | வெற்றிலை நட்டான் |
| பண்பாகு பெயர் | வெள்ளை அடித்தான் |
| தொழிலாகு பெயர் | பொங்கல் உண்டான் |
| தனியாகுபெயர் | கழில் பணிந்தான் (தானி - இடத்தின் மேல் உள்ள பொருள் |
| கருவியாகு பெயர் | குழல்கேட்டு மகிழ்ந்தான் |
| | குறள் கற்றான் |
| உவமை ஆகுபெயர் | காளை வந்தான |
| காரியவாகு பெயர் | நீரின்றிப் பைங்கூழ் வாடியது |
| | களவியல் படித்தான் |
| கருத்தா ஆகு பெயர் | திருவள்ளுவர் கற்றான் |
| சொல்லாகு பெயர் | நூலுக்கு உரை கண்டான் |
| | பாட்டுக்கு உரை எழுதுக |
| எண்ணல் அளவை பெயர் | பழம் ஒன்று கொடு |
| எடுத்தல் அளவை பெயர் | கிலோ என்ன விலை? |
| முகத்தல் அளவை பெயர் | இரண்டு லிட்டர் கொடு |
| நீட்டல் அளவை ஆகுபெயர் | உடுப்பது நான்கு முழம் இரண்டு மீட்டர் வேண்டும் |
| பொருளாகுபெயர் | தாமரை போன்ற முகம் |
| இடவாகு பெயர் | ஊர் சிரித்தது |
| காலவாகு பெயர் | காரத்திகை பூத்தது |
| பண்பாகு பெயர் | நீலம் சூடினாள் |
| தொழிலாகு பெயர் | எழுத்து எழுதினேன் |
| கருவியாகு பெயர் | திருவாய்மொழி ஓதினான் |
| காரியவாகு பெயர் | இலக்கணம் வாங்கினேன் |
| கருத்தா ஆகுபெயர் | தொல்காப்பியம் படித்தேன் |
| உவமையாகு பெயர் | கம்பன் வாய் தேன்மொழியும் |
| எண்ணல் ஆகுபெயர் | தலைக்கு ஒரு பழம் கொடு |
| தொழிலாகு பெயர் | வற்றல் உண்டேன் |
| நீட்டல் அளவை ஆகுபெயர் | உடுப்பது நான்கு முழம் |
| முகத்தல் அளவை ஆகுபெயர் | உண்பது நாழி |
| கருவியாகு பெயர் | திருவாசகம் படித்தான் |
| தானியாகு பெயர் | கீரையை இறக்கி வை |
| உவமையாகு பெயர் | பாய்வதில் அவள் புலி |
| இடவாகு பெயர் | பண்பு பாராட்டும் உலகு |
| பண்பாகுபெயர் | வெள்ளை அடித்தார் |

| | |
|---|---|
| எண்ணலளவையாகு பெயர் | கால் வலித்த்து |
| சொல்லாகு பெயர் | தம்பி என் சொல்லைக் கேட்பான் |
| தானியாகு பெயர் | பாலை வண்டியில் ஏற்று |
| கருவியாகு பெயர் | குடி கெட்டது |
| கருத்தாகு பெயர் | இவருக்கு பரிமேலழகர் மனப்பாடம் |
| உவமையாகு பெயர் | பாவை வந்தான் |
| பொருளாகு பெயர் | வெள்ளத் தனைய மலர் நீர்மட்டம் |
| சினையாகு பெயர் | எம்பும் உரியர் பிறர்க்கு |
| பண்பாகு பெயர் | விருந்த ஓம்பி |
| பொருளாகு பெயர் | மருக்கொழுந்து நட்டனர் |
| சினையாகு பெயர் | கைகள் வேலை செய்தன |

தேர்வுக்குறிப்புகள்

## வேற்றுமை உருபு ஏற்கும் போது திரியும் பெயர்கள்

### 5. தன்மைப்பெயர்

- பேசுவோரையும் அவன் சார்ந்தோரையும் குறிக்கும் பெயர் தன்மைப்பெயர்
- யான் என்பது என்றும்
- யாம் என்பது என்று
- நாம் என்பது நாம் என்றும் திரிந்து வேற்றுமை உருபுளை ஏற்கும்

| வேற்றுமைப் பெயர் | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| | ஐ | ஆல், ஒடு | கு | இன் | அது | கண் |
| யான் | என்னை | என்னோடு, என்னால் | எனக்கு | என்னின் | எனது | என்னிடம் |
| யாம் | எம்மை | எம்மொடு, எம்மால் | எமக்கு | எம்மின் | எமது | எம்மிடம் |

### 6. முன்னிலைப்பெயர்

- பேசுவோரின் சொல்லையும் முன்னின்று கேட்போரையும் அவர் சார்ந்தோரையும் உணர்த்தி வரும் பெயர் முன்னிலைப் பெயர்.
- நீ - முன்னிலை ஒருமைப்பெயர் (நீங்கள், நீயிர், எல்லர், நீவிர்)
- முன்னிலைப் பன்மைப் பெயர்கள் (நீ என்பது நீ என்றும்)
- நீர் என்பது நும் என்றும், நீங்கள் என்பது நுங்கள் என்றும் திரிந்து வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

| வேற்றுமைப் பெயர் | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| நீ | நின்னை | நின்னோடு, நின்னால் | நினைக்கு | நின்னின் | நினது | நின்னிடம் |
| நீ | உன்னை | உன்னோடு, உன்னால | உனக்கு | உன்னின் | உனது | உன்னிடம் |
| நீர் | நும்மை | நும்மாடு, நும்மால் | நுமக்கு | நும்மின் | நுமது | நும்மிடம் |

### 7. படர்க்கைப்பெயர்

- தன்மனை, முன்னிலை ஒழிந்த பெயர்கள் எல்லாம் படக்கை பெயர்கள். இதுவும் ஒருமை பன்மை என 2 வகைப்படும்.
- ராசன் இல்லம் - படர்க்கை ஒருமைப்பெயர்
- பசுக்கள், மனிதர்கள் - படர்க்கைப் பண்மைப் பெயர்
- தான் என்பது தன் என்றும் தாம் என்பது தம் என்றும் திரிந்து வேற்றுமை உருமை ஏற்கும்

| வேற்றுமைப் பெயர் | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| தான் | தன்னை | தனக்கு | தன்னின் | தனது | தன்னிடம் | தன்னால் |
| தாம் | தம்மை | தம்மொடு | தமக்கு | தம்மின் | தமது | தம்மிடம் |

### 8. பெயர்ச்சொல்

- பொருள் உணர்த்தி வேற்றுமை உருபுகளை ஏற்று நிற்பது பெயர்ச்சொல்
- வினையாலணையும் பெயர் தவிர மற்ற பெயர்ச்சொற்கள் காலம் காட்டாது
- இது இடுகுறி அல்லது காரணப் பெயராக இருக்கும்

### 9. இடுகுறிப்பெயர்

- காரணமின்றி முன்னோர் வழங்கிய பெயர்
- எ.கா.:- மண், மலை, மடு, கல்

### 10. காரணப்பெயர்

- வயிறு
- சுவர் (சுவல், தோள்)
- மரம் (தரையில் மருவி இருப்பது)
- கும்மி (குழுமியடித்தல்)
- குறிஞ்சி (மலைப்பகுதி ஊர்)

**11. காரண இடுகுறிப்பெயர்**

- ஒரு பெயர் காரணமுடையதாக இருப்பின் அது அக்காரணமுடைய பலவற்றுக்கும் சொல்லாது ஒன்றனுக்கு உரித்தாய் வருவது.
- எ.கா.:- காற்றாடி, பட்டம், நாற்காலி

**12. பொருட்பெயர்**

- பொருளைக் குறிப்பது. இது உயிர்திணை, அஃறிணை என இரு திணையாக இருக்கும்
- உயர் திணை - அரசன், தொண்டன், கண்ணன், ராதா, குமரன்
- அஃறிணை - பசு, குரங்கு, சேவல், நரி, மேசை

**13. இடப்பெயர்**

- இடத்தைக் குறிப்பதாகும்
- எ.கா.:- பள்ளி, சேலம், கல்லூரி, ஊர்

**14. காலப்பெயர்**

- காலம் காட்டுவது
- எ.கா.:- பகல், காலை, தை, புதன்கிழமை

**15. சினைப்பெயர்**

- உறுப்புகளை காட்டுவது
- எ.கா.:- கை, தண்டு, பழம், கால், வேர், பல்

**16. குடிப்பெயர்**

- சாதியைக் குறிப்பது
- எ.கா.:- உழவன், குறவன், ஆயன், மறவன், பரதவன், வாணிபன்

**17. கிளைப்பெயர்**

- உறவுகளைக் குறிப்பது
- எ.கா.:- அண்ணன், மாமி, நாத்தனார், தங்கை, மனைவி

## 18. அளவைபெயர்

- நீட்டல், முகத்தல், எடுத்தல், எண்ணல் என நால்வகை அளவின் பெயர் குறிப்பது அளவுப் பெயராகும்.
- எ.கா.:- பத்து, ஆழாக்கு, வீசை, கழஞ்சு, படி, கிராம், மீட்டர்

## 19. சுட்டுப்பெயர்

- சுட்டின் அடியாக ஒருவரைச் சுட்டுவதற்குப் பயன்படும் பெயர்
- எ.கா.:- இவன், அவன், அது, அங்கே, உவன், இது

## 20. தொகுதிப்பெயர்

தொகுதியைக் குறிக்கும் பெயராகும். இது ஒரு பெயர் பொதுசொல் என்றும் பலவின் இணைந்த ஒரு சொல் எனவும் வழங்கப்படும்.

- சேனை - பல வீரர் அடங்கியது
- குழு - பல மக்கள் அடங்கியது
- மாலை - பல மலர்கள் அடங்கியது
- அடிசில் - உண்பன தின்பனவற்றைக் குறிப்பது

தேர்வுக்குறிப்புகள்

## மாதிரி வினா

1. நுனித்து' என்ற சொல்லை பகுபத உறுப்பிலக்கணப்படி பிரித்தால் வினையெச்ச விகுதியாக வருவது எது ?
   A) து
   B) த்
   C) நுனி
   D) உ
2. அளவை ஆகுபெயர்கள் எத்தனை வகைப்படும் ?
   A) நான்கு
   B) ஐந்து
   C) ஆறு
   D) பதினாறு
3. பொருத்துக
   1. பொருட்பெயர்ப் பகுபதம் - அ) சென்னையான்
   2. இடப்பெயர்ப் பகுபதம் - ஆ) மூக்கன்
   3. காலப்பெயர்ப் பகுபதம் - இ) பொன்னன்
   4. சினைப்பெயர்ப் பகுபதம் - ஈ) சித்திரையான்

   1. 2. 3. 4.

   A. இ அ ஈ ஆ
   B. இ உ அ ஆ
   C. ஆ அ ஈ இ
   D. C இ ஈ ஆ
4. பெயர்ச்சொல் வகையறிக - " வாழ்க்கை "
   A) பொருட்பெயர்
   B) இடப்பெயர்
   C) காலப்பெயர்
   D) தொழிற்பெயர்
5. தவறான கூற்றினை கண்டறிக
   A. இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும்
   B. பிரித்தால் பொருள் தராத சொல் பகுபதம் எனப்படும்
   C. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறன் அடியாகத்தோன்றுவது பெயர்ப்பகுபதம்.
   D. பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பகுக்கப்படும் வினைமுற்று,வினைப்பகுபதம் எனப்படும்.

தேர்வுக்குறிப்புகள்

6. பெயர்ச்சொல் வகையறிக - " ஊதியம் "
   - A) பொருட்பெயர்
   - B) இடப்பெயர்
   - C) காலப்பெயர்
   - D) தொழிற்பெயர்
7. பெயர்ச்சொல் வகையறிக - " பொருப்பு "
   - A) பொருட்பெயர்
   - B) இடப்பெயர்
   - C) காலப்பெயர்
   - D) தொழிற்பெயர்
8. பொருத்துக
   1. தொழிற்பெயர் - அ) அகழ்வார்
   2. முதனிலை திரிந்த தொழிற்பெயர் - ஆ) வருதல்
   3. பண்புப் பெயர் - இ) சூடு
   4. வினையாலணையும் பெயர் - ஈ) நன்றி

   1. 2. 3. 4.
   - A. இ அ ஈ ஆ
   - B. இ உ அ ஆ
   - C. ஆ இ ஈ அ
   - D. C இ ஈ ஆ
9. பெயர்ச்சொல் வகையறிக - "சிதைவு"
   - A) பொருட்பெயர்
   - B) இடப்பெயர்
   - C) காலப்பெயர்
   - D) தொழிற்பெயர்
10. எவ்வகை ஆகுபெயர் என கண்டறி - " தயிரை இறக்கு"
    - A) பொருளாகுபெயர்
    - B) அளவையாகு பெயர்
    - C) தானியாகு பெயர்
    - D) கருத்தாவாகு பெயர்
11. தொல்காப்பியர் குறிப்பிடும் ஆகுபெயர்கள் எத்தனை?
    - A) ஏழு
    - B) எட்டு
    - C) பத்து
    - D) பதினைந்து

தேர்வுக்குறிப்புகள்

12. பொருத்துக

1. பாலை இறக்கு - அ) நீட்டலளவையாகுபெயர்
2. வள்ளுவர் சொல் - ஆ) தொழிலாகுபெயர்
3. வற்றல் உண்டான் - இ) தானியாகுபெயர்
4. 2 மீட்டர் கொடு - ஈ) சொல்லாகுபெயர்

1. 2. 3. 4.

A. இ ஈ ஆ அ
B. இ உ அ ஆ
C. ஆ இ ஈ அ
D. அ இ ஈ ஆ

13. பவணந்தி முனிவர் குறிப்பிடும் ஆகுபெயர்கள் எத்தனை ?

A) ஏழு
B) எட்டு
C) பத்து
D) பதினைந்து

14. தொழிற்பெயர் விகுதி அல்லாது எது ?

A) ஐ
B) அரவு
C) ஆணை
D) அர்

15. பண்புப் பெயரைக் கண்டறிக ?

A) புலவி
B) கொலை
C) பறவை
D) மழவு

16. பண்புப் பெயராகவும் தொழிற் பெயராகவும் அமைந்த சொல்லைக் கண்டறிக

A) கொலை
B) புளிப்பு
C) வாழ்க்கை
D) ஒழுக்கம்

17. நீர் என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது எவ்வாறு திரியும்?

A) நும், உம்
B) நுங்கள், உங்கள்
C) தன், தம்
D) தங்கள்

தேர்வுக்குறிப்புகள்

18. கருவிப் பொருளைக் குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்திற்கு ஆகி வருவது எது?

A) காரியாகுபெயர்
B) கருவியாகு பெயர்
C) உவமையாகு பெயர்
D) கருத்தாவாகு பெயர்

19. தங்கண் என்ற சொல் எவ்வகைப் பெயர் ?

A) தன்மைப் பெயர்
B) முன்னிலைப் பெயர்
C) படர்க்கைப் பெயர்
D) தொழிற்பெயர்

20. உம் என்னும் இடைச்சொல் எந்த பொருள் குறித்து வரும் ?

A) எதிர்மறை
B) சிறப்பு
C) எச்சம்
D) இவையனைத்தும்

21. கொல் என்ற சொல் எவ்வகையைச் சார்ந்தது ?

A) பெயர்ச்சொல்
B) வினைச் சொல்
C) இடைச் சொல்
D) உரிச் சொல்

22. துய்ப்பேம் எனினே தப்புந பலவே - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு அறிக

A) உரிச்சொல் தொடர்
B) வினைத் தொகை
C) தன்மைப் பன்மை வினைமுற்று
D) பண்புத் தொகை

23. தன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும் போது திரிவது தொடர்பான தவறான கூற்றினை கண்டறிக

A) யான் என்னும் பெயர் என் எனத் திரியும்
B) யாம் என்னும் பெயர் எம் எனத் திரியும்
C) நாம் என்னும் பெயர் நும் எனத் திரியும்
D) யாங்கள், நாங்கள் என்னும் பெயர் எங்கள் எனத் திரியும்

24. பொருந்தாத இணையை கண்டறிக

A) பெயர்ச்சோல் - மயிலம்
B) வினைச் சொல் - நடந்தான்
C) இடைச்சோல் - நட
D) உரிச்சொல் - சால

தேர்வுக்குறிப்புகள்

25. பொருத்துக

1. துயில் - அ) வினைத் திரிசொல்
2. கேணி - ஆ) பெயர்ச் திரிசொல்
3. புஷ்பம் - இ) திசைச் சொல்
4. விளி - ஈ) வடசொல்

1. 2. 3. 4.

A. அ இ ஆ ஈ
B. இ அ ஈ ஆ
C. ஆ இ ஈ அ
D. அ இ ஈ ஆ

26. எவ்வகை ஆகுபெயர் எனக் கண்டறிக - கம்பரைப் படித்தேன்

A) உவமையாகு பெயர்
B) காரியவாகு பெயர்
C) கருத்தாவாகு பெயர்
D) உவமையாகு பெயர்

27. பொருத்துக

1. எழிலி - அ) தொழிற் பெயர்
2. நொடி - ஆ) பொருட் பெயர்
3. தலை - இ) சினைப் பெயர்
4. கற்பித்தல் - ஈ) காலப் பெயர்

1. 2. 3. 4.

A. அ ஆ இ ஈ
B. இ உ அ ஆ
C. ஆ ஈ இ அ
D. அ இ ஈ ஆ

28. இனமுள்ள அடைமொழிச் சொல்லைக் காண்க.

A) வெண்ணிலவு
B) கருங்காக்கை
C) செங்கதிரோன்
D) செந்தாமரை

29. பொருந்தாத இணையைக் கண்டறிக ?

A) கோங்கு - மென்தொடர் குற்றியலுகரம்
B) குத்து - வன்தொடர் குற்றியலுகரம்
C) பாலாறு - நெடில்தொடர் குற்றியலுகரம்
D) கொய்பு - இடைத் தொடர் குற்றியலுகரம்



தேர்வுக்குறிப்புகள்

30. இலக்கணக் குறிப்பு தருக - திருக்குறள்.
   A) அடையடுத்த காரியவாகுபெயர்
   B) காரியவாகுபெயர்
   C) அடையடுத்த கருவியாகுபெயர்
   D) இவற்றில் எதுவுமில்லை
31. ஒற்றளபெடை சொல் வந்துள்ள தொடரைக் காண்க.
   A) எஃஃகிலங்கிய கையரா யின்னுயிர்
   B) உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
   C) உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
   D) அழாஅல் தோழி அழுங்குவர் செலவே
32. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
   A) பெறாஅ
   B) எடுப்பதும்
   C) கொடுப்பதூஉம்
   D) தழீஇ
33. பெயர்ச்சொல் வகை அறிக - கண்ணன்
   A) சினைப்பெயர்
   B) இடப்பெயர்
   C) காலப்பெயர்
   D) தொழிற்பெயர்
34. பெயரெச்சத் தொடரை வினைமுற்றுத் தொடராக மாற்றுக - மிகவும் இனித்த பழம்
   A) பழம் மிகவும் இனிக்குமா
   B) பழம் மிகவும் இனித்தது
   C) பழம் இனித்தா மிகவும்
   D) இனித்த பழம் மிகவும்
35. ஒருபொருட்பன்மொழி அல்லாத சொல்லைக் காண்க.
   A) தாமரை
   B) உயர்ந்தோங்கி
   C) மீமிசை
   D) குழிந்தாழ்ந்து
36. "கதிர்வேல் வெற்றிலை தின்றான்" என்ற தொடர் எதற்கு பொருத்தமுடையதாக இருக்கும் ?
   A) அடுக்குத் தொடர்
   B) பொருளாகுபெயர்
   C) இனங்குறித்தல்
   D) காரியவாகு பெயர்

37. குறில் எழுத்து நெடிலாக மாறி பின் அளபெடுக்கும் அளபெடை எது ?
   A) இன்னிசை அளபெடை
   B) செய்யுளிசை அளபெடை
   C) சொல்லிசை அளபெடை
   D) ஒற்றளபெடை

38. ஒன்றொழி பொதுச்சொல் அல்லாத தொடரைக் காண்க.
   A) பசுமாடு பால் கறக்கிறது
   B) வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர்
   C) நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர்
   D) இம்மாடு வயலில் உழுகிறது

39. உண்பது நாழி - அடிக்கோடிட்ட சொல்லின் பெயர்ச்சொல் வகையறிக
   A) பொருட்பெயர்
   B) இடப் பெயர்
   C) ஆகுபெயர்
   D) சினைப் பெயர்

40. பூதி சாத்த - என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பைக் காண்க
   A) வினைத் தொகை
   B) அண்மொழித் தொகை
   C) இரண்டாம் வேற்றுமைத் தொகை
   D) உரிச்சொற்றொடர்

41. அளபெடை எத்தனை வகைப்படும் ?
   A) மூன்று
   B) நான்கு
   C) ஐந்து
   D) இரண்டு

42. ஐகாரம் மற்றும் ஔகாரத்திற்கு இன எழுத்துக்களாக அமைவது எது ?
   A) இ, ஒ
   B) உ, C
   C) இ, உ
   D) உ, இ

43. பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை எது?
   A) இன்னிசை அளபெடை
   B) செய்யுளிசை அளபெடை
   C) சொல்லிசை அளபெடை
   D) ஒற்றளபெடை

தேர்வுக்குறிப்புகள்

44. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
 A) வாழ்ழ்க்கை
 B) சங்ங்கு
 C) நெஞ்ஞ்சு
 D) கண்ண்
45. பெயர்ச்சொல் வகையறிக - பொறை
 A) பண்புப் பெயர்
 B) காலப்பெயர்
 C) பொருட்பெயர்
 D) தொழிற்பெயர்
46. வினைமுற்று வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறிப்பதனை எவ்வாறு அழைக்கலாம் ?
 A) வினையாலணையும் பெயர்
 B) குறிப்பு வினைமுற்று
 C) அன்மொழித் தொகை
 D) தெரிநிலை வினைமுற்று
47. தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல் பகுதி மட்டும் வந்து, தொழிலை உணர்த்துவது ?
 A) முதனிலைத் தொழிற்பெயர்
 B) வினையாலணையும் பெயர்
 C) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
 D) இவற்றில் எதுவுமில்லை.
48. தொழிப்பெயர் குறித்த தவறான கூற்றினை கண்டறிக.
 A) தொழிற்பெயர் விகுதிகள் உண்டு
 B) தொழிலுக்க பெயராய் வரும்.
 C) மூவிடத்திலும் வரும்
 D) காலம் காட்டாது.
49. பண்புப் பெயர் எதன் அடிப்படையில் தோன்றும் ?
 A) நிறம், சுவை
 B) அளவு, வடிவம்
 C) நிறம், அளவு, வடிவம்
 D) A மற்றும் B
50. பொருள், இடத்திற்கு ஆகிவருவது எவ்வகை ஆகுபெயர் ?
 A) சொல்லாகு பெயர்
 B) காலவாகு பெயர்
 C) தானியாகு பெயர்
 D) இடவாகு பெயர்

51. ஆகுபெயரின் வகையறிக - நூற்கு உரை செய்தான் ?
   A) சொல்லாகு பெயர்
   B) காலவாகு பெயர்
   C) தானியாகு பெயர்
   D) இடவாகு பெயர்
52. பொருத்துக
   1. தொழிற்பெயர் - அ) அகழ்வார்
   2. முதனிலை திரிந்த தொழிற்பெயர் - ஆ) வருதல்
   3. பண்புப் பெயர் - இ) சூடு
   4. வினையாலணையும் பெயர் - ஈ) நன்றி
      1. 2. 3. 4.
   A. இ அ ஈ ஆ
   B. இ உ அ ஆ
   C. ஆ இ ஈ அ
   D. C இ ஈ ஆ
53. பெயர்ச்சொல் வகையறிக - நோன்றல் ?
   A) பண்புப் பெயர்
   B) காலப்பெயர்
   C) பொருட்பெயர்
   D) தொழிற்பெயர்
54. பெட்டி என்பது -------- ஆகும்.
   A) இடுகுறிப்பெயர்
   B) காரணப்பெயர்
   C) சுட்டுப்பெயர்
   D) இவற்றில் எதுவுமில்லை
55. பெயர்ச்சொல் வகை அறிக - விதை
   A) தொழிற்பெயர்
   B) பொருட்பெயர்
   C) காலப்பெயர்
   D) சினைப்பெயர்
56. பெயர்ச்சொல் வகை அறிக - சதுரவீடு
   A) தொழிற்பெயர்
   B) பொருட்பெயர்
   C) குணப்பெயர்
   D) சினைப்பெயர்



தேர்வுக்குறிப்புகள்

57. பெயர்ச்சொல் வகை அறிக - வீடு
   A) இடப்பெயர்
   B) பொருட்பெயர்
   C) குணப்பெயர்
   D) சினைப்பெயர்
58. பூங்கொடி பூப் பறிக்கிறாள். இத்தொடரிலுள்ள 'பூ' என்பது ------ பெயர்.
   A) இடப்பெயர்
   B) பொருட்பெயர்
   C) குணப்பெயர்
   D) சினைப்பெயர்
59. பெயர்ச்சொல் வகை அறிக - நுசுப்பு
   A) இடப்பெயர்
   B) பொருட்பெயர்
   C) குணப்பெயர்
   D) சினைப்பெயர்
60. பெயர்ச்சொல் வகை அறிக - முல்லையைத் தொடுத்தாள்
   A) சினையாகு பெயர்
   B) காலவாகு பெயர்
   C) இடவாகு பெயர்
   D) பொருளாகு பெயர்
61. பொருந்தாத இணையை கண்டறிக
   A. இடுகுறிப் பொதுப்பெயர் - மா
   B. இடுகுறிச் சிறப்புப்பெயர் - பனை
   C. காரணப் பொதுப்பெயர் - பறவை
   D. காரணச் சிறப்புப்பெயர் - மரங்கொத்தி
62. பெயர்ச்சொல் வகை அறிக - வகுப்பறை சிரித்தது
   A) சினையாகு பெயர்
   B) காலவாகு பெயர்
   C) இடவாகு பெயர்
   D) பொருளாகு பெயர்
63. பெயர்ச்சொல் வகை அறிக - கார் அறுத்தான்
   A) சினையாகு பெயர்
   B) காலவாகு பெயர்
   C) இடவாகு பெயர்
   D) பொருளாகு பெயர்

தேர்வுக்குறிப்புகள்

64. பண்புப்பெயர் அல்லாதது எது ?
  A) மாட்சி
  B) தொல்லை
  C) செலவு
  D) செய்கை
65. தொழிற்பெயர் அல்லாதது எது ?
  A) நன்று
  B) உண்டி
  C) கொடுமை
  D) ஆண்மை
66. பெயர்ச்சொல் வகை அறிக - மருக்கொழுந்து நட்டான்
  A) சினையாகு பெயர்
  B) காலவாகு பெயர்
  C) இடவாகு பெயர்
  D) பொருளாகு பெயர்
67. பெயர்ச்சொல் வகை அறிக - மஞ்சள் பூசினாள்
  A) சினையாகு பெயர்
  B) காலவாகு பெயர்
  C) இடவாகு பெயர்
  D) பண்பாகு பெயர்
68. பெயர்ச்சொல் வகை அறிக - வளையல் ?
  A) காரண பொதுப்பெயர்
  B) இடுகுறி சிறப்புப் பெயர்
  C) இடுகுறி பொதுப்பெயர்
  D) காரண சிறப்புப்பெயர்
69. பெயர்ச்சொல் வகை அறிக - என்னைப்பெற்ற தாயார் கோவில்
  A) பொருட்பெயர்
  B) காலப்பெயர்
  C) இடப்பெயர்
  D) தொழிற்பெயர்
70. பெயர்ச்சொல் வகை அறிக - ஊழி
  A) பொருட்பெயர்
  B) காலப்பெயர்
  C) இடப்பெயர்
  D) தொழிற்பெயர்

தேர்வுக்குறிப்புகள்

71. பெயர்ச்சொல் வகை அறிக - வற்றல் தின்றான்
   A) தொழிலாகு பெயர்
   B) காலவாகு பெயர்
   C) இடவாகு பெயர்
   D) பொருளாகு பெயர்
72. பெயர்ச்சொல் வகை அறிக - வானொலி கேட்டு மகிழ்ந்தனர்
   A) காரியவாகு பெயர்
   B) கருவியாகுபெயர்
   C) இடவாகு பெயர்
   D) பொருளாகு பெயர்
73. பெயர்ச்சொல் வகை அறிக - பைங்கூழ் வளர்ந்தது
   A) காரியவாகு பெயர்
   B) கருவியாகுபெயர்
   C) இடவாகு பெயர்
   D) பொருளாகு பெயர்
74. பெயர்ச்சொல் வகை அறிக - அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன்.
   A) காரியவாகு பெயர்
   B) கருவியாகுபெயர்
   C) கருத்தாவாகு பெயர்
   D) பொருளாகு பெயர்
75. பெயர்ச்சொல் வகை அறிக - ஒன்று பெற்றால் ஒளி மயம்
   A) சினையாகு பெயர்
   B) முகத்தலளவை ஆகுபெயர்
   C) எண்ணலளவை ஆகுபெயர்
   D) எடுத்தலளவை ஆகுபெயர்
76. ஆகுபெயரின் வகையறிக - அரை லிட்டர் கொடு
   A) சினையாகு பெயர்
   B) முகத்தலளவை ஆகுபெயர்
   C) எண்ணலளவை ஆகுபெயர்
   D) எடுத்தலளவை ஆகுபெயர்
77. ஆகுபெயரின் வகையறிக - ஐந்து மீட்டர் வெட்டினான்
   A) சினையாகு பெயர்
   B) முகத்தலளவை ஆகுபெயர்
   C) நீட்டலளவை ஆகுபெயர்
   D) எடுத்தலளவை ஆகுபெயர்

78. காவியா காலை 9 மணிக்கு பள்ளிக்குச் சென்று பசுமையான புல்வெளியில் அமர்ந்தாள்- இத்தொடரில் உள்ள பண்புப்பெயர்ச் சொல் எது ?
   A) காலை
   B) காவியா
   C) புல்வெளி
   D) பசுமை
79. இடுகுறி சிறப்புப் பெயர் எது ?
   A) வயல்
   B) வாழை
   C) மீன்கொத்தி
   D) பறவை
80. ஆகுபெயர் அமைந்த தொடரைக் காண்க.
   A) நீரின்றி அமையா உலகு
   B) மதுரை மக்கள் இரவிலும் வணிகம் செய்கின்றனர்
   C) இந்திய வீரர்கள் எளிதில் வென்றனர்
   D) நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கத்தில் உள்ளவர்கள் சிரித்தனர்
81. பெயர்ச்சொல்லின் வகை அறிக - குறவன் ?
   A) தொழிற்பெயர்
   B) அளவுப் பெயர்
   C) ஆகுபெயர்
   D) குடிப்பெயர்
82. பெயர்ச்சொல்லின் வகை அறிக - அரசன்
   A) தொழிற்பெயர்
   B) அளவுப் பெயர்
   C) பொருட்பெயர்
   D) குடிப்பெயர்
83. பெயர்ச்சொல்லின் வகை அறிக - கந்தன்
   A) தொழிற்பெயர்
   B) ஆகு பெயர்
   C) பொருட்பெயர்
   D) குடிப்பெயர்
84. பெயர்ச்சொல்லின் வகை அறிக - பழி நாணுவானை
   A) ஆகு பெயர்
   B) வினையாலனையும் பெயர்
   C) தொழிற்பெயர்
   D) பொருட்பெயர்

85. பெயர்ச்சொல்லின் வகை அறிக - நாங்கள்
   A) தன்மைப் பெயர்
   B) முன்னிலைப் பெயர்
   C) படர்க்கைப் பெயர்
   D) குணப்பெயர்
86. பெயர்ச்சொல்லின் வகை அறிக - பாறை
   A) இடுகுறிப்பெயர்
   B) காரணப்பெயர்
   C) காலப்பெயர்
   D) சினைப்பெயர்
87. பெயர்ச்சொல்லின் வகை அறிக - புலம்மிக்கவர்
   A) வினையாலனையும் பெயர்
   B) காலப்பெயர்
   C) கிளைப்பெயர்
   D) ஆகுபெயர்
88. பெயர்ச்சொல்லின் வகை அறிக - கதம்பம்
   A) பொதுப்பெயர்
   B) பண்புப் பெயர்
   C) அளவுப் பெயர்
   D) தொகுதிப்பெயர்
89. பெயர்ச்சொல்லின் வகை அறிக - களைத்தல்
   A) ஆகு பெயர்
   B) வினையாலனையும் பெயர்
   C) தொழிற்பெயர்
   D) பொருட்பெயர்
90. பெயர்ச்சொல்லின் வகை அறிக - கண்டவர்
   A) ஆகு பெயர்
   B) வினையாலனையும் பெயர்
   C) தொழிற்பெயர்
   D) பொருட்பெயர்
91. பெயர்ச்சொல்லின் வகை அறிக - நடுநீசி
   A) பண்புப் பெயர்
   B) தொழிற்பெயர்
   C) சினைப்பெயர்
   D) இடப்பெயர்

92. பெயர்ச்சொல்லின் வகை அறிக - முக்காலி
    A) முன்னிலைப் பெயர்
    B) காரணப் பெயர்
    C) படர்க்கைப் பெயர்
    D) இடுகுறிப் பெயர்
93. பெயர்ச்சொல்லின் வகை அறிக - சிவிகை
    A) இடப்பெயர்
    B) காலப்பெயர்
    C) பொருட்பெயர்
    D) சினைப்பெயர்
94. பெயர்ச்சொல்லின் வகை அறிக - திருஞானம்
    A) தன்மைப்பெயர்
    B) முன்னிலைப் பெயர்
    C) படர்க்கைப் பெயர்
    D) வினையாலனையும் பெயர்
95. பெயர்ச்சொல்லின் வகை அறிக - பாடு, தேடு, பேறு
    A) சினைப்பெயர்
    B) ஆகுபெயர்
    C) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
    D) வினையாலனையும் பெயர்
96. பெயர்ச்சொல்லின் வகை அறிக - அண்ணன்
    A) கிளைப்பெயர்
    B) காலப்பெயர்
    C) சினைப்பெயர்
    D) இடப்பெயர்
97. பெயர்ச்சொல்லின் வகை அறிக - மாண்பு
    A) பண்புப்பெயர்
    B) சினைப்பெயர்
    C) பொருட்பெயர்
    D) இடப்பெயர்
98. பெயர்ச்சொல்லின் வகை அறிக - குறவன்
    A) வினைப்பெயர்
    B) கிளைப்பெயர்
    C) குடிப்பெயர்
    D) சுட்டுப்பெயர்

தேர்வுக்குறிப்புகள்

99. பெயர்ச்சொல்லின் வகை அறிக - கொள்கை
   - A) பொருட்பெயர்
   - B) தொழிற்பெயர்
   - C) பண்புப்பெயர்
   - D) காலப்பெயர்

100. பெயர்ச்சொல்லின் வகை அறிக - காற்றாடி
   - A) இடுகுறிப்பெயர்
   - B) படர்க்கைப் பெயர்
   - C) காரணப் பெயர்
   - D) இடப்பெயர்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 11 | A | 21 | C | 31 | A | 41 | D | 51 | A | 61 | A | 71 | A | 81 | D | 91 | A |
| 2 | A | 12 | A | 22 | C | 32 | B | 42 | C | 52 | C | 62 | C | 72 | B | 82 | C | 92 | B |
| 3 | A | 13 | D | 23 | C | 33 | A | 43 | C | 53 | D | 63 | B | 73 | A | 83 | C | 93 | C |
| 4 | D | 14 | D | 24 | C | 34 | B | 44 | A | 54 | A | 64 | D | 74 | C | 84 | B | 94 | C |
| 5 | B | 15 | D | 25 | C | 35 | A | 45 | C | 55 | D | 65 | A | 75 | C | 85 | A | 95 | C |
| 6 | A | 16 | B | 26 | C | 36 | C | 46 | A | 56 | C | 66 | A | 76 | B | 86 | A | 96 | A |
| 7 | B | 17 | A | 27 | C | 37 | A | 47 | A | 57 | A | 67 | D | 77 | C | 87 | A | 97 | A |
| 8 | C | 18 | B | 28 | D | 38 | A | 48 | C | 58 | A | 68 | D | 78 | D | 88 | D | 98 | C |
| 9 | D | 19 | C | 29 | C | 39 | C | 49 | D | 59 | D | 69 | C | 79 | B | 89 | C | 99 | B |
| 10 | C | 20 | D | 30 | C | 40 | C | 50 | C | 60 | D | 70 | C | 80 | A | 90 | B | 100 | C |

1. செவ்விதழ் என்ற சொல்லின் பெயர்ச்சொல் - பண்புப்பெயர்
2. பொன்னன் என்ற சொல்லின் பெயர்ச்சொல் - பொருட்பெயர்
3. கரும்பு நட்டான் என்ற சொல்லின் பெயர்ச்சொல் - சினையாகுப்பெயர்
4. வெற்றிலை என்ற சொல்லின் பெயர்ச்சொல் - சினைப்பெயர்
5. ஓட்டம் என்ற சொல்லின் பெயர்ச்சொல் - தொழிற்பெயர்
6. நன்மை என்ற சொல்லின் பெயர்ச்சொல் - பண்புப்பெயர்
7. ஆவணி என்ற சொல்லின் பெயர்ச்சொல் - காலப்பெயர்
8. பேறு என்ற சொல்லின் பெயர்ச்சொல் - முதனிலை திரிந்ததொழிற்பெயர்
9. வட்டநிலா என்ற சொல்லின் பெயர்ச்சொல் - பண்புப்பெயர்
10. கெடுதல் என்ற சொல்லின் பெயர்ச்சொல் - தொழிற்பெயர்
11. நள்ளிரவு என்ற சொல்லின் பெயர்ச்சொல் - காலப்பெயர்
12. நீளம் என்ற சொல்லின் பெயர்ச்சொல் - பண்புப்பெயர்
13. தண்டு என்ற சொல்லின் பெயர்ச்சொல் - சினைப்பெயர்
14. கொம்பு என்ற சொல்லின் பெயர்ச்சொல் - சினைப்பெயர்
15. அரசன் என்ற சொல்லின் பெயர்ச்சொல் - பொருட்பெயர்

## 15. இலக்கணக் குறிப்பறிதல்

இலக்கண குறிப்பறிதல் பகுதியிலிருந்து 5 வினாக்கள் கேட்கப்படலாம். ஐந்திற்கும் எளிதாக விடையளிக்கலாம்

1. பெயரெச்சம்
2. வினையெச்சம்
3. முற்றெச்சம்
4. வினைத்தொகை
5. பண்புத்தொகை
6. வினைமுற்று
7. வினையாலணையும் பெயர்
8. உருவகம்
9. உவமைத்தொகை
10. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
11. இரட்டைக்கிளவி
12. அடுக்குத்தொடர்
13. எண்ணும்மை
14. உம்மைத்தொகை
15. உரிச்சொற்றொடர்
16. அன்மொழித்தொகை

### 1.பெயரெச்சம்:

ஒரு வினைச்சொல்லானது பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியுமாயின் அது பெயரெச்சம் ஆகும்.

- படித்த மாணவன்
- வந்த வாகனம்
- தந்த பணம்
- கண்ட கனவு
- சென்ற நாட்கள்

மேற்கண்டவற்றுள் படித்த, வந்த, தந்த, கண்ட, சென்ற போன்றவை பெயரெச்சங்கள் ஆகும்.

**பெயரெச்சத்தை எப்படி எளிதாக கண்டுபிடிப்பது?**

படித்த மாணவன்,வந்த வாகனம்,தந்த பணம்,கண்ட கனவு,சென்ற நாட்கள் போன்ற வாக்கியங்களைக் கொடுத்து இதன் இலக்கண வகை என்ன என்று கேட்டால்.நீங்கள் முதலில் உள்ள படித்த, வந்த, தந்த, கண்ட, சென்ற போன்றவற்றை கணக்கிட்டுதான் பெயரெச்சம் என எண்ண வேண்டும்.

முதலில் படித்த, வந்த, சென்ற போன்ற வார்த்தைகளை நன்றாக உச்சரித்துப் பாருங்கள்.அவ்வார்த்தைகள 'அ' என்னும் சத்தத்தோடு முடியும்.

**விளக்கம்:**

- படித்த - இதன் கடைசி எழுத்து 'த '
- 'த ' என்ற எழுத்தை பிரித்தால் த்+அ என்று பிரியும்.
- இப்படி வார்த்தையின் இறுதியில் 'அ ' என்னும் சத்தம் ஒலித்தால் அது பெயரெச்சம் தான் என முடிவெடுத்துக் கொள்ளவும்.

**பெயரெச்சத்தின் வகைகள்:**

அ.தெரிநிலைப் பெயரெச்சம்

ஆ.குறிப்புப் பெயரெச்சம்

இ.எதிர்மறைப் பெயரெச்சம்

ஈ.ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என வகைப்படும்.

**அ.தெரிநிலைப் பெயரெச்சம்**

காலத்தை வெளிப்படையாகக் காட்டி, அச்சொல் முடியாமல் நின்று, பெயர்ச்சொற்களைக் கொண்டு முடிந்தால் அது தெரிநிலைப் பெயரெச்சமாகும்.

இது மூன்று காலங்களிலும் வரும்.

- படித்த மாணவன்
- படிக்கின்ற மாணவன்
- படிக்கும் மாணவன்

தேர்வுக்குறிப்புகள்

## ஆ.குறிப்புப் பெயரெச்சம்

காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், ஒரு செயலை உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி பெயர்ச்சொல்லாக முடிந்தால் அதுவே குறிப்பு பெயரெச்சம் எனப்படுகிறது.

- நல்ல பையன்
- கரிய உருவம்

## இ.எதிர்மறைப் பெயரெச்சம்

- பாடாத பைங்கிளி
- கேட்காத செவி
- பேசாத பெண்

சொற்களை வாசித்தாலே எதிர்மறை என எளிதாக அறியலாம்.

## ஈ.ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

ஈற்றெழுத்து கெட்டுவரும் எதிர்மறைப்பெயரெச்சம் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகும். "ஆ " எனும் விகுதியில் முடியும்.

- பாடா பைங்கிளி
- பொய்யா மொழி
- வாடா மலர்
- பேசா வாய்
- சிந்தா மணி
- மாறா அன்பு
- செல்லா காசு
- தேரா மன்னா

தேர்வுக்குறிப்புகள்

## 2. வினையெச்சம்:

தொழிலையும் காலத்தையும் உணர்த்தி வினயைக் கொண்டு முடியும் சொல் வினைச்சொல் ஆகும்.

- படித்து முடித்தான்
- வந்து சென்றான்
- ஓடி மறைந்தான்
- பாடி முடித்தான்
- சென்று வந்தான்.

மேற்கணடவற்றுள் படித்து, வந்து, ஓடி, பாடி, சென்று போன்றவை வினையெச்சங்கள் ஆகும்.

**வினையெச்சத்தை எப்படி எளிதாக கண்டுபிடிப்பது?**

படித்து முடித்தான், வந்து சென்றான், ஓடி மறைந்தான், பாடி முடித்தான், சென்று வந்தான் போன்ற வாக்கியங்களைக் கொடுத்து இதன் இலக்கண வகை என்ன என்று வினா வரும்போது முதலில் உள்ள படித்து, வந்து, ஓடி, பாடி, சென்று போன்றவற்றை கணக்கிட்டுதான் அவை வினையெச்சம் என எண்ண வேண்டும்.

முதலில் படித்து, வந்து, சென்று போன்ற வார்த்தைகளை நன்றாக உச்சரித்துப் பாருங்கள். அவ்வார்த்தைகள் 'உ ' என்னும் சத்தத்தோடு முடியும்..

**விளக்கம்:**

- படித்து- இதன் கடைசி எழுத்து 'து '
- 'து ' என்ற எழுத்தை பிரித்தால் த்+உ என்று பிரியும்.

பாடி, ஆடி, ஓடி என்ற வார்த்தைகளை உச்சரித்துப் பாருங்கள். அவ்வார்த்தைகள் 'இ ' சத்தத்தில் முடியும்.

**விளக்கம்:**

- பாடி-இதன் கடைசி எழுத்து 'டி '
- 'டி ' என்ற எழுத்தைப் பிரித்தால் ட்+இ என்று பிரியும்.

இப்படி வார்த்தையின் இறுதியில் 'உ ' மற்றும் 'இ ' என்னும் சத்தம் ஒலித்தால் அது வினையெச்சம் தான் என முடிவெடுத்துக் கொள்ளவும்.

**வினையெச்சம்_வகைகள்**

(அ) தெரிநிலை வினையெச்சம்

(ஆ) குறிப்பு வினையெச்சம்

என வினையெச்சம் 2 வகைப்படும்.

### அ. தெரிநிலை_வினையெச்சம்

தெரிநிலை வினையெச்சமானது வெளிப்படையாக காலத்தைக் காட்டி வினைச்சொல்லைக் கொண்டு முடியும்.

- வந்து போனான்
- நின்று வந்தான்

### ஆ. குறிப்பு_வினையெச்சம்

குறிப்பு வினையெச்சமானது வெளிப்படையாக காலத்தைக் காட்டாமல் பண்பின் அடிப்படையில் வினைச்சொல்லைக் கொண்டு முடியும்.

- மெல்ல நடந்தான்
- கோபமாக பேசினான்

**3. முற்றெச்சம்**

ஒரு வினைமுற்று சொல் தன்னுடைய வினைமுற்று பொருளை தராமல். வினையெச்ச பொருளைத் தருமாயின் அதற்கு "முற்றெச்சம்" என்று பெயர்.

- இச்சொல் தனித்து நோக்கும்போது வினைமுற்றாகத் தோன்றும்.
- இரண்டு வினைமுற்று தொடர்ந்து வருமாயின் அது முற்றெச்சம் ஆகிறது.
  - சிறுவர் பாடினர் மகிழ்ந்தனர்
  - படித்தனர் தேர்ந்தனர்
  - எழுதினன் முடித்தனன்

**4. வினைத்தொகை:**

வினைத்தொகை என்றால் என்ன?

மூன்று காலத்திற்கும் பொருந்தி பெயர்ச்சொல்லால் தழுவப்பெற்று வரும் தொடரே வினைத்தொகை ஆகும்.

- **ஊறுகாய்**

வினைத்தொகையை எப்படி கண்டறிவது?

வினைத்தொகையில் இரு சொற்கள் இருக்கும்.முதல் சொல்லானது வினைச்சொல்லாக இருக்கும்.இரண்டாவது சொல்லானது பெயர்ச்சொல்லாக இருக்கும்.

ஊறுகாய் என்பதில் ஊறு என்பதை வினைச்சொல்லாகவும் காய் என்பதை பெயர்ச்சொல்லாகவும் எடுத்துக் கொள்க.

இந்த **ஊறுகாய்** என்ற சொல்லில் மூன்று காலங்களும் மறைந்து இருக்கின்றன.

- ஊறிய காய் - இறந்த காலம்
- ஊறுகின்ற காய் - நிகழ்காலம்
- ஊறும் காய் - எதிர்காலம்

இப்பொழுது மூன்று காலங்களும் வெளிப்படுகிறது அல்லவா. இதைப்போல கொடுக்கப்பட்ட விடைகளில் எந்த சொல்லானது மூன்று காலங்களையும் உள்ளடக்கி வருகிறதோ அதுவே வினைத்தொகை என முடிவு கொள்ளுங்கள்.

1) படர்கொடி
    - படர்ந்த கொடி-இறந்த காலம்
    - படர்கின்ற கொடி-நிகழ்காலம்
    - படரும் கொடி-எதிர்காலம்
2) சுடுசோறு
    - சுட்ட சோறு-இறந்த காலம்
    - சுடுகின்ற சோறு-நிகழ்காலம்
    - சுடும் சோறு-எதிர்காலம்
3) குடிநீர்
    - குடித்த நீர்-இறந்த காலம்
    - குடிக்கின்ற நீர்-நிகழ்காலம்
    - குடிக்கும் நீர்-எதிர்காலம்

கொடுக்கப்பட்டிருக்கிற அனைத்து விடைகளையும் சொல்லி சொல்லிப் பாருங்கள். முக்காலத்தையும் உணர்த்துகிறதா என்று. ஒரு விடை மட்டும்தான் முக்காலத்தையும் உணர்த்தும்.

## 5. பண்புத்தொகை

பண்புத்தொகை என்றால் என்ன?

ஒரு சொல்லானது பொருளின் பண்பையும் குணத்தையும் உணர்த்தி வந்தால் அது பண்புத்தொகை ஆகும்.

- செந்தாமரை

பண்புத்தொகையைக் கண்டறிவது எப்படி?

- கொடுக்கப்பட சொற்களில் எந்த சொல்லைப் பிரிக்கும் போது 'மை' விகுதி வருகிறதோ அது பண்புத்தொகை எனக் கண்டறிக.
- ' செந்தாமரை' என்ற வார்த்தையைப் பிரித்தால் செம்மை+தாமரை என்று பிரியும்.
- 'மை ' விகுதி தெரிகிறதா. ஒரு வார்த்தையை சரியாக பிரித்தால்தான் 'மை ' விகுதியைக் கணடறிய முடியும்.
- **நிறத்தை குறிக்கும் சொற்கள்**: பசுமை,நீலம்,வெண்மை
- **குணத்தைக் குறிக்கும் சொற்கள்**: நன்மை,தீமை,கொடுமை,பொறாமை
- **சுவையைக்குறிக்கும் சொற்கள்**: காரம்,புளிப்பு,கசப்பு
- **வடிவத்தைக் குறிக்கும் சொற்கள்**: சதுரம்,வட்டம்,நாற்கரம்

## இருபெயரொட்டுப்_பண்புத்தொகை

சிறப்புப் பெயர்கள் முன்னும் பொதுப்பெயர்கள் பின்னும் நின்று இடையில் "ஆகிய" எனும் பண்பு உருபு மறைந்து வருவதே இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகும்.

- சாரைப்பாம்பு, நாகப்பாம்பு
- இந்திய நாடு, தமிழ்நாடு
- மாமரம், குமரிப்பெண்
- வாழை மரம்.
- தாமரைப் பூ
- பொருட்செல்வம்
- கடல் நீர்
- தைத்திங்கள்
- அவி உணவு
- அரவணை
- செருக்களம்

## 6. வினை_முற்று

வினைமுற்று என்றால் என்ன?

முடிவு பெற்ற வினைச்சொல்லே வினைமுற்று ஆகும்.

- (எ.கா): படித்தான்
- படித்தான் என்றாலேயே ஒருவன் படித்து முடித்துவிட்டான் என்று பொருள்.

இப்படி ஒரு வினை முற்று பெற்றால் அது வினை முற்று.

'படித்தான்' என்பதில்

- 'படித்த' என்பது பெயரெச்சம்
- 'படித்து' என்பது வினையெச்சம்
- 'படித்தான்' என்பது வினைமுற்று.

பெயரெச்சமும் வினையெச்சமும் முடிவைத் தராது. 'படித்தான்' என்ற வார்த்தை முடிவை பெற்றிருக்கிறது. எனவே அது வினைமுற்று.

அ.தெரிநிலை வினைமுற்று

ஆ.குறிப்பு வினைமுற்று

இ.ஏவல் வினைமுற்று

ஈ.வியங்கோள் வினைமுற்று

உ.உடன்பாட்டு வினைமுற்று

ஊ.எதிர்மறை வினைமுற்று

இவ்வாறாக ஒரு வினைமுற்றை **ஆறு** வகைப்படுத்திக் காணலாம்.

தேர்வுக்குறிப்புகள்

## அ. தெரிநிலை_வினைமுற்று

ஒரு வினைமுற்றானது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகிய ஆறினையும் வெளிப்படையாக உணர்த்தி வரும். ஒரு செயல் நடந்து முடிந்ததாக தெரியும்.

- ஓவியன் சித்திரம் தீட்டினான். செய்பவன் - ஓவியம்
- கருவி - வர்ணம்
- நிலம் - சுவர்
- செயல் - தீட்டுதல்
- பொருள் - சித்திரம்
- காலம் - இறந்த காலம்.

(எ.கா) எழிலரசி மாலை தொடுத்தாள்.

- செய்பவள் - எழிலரசி
- கருவி - நார், கை
- நிலம் - இருப்பிடம்
- செயல் - தொடுத்தல்
- பொருள் - மாலை
- காலம் - இறந்த காலம்.

## ஆ.குறிப்பு_வினைமுற்று

திணை, பால் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டி காலத்தை மட்டும் குறிப்பாக உணர்த்தி வரும் வினைக்குறிப்பே குறிப்பு வினைமுற்று எனப்படும். இது காலத்தை (வெளிப்படையாக) காட்டாது.

- வளவன் தற்போது பொன்னன்.
- செங்கண்ணன் கரியன்
- பாலன் இன்று செல்வன்
- பொன்னன் - பொருள்
- மதுரையான், குற்றாலத்தான் - இடம்
- ஆதிரையான் - காலம்
- செங்கண்ணன் - சினை
- இனியன், கரியன் - பண்பு (அ) குணம்
- நடிகன், நடையன் - தொழில்

இவ்வாறாக பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகியவற்றைச் சார்ந்தே குறிப்பு வினைமுற்று அமையும்.

## இ. ஏவல்_வினைமுற்று

முன்னிலையில் ஒருவனை, ஒருத்தியை அல்லது ஒன்றினை ஆணையிட்டு ஏவும் வினையே ஏவல் வினைமுற்று என்பதாகும்.இது எதிர்காலத்தைக் காட்டி வரும். ஒருமை, பன்மையை உணர்த்தும்.

## ஈ. ஏவல்_ஒருமை_வினைமுற்று

நீ நட, நீ செய், நீ போ, நீ படி

## உ. ஏவல் பன்மை வினைமுற்று

- நீர் உண்குவீர்
- நீர் வாரீர், நீர் செய்குதும்

## ஊ. வியங்கோள்_வினைமுற்று.

க-இய-இயர் என்ற விகுதிகளைப் பெற்று வரும். வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டிக்கொடல் ஆகிய பொருள்களில் வரும். இது மூன்று இடங்களையும் **ஐம்பால்** உணர்த்தி வரும்.

**(எ.கா)** வாழ்க, வாழிய, வாழியர், வாழ்த்துதல் ஒழிக, கெடுக, வைதல், செல்க வருக, ஈக, விதித்தல், தருக வேண்டல், சிரிக்க, பார்க்க

## எ.உடன்பாட்டு வினைமுற்று

(எ.கா) செய்வார், வாழ்வார், துறப்பார்

## ஏ.எதிர்மறை வினைமுற்று

(எ.கா) செய்யார், வாழாதவர், துறவார்

## 7. வினையாலணையும்_பெயர்:

ஒரு வினைமுற்று சொல் தன் வினைமுற்றுப் பொருளைக் காட்டாமல் வினை செய்தவனையோ அல்லது பொருளையோ குறிக்கும் பெயர்ச்சொல்லாக வருவதே வினையாலணையும் பெயர் ஆகும்.

- படித்தவன்,
- கண்டவர்
- சென்றனன்

கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் எந்த விடை அவர், அவன், அனன் போன்றவற்றில் முடிகிறதோ அதுவே வினையாலணையும் பெயர் என முடிவு கொள்க.

'காட்சியவர்' என்பதன் இலக்கணக்குறிப்பு தருக.

- அ) காலப்பெயர்
- ஆ)இடப்பெயர்
- இ) வினையாலணையும் பெயர்
- ஈ) பண்புப்பெயர்

காட்சியவர் என்ற சொல் 'அவர்' என முடிவதால் அதுவே வினையாலணையும் பெயர் ஆகும்.

தேர்வுக்குறிப்புகள்

## 8. உருவகம்:

உவமைத்தொகையை நன்றாகப் புரிந்து கொண்டீர்களா.அப்படியானால் உருவகத்தை புரிந்து கொள்வது மிகச்சுலபம்.

அதாவது 'மலரடி' என்ற சொல் உவமைத்தொகை என்பதைப் பார்த்தோம். அச்சொல்லை திருப்பி எழுதினால் அது உருவகம்.

'மலரடி' என்ற சொல்லை 'அடிமலர்' என்று மாற்றியமைக்கும் போது உருவகம் ஆகிறது.

**விளக்கம்:**

ஒரு பெண்ணின் முகத்தை பார்க்கிறீர்கள்..உடனே மலரைப் போன்ற முகம் என மலருடன் அவளது முகத்தை ஒப்பிடுகிறீர்கள்.இதுவே 'மலர்முகம்'.இது உவமைத் தொகை.

இன்னும் ஒருபடி மேலே போய், மலரைப்போன்று முகமில்லை. இவள் முகத்தைப் போலத்தான் அம்மலர் இருக்கிறது என்று சொல்வீர்களானால் அது உருவகம். அதாவது முகமலர்.

எடுத்துக்காட்டு:

- உவமைத்தொகை / உருவகம்
- மலர்முகம் / முகமலர்
- மலர்க்கை / கைமலர்
- தாய்மொழி / மொழித்தாய்
- கயல்விழி / வி ழிகயல்
- அன்னைத்தமிழ் / தமிழன்னை
- மலர்விழி / விழிமலர்

தேர்வுக்குறிப்புகள்

## 9. உவமைத்தொகை:

பொருளுக்கும் உவமைக்குமிடையே போன்ற,போல,அன்ன,நிகர போன்ற உவம உருபுகள் மறைந்து வருமாயின் அவை உவமைத்தொகை எனப்படும்.

(எ.கா) கனிவாய்

மலரடி

'கனிவாய்' என்ற சொல்லிற்கு பொருள் கனி போன்ற வாய் என்பதாகும். அப்படியானல் 'போன்ற' என்ற உருபு மறைந்து வருவதைக் காணலாம்.

எனவே 'கனிவாய்' என்பது உவமைத்தொகை ஆகும். அதேபோல 'மலரடி' என்பதன் பொருள் மலர் போன்ற பாதம் என்பதாகும்.இதிலும் 'போன்ற' என்ற உருபு மறைந்து வருகிறது.

பெரும்பாலும் 'போன்ற' என்ற உருபு மறைந்து வரும்படியே வினாக்கள் அமையும்.

எ.கா

1. மலர்முகம்
2. மலர்விழி
3. மலர்க்கை
4. தாய்மொழி
5. கயல்விழி
6. அன்னைத்தமிழ்

மேற்கண்டவை அனைத்தும் உவமைத்தொகை ஆகும்.

தேர்வுக்குறிப்புகள்

**10. ஈறு_கெட்ட_எதிர்மறைப்_பெயரெச்சம்**

ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பது எதிர்மறையான பொருளில் வரும் ஒரு வினைச்சொல், அதன் கடைசி எழுத்து இல்லாமல் (ஈறு = கடைசி; கெட்ட = இல்லாமல்) வந்து, அடுத்து வரும் பெயர்ச்சொல்லுக்கு விளக்கம் தருவதாக அமையும் சொல்.

(எ.கா) செல்லாக் காசு / செல்லாத காசு.)

என்பதில் செல்லா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். செல்லும் என்பது உடன்பாட்டு பொருள். செல்லாத என்பது எதிர்மறைப் பொருள்.

செல்லாத என்னும் சொல், செல்லாதது என்று முடிவு பெறாமல் எச்சமாக வரும் வினைச்சொல். செல்லா என்பது செல்லாத என்னும் சொல்லின் கடைசி எழுத்தாகிய 'த' இல்லாமல் (கெட்டு) வருவது. மேலும் செல்லா என்னும் சொல், காசு என்னும் பெயர்ச்சொல்லைப் பற்றிக் கூறவந்த வினைச்சொல்.

எனவே செல்லாக் காசு என்னும் தொடரில், செல்லா என்னும் சொல்லை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்று கூறுவர்.

**11. இரட்டைக்கிளவி:**

ஒரு சொல் தொடர்ந்து இரண்டுமுறை வரும்.ஆனால் தனித்தனியே அவற்றைப் பிரித்தால் பொருளைத்தராது அதுவே இரட்டைக்கிளவி ஆகும்.

(எ.கா) சலசல,கலகல

மேற்கண்ட வார்த்தைகளை சல,கல என பிரித்தால் பொருளைத் தராது.எனவே அது இரட்டைக்கிளவி எனப்படும்.

**12. அடுக்குத்தொடர்:**

ஒரு சொல் தொடர்ந்து இரண்டுமுறை வரும்.ஆனால் தனித்தனியே அவற்றைப் பிரித்தால் பொருளைத்தரும். அதுவே அடுக்குத்தொடர் ஆகும்.

(எ.கா) பாம்பு பாம்பு, வருக வருக

மேற்கண்ட வார்த்தைகளை பாம்பு, வருக என பிரித்தால் பொருளைத் தரும். எனவே அது அடுக்குத்தொடர் எனப்படும்.

## ஒருபொருட்பன்மொழி

ஒரு பொருளின் சிறப்பிற்காக அப்பொருளைக் குறிக்க பல சொற்கள் வருவது ஒருபொருட்பன்மொழி ஆகும்.

(எ.கா)

- ஓங்கி உயர்ந்த
- ஒரு தனி
- தொழுது வணங்கினான்
- காத்து ஓம்பினான்

## 13. எண்ணும்மை:

கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் 'உம்' எனும் விகுதி வெளிப்படையாக வருமாயின் அது எண்ணும்மை எனப்படும்.

(எ.கா)

- *அல்லும் பகலும் *காதலும் கற்பும் *அவனும் இவனும் சிறப்பு எண்ணும்மை
- சொற்கள் "உடனும்" என முடியும்.
- வானுடனும், கடவுளுடனும்
- உயர்வு சிறப்பும்மை
- சொற்கள் "னினும்" என்று முடியும்.
- வானினும், ஊனினும், தேனினும்

## 14. உம்மைத்தொகை:

கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் 'உம்' எனும் சொல் வெளிப்படையாக தெரியாமல் மறைந்து வந்தால் அது உம்மைத்தொகை எனப்படும்.

(எ.கா)

- அவன் இவன்
- இரவு பகல்
- இராப்பகல்

எனவே 'உம்' எனும் சொல் வெளிப்படையாக வந்தால் அது எண்ணும்மை ஆகும். அதுவே மரைந்து வந்தால் அது உம்மைத்தொகை.

## 15. உரிச்சொற்றொடர்:

ஒன்றை பெரிது படுத்திக் காட்டுவது உரிச்சொற்றொடர் ஆகும்.

(எ.கா) மாநகரம்

அதாவது பெரிய நகரம் என்று சொல்வதற்கு பதிலாக மாநகரம் என்று சொல்கிறோம். இதுவே உரிச்சொற்றொடர் ஆகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை மனதில் படித்துக் கொள்ளவும்.

1. சால
2. உறு
3. தவ
4. நனி
5. கூர்
6. கழி
7. கடி
8. மா
9. தட

மேற்கண்டவை அனைத்தும் 'பெரிய' என்ற பொருளைத் தரக்கூடிய சொற்கள். எனவே கேட்கப்படும் உரிச்சொற்றொடர்கள் இவற்றில் ஏதாவது ஒன்றில்தான் ஆரம்பிக்கும்.

(எ.கா)

- தடக்கை
- தவப்பயன்
- உறுபடை

தேர்வுக்குறிப்புகள்

## 16.அன்மொழித்தொகை

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை ஆகிய ஐந்து தொகைகளும் தொடருக்கு புறத்தே அமையாமல் மறைந்திருந்து பொருள் தருமாயின் அது அன்மொழித் தொகையாகும்.

(எ.கா)

- பொற்றொடி வந்தாள்
- பூங்குழலி வந்தாள்
- சேயிழைக் கணவன்
- தேன்மொழி நகைத்தாள்
- இன்மொழி சொன்னான்
- சுடுகதிர் எழுந்தான்.

| | | |
|---|---|---|
| தினந்தினம் | - | அடுக்குத்தொடர் |
| புதிது புதிது, சொல்லிச் சொல்லி | - | அடுக்குத்தொடர் |
| கொளல் | - | அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று |
| சிறுநுதல் | - | அன்மொழித்தொகை |
| உள்ளம் | - | ஆகுபெயர் |
| எழுமை, ஐந்து | - | ஆகுபெயர் |
| இறவுப்புறம் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| என்கால் என்பெயர், நின்னகர், என்பதி | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| என்னுயிர் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| ஐயைதாள் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| கயன்முள் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| களிற்று மருப்பு | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| கன்றுகுரல் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| கைவயம் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| செறுநர் செருக்கு | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| தாபதர் உள்ளம் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| நதிப்பரப்பு | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| நீரூற்று | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| நீரோசை | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| பணிவிடம் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| புல்நுனி | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| பேய்க்கணங்கள் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| மதிப்பிஞ்சு | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| மனத்திட்பம் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| மால் கழல் | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| மாறன்களிறு | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |

| | | |
|---|---|---|
| வழிக்கரை | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| வினைவலி | - | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| படூஉம் | - | இசைநிறை அளபெடை |
| உலகம் | - | இடவாகுபெயர் |
| உலகு | - | இடவாகுபெயர் |
| இலா | - | இடைக்குறை |
| சலசல | - | இரட்டைக்கிளவி |
| ஆய்தொடி நல்லாய் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| கொலைப்புலி | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| சிறைப்பறவை | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| தார்வேந்தன் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| நிழல் போதி | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| நீதிநூல் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| நீர்த்தடம் | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| முள்ளிலை | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| வளைக்கை | - | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| மாசை எற்றி | - | இரண்டாம் வேற்றுமை விரி |
| தலைகுனிந்து | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| புல்லார் | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| அடிவாழ்த்துவம் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| இகல்வெல்லும் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| இரைதேர் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| உயிர்செகுத்து | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| களம் கண்டோம் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| செவியறுத்து | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| பகைகொளல் | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| பூதி சாத்த | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| மதயெறிது | - | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| அன்புநெறி | - | இருபெயரொட்டு பண்புத்தொகை |
| சுவர்க்கபதி | - | இருபெயரொட்டு பண்புத்தொகை |
| மெய்ப்பொருள் | - | இருபெயரொட்டு பண்புத்தொகை |
| இருக்கு ஆரணம் | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| கயிலாய வெற்பு | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| கைத்தலம் | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| கண்ணுதல் | - | இலக்கணப் போலி |
| இலை | - | இல்லை என்பதன் இடைக்குறை விகாரம் |
| குருகும் | - | இழிவு சிறப்பும்மை |
| செய்யினும் | - | இழிவு சிறப்பும்மை |
| செய்த | - | இறந்தகால பெயரெச்சம் |
| உள்ளததூஉம் | - | இன்னிசையளபடை |
| இணையிலாப் பசுமை | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| இன்னா சொல் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| உண்ணா உயக்கம் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| எய்தாப் பழி | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

| | | |
|---|---|---|
| ஏற்றா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| கதுவிடா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| கூவா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| செலவொழியா வலி | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| தப்பாமரம் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| தேரா மன்னா, ஏகாச் சிறப்பின் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| நிரம்பா நீளிடை | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| நீங்கா இன்பம் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| பலியில்லா மன்னன் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| பொய்யா விளக்கம் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| பொல்லக்காட்சி | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| வரையா மரபு | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| வாராப் பொருளாக்கம் | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| அரண், திறன் | - | ஈற்றுப்போலிகள் |
| அடவிமலையாறு | - | உம்மைத்தொகை |
| அந்தி காளை | - | உம்மைத்தொகை |
| சட்டதிட்டம் | - | உம்மைத்தொகை |
| தாய்தந்தை | - | உம்மைத்தொகை |
| தானதர்மம் | - | உம்மைத்தொகை |
| நாழிகை வாரம் | - | உம்மைத்தொகை |
| பேர்அடையாளம் | - | உம்மைத்தொகை |
| பாறையும் | - | உயர்வு சிறப்பும்மை |
| மலையினும் | - | உயர்வு சிறப்பும்மை |
| இருநிலம் | - | உரிச்சொற்றொடர் |
| கடிநறை | - | உரிச்சொற்றொடர் |
| கடிமகள் | - | உரிச்சொற்றொடர் |
| தடந்தோள் | - | உரிச்சொற்றொடர் |
| நனிகடிது | - | உரிச்சொற்றொடர் |
| நாமவேல் | - | உரிச்சொற்றொடர் |
| மாதவர் | - | உரிச்சொற்றொடர் |
| மாமணி | - | உரிச்சொற்றொடர் |
| மாமதுரை | - | உரிச்சொற்றொடர் |
| மாமாலை | - | உரிச்சொற்றொடர் |
| மாவிலி | - | உரிச்சொற்றொடர் |
| விழுப்பொருள் | - | உரிச்சொற்றொடர் |
| வைவாள் | - | உரிச்சொற்றொடர் |
| வைவேல் | - | உரிச்சொற்றொடர் |
| இன்ப சொருபம் | - | உருவகம் |
| கண்ணின் நீர்க்கடல் | - | உருவகம் |
| கண்ணீர் வெள்ளம், பசிக்கயிறு | - | உருவகம் |
| கண்மலர் | - | உருவகம் |
| கரகமலம் | - | உருவகம் |
| செல்வச்செவிலி | - | உருவகம் |
| தங்கத்தீவு | - | உருவகம் |

| | | |
|---|---|---|
| புருவக்கொடி | - | உருவகம் |
| பொற்கரை | - | உருவகம் |
| மதிவிளக்கு | - | உருவகம் |
| மனக்குரங்கு | - | உருவகம் |
| மனப்பறவை | - | உருவகம் |
| மெல்லிய காம்பு | - | உருவகம் |
| வினைப்பிணி | - | உருவகம் |
| ஒப்ப | - | உவமஉருபு |
| பொன்னடி | - | உவமத்தொகை |
| மலரடி | - | உவமத்தொகை |
| கோதை | - | உவமை ஆகுபெயர் |
| இலைவேல் | - | உவமைத்தொகை |
| கல்திரள்தோள் | - | உவமைத்தொகை |
| மலர்க்கால் | - | உவமைத்தொகை |
| மலர்ந்தாள் | - | உவமைத்தொகை |
| காளை | - | உவமையாகுபெயர் |
| அவியினும் வாழினும் | - | எண்ணும்மை |
| கங்கையும் சிந்துவும் | - | எண்ணும்மை |
| காலமும் தேசமும் | - | எண்ணும்மை |
| தாளமும் மேளமும் | - | எண்ணும்மை |
| தேவியும் ஆயமும் | - | எண்ணும்மை |
| பாலாடையும் நறுநெய்யும் தேனும் | - | எண்ணும்மை |
| மாடமும் ஆடரங்கும் | - | எண்ணும்மை |
| வாயிலும் மாளிகையும் | - | எண்ணும்மை |
| வையகமும் வானகமும் | - | எண்ணும்மை |
| தூக்கின் | - | எதிர்கால பெயரெச்சம் |
| அரைத்திடும் சேனை | - | எதிர்காலப் பெயரெச்சம் |
| கரவேல் | - | எதிர்மறை ஏவல் வினைமுற்று |
| நீங்காமை | - | எதிர்மறை தொழிற்பெயர் |
| விலகாத | - | எதிர்மறை பெயரெச்சம் |
| மறவற்க | - | எதிர்மறை வியங்கோள் வினைமுற்று |
| காண்கிலர் | - | எதிர்மறை வினைமுற்று |
| இல்லாதவர் | - | எதிர்மறை வினையாலணையும் பெயர் |
| உண்ணாது | - | எதிர்மறை வினையாலணையும் பெயர் |
| காவாக்கால் | - | எதிர்மறை வினையெச்சம் |
| செய்யாமல் | - | எதிர்மறை வினையெச்சம் |
| தீராத | - | எதிர்மறைப் பெயரெச்சம் |
| காணீர் | - | ஏவல் வினைமுற்று |
| துறத்தி | - | ஏவல் வினைமுற்று |
| காற்சிலம்பு | - | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| கானப்பறவை | - | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| போர்க்குறி | - | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| இற்பிறப்பு | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |
| கையேந்தி | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |

| | | |
|---|---|---|
| பகலுறை | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |
| பகல்பூக்கள் | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |
| பகல்வெல்லும் | - | ஏழாம் வேற்றுமைத்தொகை |
| வான்மழை | - | ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை |
| சொற்பதம் | - | ஒருபொருட் பன்மொழி |
| ஓங்கியுயர் | - | ஒருபொருட்பன்மொழி |
| வல்விரைந்து | - | ஒருபொருட்பன்மொழி |
| திறன் | - | கடைப்போலி |
| அசலம் | - | காரணப்பெயர் |
| கதத்த | - | குறிப்பு பெயரெச்சம் |
| உடையார் | - | குறிப்பு வினைமுற்று |
| எளிய | - | குறிப்பு வினைமுற்று |
| அறிய ஆண்மை | - | குறிப்புப் பெயரெச்சம் |
| தரும் பொருளே | - | செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் |
| கட்டும் | - | செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் |
| அவ்வூர் | - | சேய்மைச்சுட்டு |
| எழீஇ | - | சொல்லிசை அளபெடை |
| ஓரீ இ | - | சொல்லிசை அளபெடை |
| செலீஇய | - | சொல்லிசை அளபெடை |
| தழீஇ | - | சொல்லிசை அளபெடை |
| தழீஇய | - | சொல்லிசை அளபெடை |
| சிந்தித்தேன் | - | தன்மை ஒருமை வினைமுற்று |
| பரவுதும் | - | தன்மைப் பன்மை வினைமுற்று |
| வாழ்த்துவம் | - | தன்மைப் பன்மை வினைமுற்று |
| கழல் | - | தானியாகு பெயர் |
| ஆக்கல், நீக்கல், விளையாட்டு | - | தொழிற் பெயர் |
| அஞ்சல் | - | தொழிற்பெயர் |
| அற்றம் | - | தொழிற்பெயர் |
| ஈதல் | - | தொழிற்பெயர் |
| ஒரால், பொறை | - | தொழிற்பெயர் |
| ஒல்காமை | - | தொழிற்பெயர் |
| ஒழுக்கம் | - | தொழிற்பெயர் |
| கண்ணோட்டம் | - | தொழிற்பெயர் |
| கற்றல், பெறுதல், வாழ்தல் | - | தொழிற்பெயர் |
| காத்தல் | - | தொழிற்பெயர் |
| குற்றம் | - | தொழிற்பெயர் |
| கூம்பல் | - | தொழிற்பெயர் |
| கொளல் | - | தொழிற்பெயர் |
| கோறல் | - | தொழிற்பெயர் |
| சொலல் | - | தொழிற்பெயர் |
| சொல்லுதல் | - | தொழிற்பெயர் |
| தருதல், வைத்தல் | - | தொழிற்பெயர் |
| துளங்குதல் | - | தொழிற்பெயர் |
| பணிதல் | - | தொழிற்பெயர் |

| | | |
|---|---|---|
| பெறல் | - | தொழிற்பெயர் |
| பொறுத்தல் | - | தொழிற்பெயர் |
| மறத்தல், பொறுத்தல் | - | தொழிற்பெயர் |
| வாழ்க்கை | - | தொழிற்பெயர் |
| விடல் | - | தொழிற்பெயர் |
| இழுக்கல், ஒழுக்கம் | - | தொழிற்பெயர்கள் |
| கணோட்டம், செல்லாமை, உறைதல், என்றல் | - | தொழிற்பெயர்கள் |
| என்மகள் | - | நான்காம் வேற்றுமைத்தொகை |
| கண்ணிபாலன் | - | நான்காம் வேற்றுமைத்தொகை |
| நின்கேள் | - | நான்காம் வேற்றுமைத்தொகை |
| நுந்தை | - | நும் தந்தை என்பதன் மரூஉ |
| விருந்து | - | பண்பாகு பெயர் |
| அருந்தமிழ் | - | பண்புத்தொகை |
| அருந்தவம் | - | பண்புத்தொகை |
| அருமறை | - | பண்புத்தொகை |
| ஆரிருள் | - | பண்புத்தொகை |
| ஆருயிர் | - | பண்புத்தொகை |
| இருங்கடல் | - | பண்புத்தொகை |
| இல்பருவம் | - | பண்புத்தொகை |
| இன்னரம்பு | - | பண்புத்தொகை |
| எண்பொருள் | - | பண்புத்தொகை |
| ஒண்பொருள் | - | பண்புத்தொகை |
| கடும்பகை | - | பண்புத்தொகை |
| கருங்கொடி | - | பண்புத்தொகை |
| கருங்கோல் | - | பண்புத்தொகை |
| கருமுகில் | - | பண்புத்தொகை |
| கருமுகில், வெண்மதி | - | பண்புத்தொகை |
| கூர்ம்படை | - | பண்புத்தொகை |
| சிற்றன்னை | - | பண்புத்தொகை |
| செங்கதிர் | - | பண்புத்தொகை |
| செங்கதிர், பெருவரி | - | பண்புத்தொகை |
| செந்தமிழ் | - | பண்புத்தொகை |
| செந்தழல் | - | பண்புத்தொகை |
| செந்நாய் | - | பண்புத்தொகை |
| செந்நெல் | - | பண்புத்தொகை |
| செம்பொன் | - | பண்புத்தொகை |
| செழுந்துயில் | - | பண்புத்தொகை |
| செழும்பொன் | - | பண்புத்தொகை |
| சேவடி | - | பண்புத்தொகை |
| தண்கடல் | - | பண்புத்தொகை |
| தண்குடை | - | பண்புத்தொகை |
| தீநெறி | - | பண்புத்தொகை |
| தெண்டிரை | - | பண்புத்தொகை |

| | | |
|---|---|---|
| தோள்கவின் | - | பண்புத்தொகை |
| நல்லுரை | - | பண்புத்தொகை |
| நற்கரிகள், இன்னமுதம் | - | பண்புத்தொகை |
| நற்பயன் | - | பண்புத்தொகை |
| நற்றாய் | - | பண்புத்தொகை |
| நன்மனை | - | பண்புத்தொகை |
| நன்மான், நெடுந்தேர் | - | பண்புத்தொகை |
| நுண்டுளி | - | பண்புத்தொகை |
| நெடுங்கண் | - | பண்புத்தொகை |
| நெடுநாவாய் | - | பண்புத்தொகை |
| நெடுமதில் | - | பண்புத்தொகை |
| பச்சூன், பைந்நிணம் | - | பண்புத்தொகை |
| பழ ஆவணம் | - | பண்புத்தொகை |
| பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் | - | பண்புத்தொகை |
| புல்லடிமை | - | பண்புத்தொகை |
| புன்கண், பெரும்பெயர், அரும்பெறல் | - | பண்புத்தொகை |
| பெருங்கடல் | - | பண்புத்தொகை |
| பெருங்கரி | - | பண்புத்தொகை |
| பெருங்குணம் | - | பண்புத்தொகை |
| பெருஞ்சிரம், தண்டளி | - | பண்புத்தொகை |
| பெருந்தவம் | - | பண்புத்தொகை |
| பெரும்பேறு | - | பண்புத்தொகை |
| பேரறிவு | - | பண்புத்தொகை |
| முச்சங்கம் | - | பண்புத்தொகை |
| முதுமரம் | - | பண்புத்தொகை |
| முத்து முரசம் | - | பண்புத்தொகை |
| மெல்லிதழ் | - | பண்புத்தொகை |
| மென்குறள் | - | பண்புத்தொகை |
| வன்காயம் | - | பண்புத்தொகை |
| வன்கானகம் | - | பண்புத்தொகை |
| வன்துறு | - | பண்புத்தொகை |
| வெண்குடை | - | பண்புத்தொகை |
| வெண்தயிர் | - | பண்புத்தொகை |
| வெறுங்கை | - | பண்புத்தொகை |
| இன்மை, திண்மை | - | பண்புப்பெயர் |
| சால்பு | - | பண்புப்பெயர் |
| என்ப | - | பலர்பால் வினைமுற்று |
| அசைத்த, இசைத்த | - | பெயரெச்சம் |
| அமைந்த, கொடுத்த | - | பெயரெச்சம் |
| இருந்த பாலன் | - | பெயரெச்சம் |
| இருந்ததோகை | - | பெயரெச்சம் |
| இருந்தவள்ளல் | - | பெயரெச்சம் |
| இழந்த பரிசு | - | பெயரெச்சம் |
| இழிந்த பிறப்பு | - | பெயரெச்சம் |

| | | |
|---|---|---|
| ஈன்ற தந்தை | - | பெயரெச்சம் |
| உணர்ந்த முதல்வன் | - | பெயரெச்சம் |
| உதைத்த | - | பெயரெச்சம் |
| காய, மாய | - | பெயரெச்சம் |
| கேட்ட வாசகம் | - | பெயரெச்சம் |
| சுற்றிய பாங்கர் | - | பெயரெச்சம் |
| செற்ற சிலை | - | பெயரெச்சம் |
| தாழ்ந்த, தளர்ந்த | - | பெயரெச்சம் |
| தூங்கிய, ஆய்ந்த | - | பெயரெச்சம் |
| நின்ற வேங்கை | - | பெயரெச்சம் |
| படித்த, தீர்த்த | - | பெயரெச்சம் |
| பறித்தமயிர் | - | பெயரெச்சம் |
| பூக்கின்ற, ஈர்க்கின்ற | - | பெயரெச்சம் |
| போர்த்த பிடவை | - | பெயரெச்சம் |
| மலர்ந்த கண்ணன் | - | பெயரெச்சம் |
| முதிர்ந்தமேதி | - | பெயரெச்சம் |
| விட்டவள் | - | பெயரெச்சம் |
| வீற்றிருந்த | - | பெயரெச்சம் |
| தெற்கு வடக்காய் | - | முரண்தொடை |
| எம்மருங்கும் | - | முற்றும்மை |
| எல்லார்க்கும் | - | முற்றும்மை |
| எழுபிறப்பும் | - | முற்றும்மை |
| யாரும் | - | முற்றும்மை |
| யாரையும் | - | முற்றும்மை |
| யார்க்கும் | - | முற்றும்மை |
| யாவரும் | - | முற்றும்மை |
| விரல்கள் பத்தும் | - | முற்றும்மை |
| அழைத்தனன் | - | முற்றெச்சம் |
| ஒழுகான் | - | முற்றெச்சம் |
| தூக்கார் | - | முற்றெச்சம் |
| தொடர்ந்தனன் நகைப்பான் | - | முற்றெச்சம் |
| இருத்தி | - | முன்னிலை ஒருமை வினைமுற்று |
| நோக்காய் | - | முன்னிலை ஒருமை வினைமுற்று |
| ஆற்றீர் | - | முன்னிலை பன்மை எதிர்மறை வினைமுற்று |
| காகிதப்பூ | - | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| பொற்சிலம்பு | - | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| பொலம்புனை | - | மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| ஆடுக | - | வியங்கோள் வினைமுற்று |
| ஈக | - | வியங்கோள் வினைமுற்று |
| காக்க | - | வியங்கோள் வினைமுற்று |
| செயல் | - | வியங்கோள் வினைமுற்று |
| புகுக | - | வியங்கோள் வினைமுற்று |
| போக, நடக்க | - | வியங்கோள் வினைமுற்று |
| வருக | - | வியங்கோள் வினைமுற்று |

| | | |
|---|---|---|
| வாழிய | - | வியங்கோள் வினைமுற்று |
| வாழ்க | - | வியங்கோள் வினைமுற்று |
| அம்மா | - | வியப்பிடைச்சொல் |
| ஊர | - | விளித்தொடர் |
| அகல்முகில் | - | வினைத்தொகை |
| அடுதிரை | - | வினைத்தொகை |
| அலைகடல் | - | வினைத்தொகை |
| ஆகாறு | - | வினைத்தொகை |
| ஆடரங்கு | - | வினைத்தொகை |
| இழையணி | - | வினைத்தொகை |
| ஈர்வளை | - | வினைத்தொகை |
| ஈன்குழவி | - | வினைத்தொகை |
| உயரண்டம் | - | வினைத்தொகை |
| உயர்எண்ணம் | - | வினைத்தொகை |
| உயர்சினை | - | வினைத்தொகை |
| உயர்துலை | - | வினைத்தொகை |
| ஒழுகுநீர் | - | வினைத்தொகை |
| ஓங்குமலை | - | வினைத்தொகை |
| களிநடம் | - | வினைத்தொகை |
| சுடரொளி | - | வினைத்தொகை |
| சுழி வெள்ளம் | - | வினைத்தொகை |
| செய்குன்று | - | வினைத்தொகை |
| செய்வினை | - | வினைத்தொகை |
| தாழ்பிறப்பு | - | வினைத்தொகை |
| திருந்துமொழி | - | வினைத்தொகை |
| திரைகவுள் | - | வினைத்தொகை |
| படர்முகில் | - | வினைத்தொகை |
| படுவிடம் | - | வினைத்தொகை |
| பழகு, பாட்டு | - | வினைத்தொகை |
| புதுக்குநாள் | - | வினைத்தொகை |
| புனைகலம் | - | வினைத்தொகை |
| புனைமலர் | - | வினைத்தொகை |
| பெய்சாகாடு | - | வினைத்தொகை |
| பொங்குகடல் | - | வினைத்தொகை |
| பொருதகர் | - | வினைத்தொகை |
| பொழி திருமுகம் | - | வினைத்தொகை |
| மருவு செய் | - | வினைத்தொகை |
| மொய்கழல் | - | வினைத்தொகை |
| வடிநுனை | - | வினைத்தொகை |
| வளர்கூடல் | - | வினைத்தொகை |
| விரிமலர் | - | வினைத்தொகை |
| வேங்கடம் | - | வினைத்தொகை |
| அகழ்வார் | - | வினையாலணையும் பெயர் |
| அஞ்சினர் | - | வினையாலணையும் பெயர் |

| | | |
|---|---|---|
| அஞ்சுவது | - | வினையாலணையும் பெயர் |
| அறிகல்லாதவர் | - | வினையாலணையும் பெயர் |
| அறிவான் | - | வினையாலணையும் பெயர் |
| ஆற்றுவான் | - | வினையாலணையும் பெயர் |
| இகலவர் | - | வினையாலணையும் பெயர் |
| இறந்தார் | - | வினையாலணையும் பெயர் |
| உடையான் | - | வினையாலணையும் பெயர் |
| உணர்த்துவான் | - | வினையாலணையும் பெயர் |
| உய்ப்பது | - | வினையாலணையும் பெயர் |
| ஒருத்தார் | - | வினையாலணையும் பெயர் |
| ஒருத்தார், பொறுத்தார் | - | வினையாலணையும் பெயர் |
| ஒல்கார் | - | வினையாலணையும் பெயர் |
| ஒள்ளியவர் | - | வினையாலணையும் பெயர் |
| காத்தார் | - | வினையாலணையும் பெயர் |
| கூடினர் | - | வினையாலணையும் பெயர் |
| கேட்டனர் | - | வினையாலணையும் பெயர் |
| கொன்றார் | - | வினையாலணையும் பெயர் |
| சார்ந்தவர் | - | வினையாலணையும் பெயர் |
| சூழ்வார் | - | வினையாலணையும் பெயர் |
| செய்தாரை | - | வினையாலணையும் பெயர் |
| தக்கார் | - | வினையாலணையும் பெயர் |
| துடைத்தவர் | - | வினையாலணையும் பெயர் |
| துறந்தார் | - | வினையாலணையும் பெயர் |
| தெரிவார் | - | வினையாலணையும் பெயர் |
| நின்றாள் | - | வினையாலணையும் பெயர் |
| நின்றோன் | - | வினையாலணையும் பெயர் |
| பகர்வார் | - | வினையாலணையும் பெயர் |
| பெற்றியார் | - | வினையாலணையும் பெயர் |
| போனவர் | - | வினையாலணையும் பெயர் |
| மாண்டார் | - | வினையாலணையும் பெயர் |
| வந்தவர் | - | வினையாலணையும் பெயர் |
| அதிர | - | வினையெச்சம் |
| அறிந்து | - | வினையெச்சம் |
| உள்ள | - | வினையெச்சம் |
| எய்தி | - | வினையெச்சம் |
| எரிந்து, நாட்டி | - | வினையெச்சம் |
| எழுந்து, சென்று | - | வினையெச்சம் |
| எழுந்து, புதைத்து, வணங்கி | - | வினையெச்சம் |
| கொண்டு, வைத்து | - | வினையெச்சம் |
| செயின் | - | வினையெச்சம் |
| சொல்லி, இறைஞ்சி | - | வினையெச்சம் |
| தேர்ந்து கொளல் | - | வினையெச்சம் |
| தொழுது அறைகுவன் | - | வினையெச்சம் |
| நீக்கி | - | வினையெச்சம் |

| | | |
|---|---|---|
| நோக்கி | - | வினையெச்சம் |
| பரந்து, தாக்கி | - | வினையெச்சம் |
| புடைத்து, நிமிர்ந்து | - | வினையெச்சம் |
| பொதிந்து | - | வினையெச்சம் |
| பொருந்தி | - | வினையெச்சம் |
| பொழிந்திழிய | - | வினையெச்சம் |
| போந்து | - | வினையெச்சம் |
| போற்றி | - | வினையெச்சம் |
| மயங்கி, வணங்கி | - | வினையெச்சம் |
| வருபுனல் | - | வினையெச்சம் |
| விழுந்து | - | வினையெச்சம் |
| வேற்காளை | - | வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| மலர்ச்சோலை | - | வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை |

## 16. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

இப்பகுதியில் கேள்விகளை நன்கு படித்துப் பார்த்தாலே எளிதில் விடை அளிக்கலாம். கொடுக்கப்பட்டிருக்கும் சொற்றொடர் விடை வடிவத்தில் இருந்தால், இதற்குரிய சரியான வினாவை கொடுக்கப்பட்டிருக்கும் நான்கு வினாவில் இருந்து கண்டுபிடிக்க வேண்டும்.

கொடுக்கப்பட்டிருக்கும் சொற்றொடர் வினா வடிவத்தில் இருந்தால், இதற்குரிய சரியான விடையை கொடுக்கப்பட்டிருக்கும் நான்கு விடையில் இருந்து கண்டுபிடிக்க வேண்டும்.

இவ்வகை வினாக்களுக்கு தனியே தயார் ஏதும் செய்ய வேண்டியதில்லை, கொடுக்கப்பட்டிருக்கும் விடைகளை மிகவும் கவனமாக படித்து பதில் அளித்தால் போதும்.

### வினா

தாம் எதிர்பார்க்கும் கருத்தைப் பெறுவதற்கு ஒருவரிடம் எவ்வாறு வினவ வேண்டும் என்பதை விளக்குவது வினாப்பகுதி. வினா ஆறு வகைப்படும்.

அவை,

- ✯ அறிவினா
- ✯ அறியாவினா
- ✯ ஐய வினா
- ✯ கொளல் வினா
- ✯ கொடை வினா
- ✯ ஏவல் வினா

### 1. அறிவினா

- ✯ தான் தெரிந்தவற்றை மற்றவரிடம் கேட்பது அறிவினா.
- ✯ நேர்காணலின் போது நேர்காணல் செய்பவர் போட்டியாளரை பார்த்து கேட்பது
- ✯ **(எ-கா)** :திருக்குறளை எழுதியவர் யார்?

தேர்வுக்குறிப்புகள்

## 2. அறியாவினா

- தனக்கு தெரியாத ஒன்றை தெரிந்தவரிடம் கேட்டு அறிவது அறியாவினா
- மாணவர் ஆசிரியரிடம் கேட்பது
- (எ-கா): ஐயா, இதற்கு என்ன பொருள் ?

## 3. ஐய வினா

- இதுவா அதுவா எனத் தெளிய முடியாத நிலையில் ஒரு பொருளை ஐயுற்று வினவும் வினா ஐயவினா .
- (எ-கா) : அங்கே கிடப்பது பாம்பா? கயிறா?

## 4. கொளல் வினா

- ஒரு பொருளைப் பிறரிடம் இருந்து பெறுவதற்காக வினவப்படும் வினா, கொளல்வினா
- (எ-கா) : கோகுல் உன்னிடம் கூடுதல் இந்திய வரைபடம் உள்ளதா?

## 5. கொடை வினா

- தன் பொருளை பிறருக்கு கொடுக்கும் பொருட்டு வினவப்படும் வினா கொடை வினா எனப்படும்
- (எ-கா) : பணம் வேண்டுமா?

## 6. ஏவல் வினா

- ஒருவர் ஒரு செயலை மற்றவரைச் செய்விக்க வேண்டும் என்பதற்காக வினவுவது ஏவல்வினா
- (எ-கா) : படித்தாயா?

தேர்வுக்குறிப்புகள்

## விடை

வினாவிற்கு ஏற்றவாறு பதில் அளிப்பது விடையாகும் **விடை எட்டு வகைப்படும்.**

- சுட்டு விடை
- மறை விடை
- நேர் விடை
- ஏவல் விடை
- வினா எதிர் வினாதல் விடை
- உற்றது உணர்தல் விடை
- உறுவது கூறல் விடை
- இனமொழி விடை

### 1. சுட்டு விடை

- கேட்கப்படும் கேள்விக்கு ஒன்றைக் கருதி அல்லது சுட்டிக்காட்டி விடையளிப்பது சுட்டு விடை எனப்படும்.
- (எ-கா) : கோவிலுக்குச் செல்லும் வழி இதுதான்.

### 2. மறை விடை

- வினாவிற்கு எதிர்மறையாகக் கூறும் விடை மறைவிடை எனப்படும்.
- (எ-கா) : நீ நீந்துவாயா? நீந்த மாட்டேன்

### 3. நேர் விடை

- வினவும் வினாவிற்கு உடன்பாட்டு பொருளில் விடையளித்தல் நேர் விடை எனப்படும்
- (எ-கா) : நாளை அலுவலகம் செல்வாயா? செல்வேன்

### 4. ஏவல் விடை

- வினாவில் உள்ள செயலை வினவியவரைச் செய்யச் சொல்வது ஏவல் விடை எனப்படும்.
- வினவியவரையே ஏவுவதால் ஏவல் விடையாகும்
- (எ-கா) :கடைக்கு செல்வாயா? நீயே செல்

தேர்வுக்குறிப்புகள்

## 5. வினா எதிர் வினாதல் விடை

- கேட்கப்படும் வினாவிற்கு விடை வினாவாகவே கூறுவது வினா எதிர் வினாதல் விடை எனப்படும்.
- (எ-கா) : நீ தேர்வுக்குப் படித்தாயா? படிக்காமல் இருப்பேனா

## 6. உற்றது உரைத்தல் விடை

- வினவப்பட்ட வினாவிற்குத் தனக்கு நேர்ந்ததை விடையாகக் கூறுவது உற்றது உரைத்தல் விடை எனப்படும்.
- (எ-கா) : நீ பாடுவாயா? பல் வலிக்கிறது.

## 7. உறுவது கூறுதல் விடை

- கேட்கப்படும் வினாவிற்கு தனக்கு நிகழப் போவதை கூறுவது உறுவது கூறுதல் விடை எனப்படும்.
- (எ-கா) : எட்டிக்காய் சாப்பிடுகிறாயா? கசக்கும்

## 8. இனமொழி விடை

- கேட்கப்படும் வினாவிற்கு வேறு ஒரு விடையைக் கூறுவது இனமொழி விடை எனப்படும்.
- நீ ஆடுவாயா? பாடுவேன்

தேர்வுக்குறிப்புகள்

## 17. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்

### வாக்கிய வகை அறிதல்

ஏதாவதொரு சொற்றொடரைக் கொடுத்து இது எவ்வகை வாக்கியம் எனக் கண்டுபிடி என்ற வகையில் வினாக்கள் அமையும்.

- தனி வாக்கியம்
- தொடர் வாக்கியம்
- கலவை வாக்கியம்
- கட்டளை வாக்கியம்
- வினா வாக்கியம்
- உணர்ச்சி வாக்கியம்
- செய்தி வாக்கியம்
- வியங்கோள் வாக்கியம்
- எதிர்மறை வாக்கியம்
- உடன்பாட்டு வாக்கியம்
- நேர்க்கூற்று வாக்கியம்
- அயற்கூற்று வாக்கியம்

### 1. தனி வாக்கியம்

- ஒரு எழுவாய் அல்லது பல எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் அது தனி வாக்கியம்
- (எ.கா) சேர, சோழ, பாண்டியர் தமிழ் வளர்த்தனர்
- பாரி வந்தான்.
- பாரியும் கபிலனும் வந்தனர்.

### 2. தொடர் வாக்கியம்

- தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வரும்.
- ஒரு எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடியும்.
- தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வந்து இடையில் ஆகையால், அதனால் எனும் இணைப்புச் சொற்கள் வெளிப்படையாக வரும்.
- பல வினையெச்சங்களைக் கொண்டு இறுதியில் வினைமுற்றைக் கொண்டு முடியும்.
- (எ.கா) ராமன் திருச்சி சென்றான்; மலைக்கோட்டை ஏறினான்; கடவுளை வழிபட்டான்.
- நாகம் இடியோசை கேட்டது; அதனால் நடுங்கியது.
- தமிழரசி போட்டியில் பங்கேற்றாள்; வெற்றி பெற்றாள்; பரிசு பெற்றாள்.



தேர்வுக்குறிப்புகள்

## 3. கலவை வாக்கியம் :

கலவை வாக்கியம் என்பது, முற்றுத் தொடராக அமைந்த ஒரு முதன்மை வாக்கியமும் எச்சத் தொடர்களாக அமைந்த பல துணை வாக்கியங்களும் கலந்து வரும் வாக்கியமாகும். (அல்லது) ஓர் முதன்மை வாக்கியத்துடன் ஒன்று அல்லது பல சார்பு வாக்கியங்கள் இணைந்து வருமாயின் அது கலவை வாக்கியம் எனப்படும்

- ‘ஓ’ ‘என்று’ ‘ஆல்’ என்ற இணைப்புச் சொற்கள் வரும்.
- (எ.கா) மேகம் கருத்ததால் மழை பெருகியது.
- யார் திறமையாகப் படிக்கிறார்களோ அவர்கள் வெற்றி பெறுவர்.
- தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்று, அதன்வழி நடந்து, வாழ்க்கையில் முன்னேற அனைவரும் முயல வேண்டும்.
- நாங்கள் வாழ்வில் முன்னேற வேண்டுமென்று ஆசிரியர் எங்களுக்கு அறிவுரை வழங்கினார்.

## 4. கட்டளை வாக்கியம்

- பிறரை ஏவுகின்ற முறையிலும் கட்டளையிடும் முறையிலும் அமைந்து வருமாயின் அது கட்டளை வாக்கியம்.
- இதில் இறுதிச் சொல் வேர்ச்சொல்லாக வரும்.
- (எ.கா) அறம் செய்.
- தண்ணீர் கொண்டு வா.
- இளமையில் கல்.
- திருக்குறளைப் படி

## 5. வினா வாக்கியம்

- வினாப் பொருளைத் தரும் வாக்கியம் வினா வாக்கியம்.
- வினா எழுத்துக்களாவன; ஆ, எ, ஏ, ஓ, யா ஆகும்.
- (எ.கா) இது சென்னைக்கு செல்லும் வழியா?
- நீ மனிதனா? - ஆ
- நீ தானே? - ஏ
- உளரோ? - ஓ

### 6. உணர்ச்சி வாக்கியம்

- மகிழ்ச்சி, துன்பம், வியப்பு போன்ற உள்ளத்து உணர்வுகள் வெளிப்படுமாறு வாக்கியம் அமையுமாயின் அது உணர்ச்சி வாக்கியம்
- (எ.கா) ஆ! தாஜ்மஹால் என்ன அழகு!
- ஐயகோ! நேருஜி மறைந்தாரே!

### 7. செய்தி வாக்கியம்

- ஒரு செய்தியைத் தெளிவாக தெரிவிக்கும் வகையில் அமைவதே செய்தி வாக்கியம்
- (எ.கா) உடற்பயிற்சி செய்வது உடலுக்கு நல்லது
- மாணவர்கள் சீருடையில் வர வேண்டும்

### 8. வியங்கோள் வாக்கியம்

- கட்டளை, வேண்டுகோள், வாழ்த்துதல், வைதல், ஆகியவற்றுடன் ஒன்றைத் தெரிவிக்கும் வாக்கியமே வியங்கோள் வாக்கியம்
- (எ.கா) தமிழை முறையாகப் படி - கட்டளை
- நீடுழி வாழ் - வாழ்த்துதல்
- தீயென ஒழி - வைதல்
- நல்ல கருத்தினை நாளும் கேள் - வேண்டுகோள்

### 9. எதிர்மறை வாக்கியம்

- ஒரு செயல் அல்லது தொழில் நிகழாமையைத் தெரிவிப்பது எதிர்மறை வாக்கியம் ஆகும்.
- (எ.கா) அவன் கல்வி கற்றிலன்
- உடன்பாடு - எதிர் மறை
- அவன் சென்றான் - அவன் சென்றிலன்
- ஆமைகள் வேகமாக ஓடும் - ஆமைகள் வேகமாக ஓடா
- புலி புல்லைத் தின்னும் - புலி புல்லைத் தின்னா
- மொழி இலக்கிய வளம் உடையது - மொழி இலக்கிய வளம் அற்றது

## 10. உடன்பாட்டு வாக்கியம்

- ஒரு செயல் அல்லது தொழில நிகழ்வதைத் தெரிவிப்பது உடன்பாட்டு வாக்கியம் ஆகும்.
- (எ.கா) வயலில் மாடுகள் மேய்ந்தன
- வகுப்பில் மாணவர்கள் அமர்ந்திருந்தனர்.

## 11. நேர்க்கூற்று வாக்கியம்

- ஒருவர் சொன்ன செய்தியை பொருள் மாறாமல் அவர் சொன்னபடியே சொன்னால் அது நேர்க்கூற்று வாக்கியம் எனப்படும்.
- அவர் இவரிடம் சொன்ன செய்தியை மேற்கோள் இட்டுக் காட்ட வேண்டும்.
- (எ.கா) வளவன்,"நான் ஊருக்குச் செல்கிறேன்" என்றான்.

## 12. அயற்கூற்று வாக்கியம்

- ஒருவர் சொன்ன செய்தியை கேட்டு அவன் இப்படியாகச் சொன்னான் என்று மற்றொருவரிடம் கூறுவது அயற்கூற்று வாக்கியம் ஆகும்.
- (எ.கா) வளவன் தான் மதுரை செல்கிறேன் என்று சொன்னான்.

தேர்வுக்குறிப்புகள்

**கருத்தின் அடிப்படையில்**, செய்தி வாக்கியம், கட்டளை வாக்கியம், வினா வாக்கியம், உணர்ச்சி வாக்கியம் என 4 வகைகள் உள்ளன.

**எடுத்துக்காட்டுக்கு,**

- ராணி புத்தகம் படித்தாள் - இது செய்தி வாக்கியம்.
- இளமையில் கல், இங்கு வா - கட்டளை வாக்கியம்.
- நீங்கள் என்ன செய்கிறீர்கள்?- வினா வாக்கியம்.
- ஆ, கல்லணை என்ன அழகு! - உணர்ச்சி வாக்கியம். (வெறுப்பு, அச்சம், வெகுளி உள்ளிட்ட பல)

**அமைப்பின் அடிப்படையில்**, தனி வாக்கியம், தொடர் வாக்கியம், வினா வாக்கியம், கலவை வாக்கியம் என 4 வகைகள் உள்ளன.

- மணியும் சோமுவும் வந்தனர். - பல எழுவாய், ஒரே பயனிலையைக் கொண்டு முடிவதே தனி வாக்கியம்.
- மோகன் போட்டியில் பங்கேற்றான்; வெற்றி பெற்றான்; பரிசு பெற்றான். - ஒரு எழுவாய் பல பயனிலைக் கொண்டு முடிவது தொடர் வாக்கியம்.
- ரம்யா போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்று பரிசு பெற்றாள். - ஒரு முதன்மை வாக்கியத்துடன் பல சார்பு வாக்கியங்கள் இணைந்து வருவது கலவை வாக்கியம்.

## 18. தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்

### வினை வகைகள்

வினைச்சொற்கள் முற்று, எச்சம் என்பதாக மட்டுமன்றி, அவை பயன்படுவதன் அடிப்படையில் பலவாகப் பகுத்துரைக்கப்படுகின்றன. அவ்வகையில்,

- ✯ தன்வினை
- ✯ பிறவினை
- ✯ செய்வினை
- ✯ செயப்பாட்டுவினை
- ✯ உடன்பாட்டுவினை
- ✯ எதிர்மறைவினை

என்பன போன்ற பல வகைப்பாடுகள் உள்ளன.

### தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை அறிதல்

ஒரு வாக்கியத்தைக் கொடுத்து இது எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக என வினாக்கள் அமையும்.

### 1. தன் வினை வாக்கியம்:

- ✯ தன்வினை என்பது ஒருவர் தானே செய்வது.
- ✯ ஒரு எழுவாய் தானே ஒரு செயலை செய்வது தன்வினை ஆகும்.
- ✯ (எ.கா) கரையைச் சேர்வான் - என்னும் தொடரில், சேர்தலாகிய தொழிலை ஒருவன் செய்வான் என்பது பொருள்.
- ✯ செல்வி பாடம் கற்றாள்.
- ✯ முருகன் திருந்தினான்.

## 2. பிறவினை வாக்கியம்

- பிறவினை என்பது பிறரைச் செய்யும்படி ஆக்குவது.
- ஒரு எழுவாய் ஒரு செயலை பிறரைக் கொண்டு செய்தால் அது பிறவினை வாக்கியம் ஆகும்.
- 'பித்து' 'வித்து' எனும் சொற்கள் சேர்ந்து வரும்.

(எ.கா)

கரையில் சேர்ப்பான் - என்பது சொல்லாயின், வேறு யாரையோ அல்லது எதையோ சேரும்படி இவன் செய்வான் என்பது பொருளாகும், முன்னதில் சேரும் வினை இவனுடையது. பின்னதில் அவ்வினை வேறு ஒரு பொருளுக்கு உரியது.

- ஆசிரியை பாடம் கற்பித்தார்
- அவன் திருத்தினான்

| தன்வினை | - | பிறவினை | | |
|---|---|---|---|---|
| | | | | |
| வரு**ந்**துவான் | - | வரு**த்**துவான் | } | இவற்றில் மெல்லொற்று (ந்,ங்) வல்லொற்றாகிப் (த்,க்) பிறவினை ஆயிற்று. |
| திரு**ந்**தினான் | - | திரு**த்**தினான் | | |
| அட**ங்**கினான் | - | அட**க்**கினான் | | |
| | | | | |
| ஆ**டி**னான் | - | ஆ**ட்டி**னான் | } | இவற்றில் வல்லொற்று (ட்,ற்) இரட்டித்துப் (ட்ட், ற்ற்) பிறவினை ஆயிற்று. |
| மா**று**வான் | - | மா**ற்று**வான் | | |

பிறவினையாகும்போது வி, பி ஆகிய விகுதிகளில் ஒன்று, சேர்ந்து வருவதும் உண்டு.

- நட - நடப்பி - நடப்பித்தான்செய் - செய்வி - செய்வித்தான்

என்பனபோல வரும். சொல் வடிவை விட, அது உணர்த்தும் பொருளை வைத்தே தன்வினையா, பிறவினையா என அறிதல் வேண்டும்.

தன்வினை - பிறவினை

- திருந்தினான் - திருத்தினான்
- உருண்டான் - உருட்டினான்
- பயின்றான் - பயிற்றுவித்தான்
- பெருகு - பெருக்கு
- செய் -சய்வி
- வாடு - வாட்டு
- நடந்தான் - நடத்தினான்
- சேர்கிறேன் - சேர்க்கிறேன்
- ஆடினாள் - ஆட்டுவித்தாள்
- பாடினான் - பாடுவித்தான்
- கற்றார் - கற்பித்தார்
- தேடினான் - தேடுவித்தான்
- உண்டாள் - உண்பித்தாள்
- அடங்குவது - அடக்குவது

## 3. செய்வினை வாக்கியம்

ஒரு வாக்கியம் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற வரிசையில் அமையும் வாக்கியத்தில், செயப்படுபொருளோடு ‘ஐ’ எனும் இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்துவரும். சில சமயம் ‘ஐ’ மறைந்தும் வரும்.

- (எ.கா) புத்தகம் படிக்கிறேன்
- கொசு கடித்தது
- நாயை அடிக்கிறான்
- பாரதியார் குயில்பாட்டைப் பாடினார்.
- தச்சன் நாற்காலியைச் செய்தான்
- அவள் மாலையைத் தொடுத்தாள்
- ராதா பொம்மையைச் செய்தாள்

இத்தொடர்களில் உள்ள வினைச் சொற்கள் செய்வினைச் சொற்களாகும்.

## 4. செயப்பாட்டு வினை வாக்கியம்

செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்ற வரிசையில் வாக்கியம் அமையும். எழுவாயோடு ‘ஆல்’ என்ற 3-ம் வேற்றுமை உருபும், பயனிலையோடு‘பட்டது’ ‘பெற்றது’ என்ற சொற்கள் சேர்ந்து வரும்.

**(எ.கா) கல்லணை (செயப்படுபொருள்) கரிகாலனால் (எழுவாய்) கட்டப்பட்டது (பயனிலை)**

- ✯ தஞ்சை சோழர்களால் புகழ்பெற்றது..
- ✯ புத்தகம் (என்னால்) படிக்கப்படுகிறது.
- ✯ நான் (கொசுவால்) கடிக்கப்பட்டேன்.
- ✯ நாய் (அவனால்) அடிக்கப்படுகிறது.

இத்தொடர்களில் செயப்பாட்டு வினைகள் உள்ளன. செய்வினையில் படிக்கிறேன் என்றிருந்த சொல், செயப்பாட்டு வினையில் படிக்கப்படுகிறது என மாறுகிறது. படு என்னும் துணைவினைச் சொல் இவை அனைத்திலும் சேர்ந்து வருகிறது.

**உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை TNPSC பாடத்தொகுப்பில் இல்லை.**

**[2013 to 2019] TNPSC QUESTIONS**

1. தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க (2019 G4)
   a. அப்பூதி அடிகள் நான்மறை கற்கவில்லை.
   **b. அப்பூதி அடிகள் நான்மறை கற்றார்**
   c. அப்பூதி அடிகள் நான்மறை கற்றாரா?
   d. அப்பூதி அடிகள் நான்மறை கற்பித்தார்.
2. கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் - இத்தொடருக்குரிய சரியான எதிர்ச்சொல்லைத் தருக. (2019 G4)
   **a. கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்**
   b. கலைச்செல்வி கட்டுரை எழுத விரும்பவில்லை
   c. கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள்
   d. கலைச்செல்வி கட்டுரை வாசிக்கவில்லை
3. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக. (2019 G4)
   a. எழிலரசி சிலப்பதிகாரம் கற்றாள்
   b. எழிலரசியால் சிலப்பதிகாரம் கற்பிக்கப்பட்டது
   c. எழிலரசி சிலப்பதிகாரம் கல்லாள்
   **d. எழிலரசி சிலப்பதிகாரம் கற்பித்தாள்**

4. தாய்மொழியை உயிராகப் போற்றுமாறு ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார். - பொருத்தமான வாக்கியத்தை தேர்ந்தெடுக்க. (2019 G4)
   **a. அயற்கூற்று வாக்கியம்**
   b. நேர்க்கூற்று வாக்கியம்
   c. கலவை வாக்கியம்
   d. எதிர்மறை வாக்கியம்
5. பாத்திமா திருக்குறள் கற்பித்தாள் (2019 G4)
   a. தன்வினை வாக்கியம்
   b. செய்வினை வாக்கியம்
   **c. பிறவினை வாக்கியம்**
   d. செயப்பாட்டுவினை வாக்கியம்
6. எழுவாய் செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் எவ்வகைத் தொடர் என்று தேர்ந்தெடு (2018 G4)
   a. செயப்பாட்டு வினைத் தொடர்
   b. கட்டளைத் தொடர்
   c. அயற்கூற்றுத் தொடர்
   **d. செய்வினைத் தொடர்**
7. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாததைத் தேர்ந்தெடு.
   அயற்கூற்றில் வருவன (2018 G4)
   a. மேற்கோள்குறிகள் வராது
   **b. தன்மை, முன்னிலைப் பெயர்கள் படர்க்கைப் பெயர்களாக மாறாது**
   c. அது, அவை - அங்கே என மாறும்
   d. காலப் பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும்
8. துணி கலையரசியால் தைக்கப்பட்டது - இதற்குரிய செய்வினை தொடரை தேர்ந்தெடு (2016 G4)
   a. கலையரசிதுணி தைத்தாள்
   b. கலையரசி தைத்தாள் துணி
   c. கலையரசி என்னதைத்தாள்
   **d. கலையரசி துணியைத் தைத்தாள்.**
9. பட்டியல் I இல் உள்ள தொடர்களைப் பட்டியல் II இல் உள்ள தொடர் வகைகளோடு பொருத்தி, உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (2016 G4)
   (a) என்னே, மயிலின் அழகு! - 1.எதிர்மறைத் தொடர்
   (b) கண்ணன் பாடம் படித்திலன் - 2.உணர்ச்சித் தொடர்
   (c) மணிமொழி பரிக பெற்றாள் - 3.கட்டளைத் தொடர்
   (d) உழைத்துப்பிழை - 4.உடன்பாட்டுத் தொடர்
   a. 3 4 2 1
   b. 3 4 1 2
   **c. 2 1 4 3**
   d. 2 3 1 4

10. பொன்னியிடம் தேன்மொழிதான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள்- எவ்வகைத் தொடர்? (2014 G4)
   a. நேர்க்கூற்று
   **b. அயற்கூற்று**
   c. எதிர்மறைக் கூற்று
   d. கலவைத்தொடர்
11. தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக (2013 G4)
   a. இலக்கியா புத்தாடை அணிவித்தாள்
   **b. இலக்கியா புத்தாடை அணிந்தாள்**
   c. புத்தாடை இலக்கியாவால் அணிவிக்கப்பட்டது
   d. இலக்கியா புத்தாடை அணியாள்
12. தன்வினையைத் தேர்ந்து எழுதுக. (2013 G4)
   a. அப்பூதி அடிகள் நான்மறை கற்கவில்லை
   b. அப்பூதி அடிகள் நான்மறை கற்பித்தார்
   **c. அப்பூதி அடிகள் நான்மறை கற்றார்**
   d. அப்பூதி அடிகள் நான்மறை கற்றாரா?
13. பொற்கொடி ஆயகலை அறுபத்து நான்கினையும் கற்றாள்-இவ்வாக்கியம் எவ்வகை வினை சார்ந்தது? (2013 G4)
   a. பிறவினை
   **b. தன்வினை**
   c. கலவை
   d. செய்யப்பாட்டு வினை
14. கீழ்க்கண்டவற்றில் பிறவினைத் தொடரைக் குறிப்பிடுக. (2018 G2)
   a. பாத்திமா தமிழ் கற்றாள்
   **b. பாத்திமா தமிழ் கற்பித்தாள்**
   c. பாத்திமா மாணவர்களிடம் கூறினாள்
   d. பாத்திமாவிடம் மாணவன் தான் மதுரைக்குச் செல்வதாகக் கூறினான்

15. பிசிராந்தையார், நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார் எவ்வகைத் தொடர்? (2018 G2)
   a. உணர்ச்சித் தொடர்
   b. வினாத் தொடர்
   c. கட்டளைத் தொடர்
   **d. செய்தித் தொடர்**

16. பட்டியல் I இல் உள்ள தொடர்களைப் பட்டியல் II இல் உள்ள தொடர் வகைகளோடு பொருத்தி, உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (2016 G2)
    (a) என்னே, மயிலின் அழகு! - 1.எதிர்மறைத் தொடர்
    (b) கண்ணன் பாடம் படித்திலன் - 2.உணர்ச்சித் தொடர்
    (c) மணிமொழி பரிசு பெற்றாள் - 3.கட்டளைத் தொடர்
    (d) உழைத்துப்பிழை - 4.உடன்பாட்டுத் தொடர்
    a. 3 4 2 1
    b. 3 4 1 2
    **c. 2 1 4 3**
    d. 2 3 1 4
17. இந்தியா மிகப்பெரிய நாடு- எவ்வகை வாக்கியம்? (2014 G2)
    a. தொடர்நிலை வாக்கியம்
    **b. தனிநிலை வாக்கியம்**
    c. கலவை வாக்கியம்
    d. கட்டளை வாக்கியம்
18. திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகளாகும் - எவ்வகை வாக்கியம் (2014 G2)
    **a. செய்தி வாக்கியம்**
    b. கட்டளை வாக்கியம்
    c. வினா வாக்கியம்
    d. வியப்பு வாக்கியம்
19. வாக்கிய வகையைக் கண்டெழுதுதல் :
    குடும்ப விளக்கு பாரதிதாசனால் எழுதப்பட்டது (2014 G2)
    a. செய்வினை வாக்கியம்
    b. கட்டளை வாக்கியம்
    c. பிறவினை வாக்கியம்
    **d. செயப்பாட்டுவினை வாக்கியம்**
20. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக
    ஆடும் மயிலின் அழகுதான் என்னே! (2014 G2)
    a. வினா வாக்கியம்
    b. கட்டளை வாக்கியம்
    **c. உணர்ச்சி வாக்கியம்**
    d. செய்தி வாக்கியம்
21. முதுகுடிப் பிறந்த மகளிரும் நிகரற்ற வீர வாழ்க்கையினராவர். - இவ்வாக்கியம் எவ்வகை வாக்கியத்தைச் சார்ந்தது? (2014 G2)
    a. வியப்பு வாக்கியம்
    b. வினா வாக்கியம்
    **c. செய்தி வாக்கியம்**
    d. கட்டளை வாக்கியம்

22. எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக

தமிழக அரசு சிறந்த கலைஞர்களைக் கௌரவிக்கிறது (2014 G2)

a. செயப்பாட்டு வாக்கியம்

b. தொடர்வாக்கியம்

c. கலவை வாக்கியம்

**d. செய்வினை வாக்கியம்**

23. தனிவாக்கியம் குறித்து கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது? (2013 G2)

a. வினாப் பொருள் தரும் வாக்கியம்

**b. ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடியும்**

c. தனி வாக்கியங்கள் பல தொடர்ந்து வரும்

d. முதன்மை வாக்கியம் ஒரு துணை வாக்கியத்துடன் சேர்ந்து வரும்

24. செயப்பாட்டு வினைச்சொற்றொடரைக் கண்டறிக. (2013 G2)

**a. நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது**

b. தச்சன் நாற்காலியைச் செய்தான்

c. நாற்காலியைச் செய்தவன் தச்சன்

d. நாற்காலியைத் தச்சன் செய்தான்

25. எவ்வகை வாக்கியம்?

மாணவன் பாடம் படித்திலன் (2013 G2)

**a. எதிர்மறைத் தொடர்**

b. பொருள் மாறா எதிர்மறைத் தொடர்

c. உடன்பாட்டுத் தொடர்

d. கலவைத் தொடர்

26. செயப்பாட்டு வினைச்சொற்றொடரைக் கண்டறிக. (2013 G2)

a. வ.உ.சி. தொல்காப்பியத்தைப் பதிப்பித்தார்

**b. தொல்காப்பியம் வ.உ.சி.யால் பதிப்பிக்கப்பட்டது**

c. பதிப்பித்தார் தொல்காப்பியத்தை வ.உ.சி

d. வ.உ.சி. பதிப்பித்தது தொல்காப்பியம்

27. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல்.- பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவியல் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார் - எவ்வகை வாக்கியம் என சுட்டுக (2013 G2)

**a. தனி வாக்கியம்**

b. கலவை வாக்கியம்

c. செயப்பாட்டு வினை வாக்கியம்

d. பிறவினை வாக்கியம்

தேர்வுக்குறிப்புகள்

28. பிறவினை வாக்கியத்தைகண்டறிக (2013 G2)

a. புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார்
b. அகநானூற்றுப் பாடல்களை மதுரை உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திர சன்மர் தொகுத்தார்
c. அகநானூற்றைப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி தொகுப்பித்தான்
d. ஐங்குறுநூறு நூலைப்புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் தொகுத்தார்

## 19. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்

**கொடுக்கப்பட்டிருக்கிற உவமையை நன்றாக புரிந்து கொண்டால் எளிதாக விடையளிக்கலாம்.* எளிமையான பகுதிகளில் இதுவும் ஒன்று.* கீழே சில உதாரணங்களை தெரிந்து கொள்ளுங்கள் .**

1. **கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடி புகுந்தது போல்**
   **விடை: அத்துமீறல்**
2. **அச்சில் வார்த்தாற் போல்**
   **விடை: ஒரே சீராக**
3. **அவளை நினைத்து உரலை இடித்தாற் போல்**
   **விடை: கவனம்**
4. **அரை கிணறு தாண்டியவன் போல்**
   **விடை: ஆபத்து**
5. **இடி விழுந்த மரம் போல்**
   **விடை: வேதனை**
6. **உமையும், சிவனும் போல்**
   **விடை: நெருக்கம், நட்பு**
7. **ஊமை கண்ட கனவு போல்**
   **விடை: தவிப்பு, கூற இயலாமை**
8. **எட்டாப்பழம் புளித்தது போல்**
   **விடை: ஏமாற்றம்**
9. **ஏழை பெற்ற செல்வம் போல்**
   **விடை: மகிழ்ச்சி**
10. **கயிரற்ற பட்டம் போல்**
    **விடை: தவித்தல், வேதனை**
11. **கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல்**
    **விடை: துன்பம், வேதனை**

12. தொட்டனை தூறும் மணற்கேணி
    விடை: அறிவு
13. உடுக்கை இழந்தவன் கைபோல்
    விடை: நட்பு, உதவுதல்
14. நீரின்றி அமையாது உலகெனின்
    விடை: ஒழுக்கம் இராது, ஒழுக்கு
15. தோன்றின் புகழோடு தோன்றுக
    விடை: தோன்றாமை நன்று
16. வரையா மரபின் மாரி போல்
    விடை: கொடுக்கும் தன்மை
17. பகல்வெல்லும் கூகையைக் காக்கைப் போல்
    விடை: எளிதில் வெல்லுதல்
18. ஒருமையுள் ஆமை போல்
    விடை: அடக்கம்
19. ஊருணி நீர் நிறைதல்
    விடை: செல்வம்
20. மருந்தாகி தப்பா மரம்
    விடை: தீர்த்து வைத்தல்
21. செல்வற்கே செல்வம் தகைத்து
    விடை: அடக்கம்
22. பாராங்கல் மீது விழும் மழைநீர் போல்
    விடை: சிதறிப்போதல்
23. மடவார் மனம் போல்
    விடை: மறைந்தனர்
24. அகழ்வாரை தாங்கும் நிலம் போல்
    விடை: பொறுமை, பொறுத்தல்
25. அத்தி பூத்தாற் போல்
    விடை: அறிய செல்வம்
26. அனலில் இட்ட மெழுகு போல்
    விடை: வருத்தம், துன்பம்
27. அலை ஓய்ந்த கடல் போல்
    விடை: அமைதி, அடக்கம்
28. அழகுக்கு அழகு செய்வது போல்
    விடை: மேன்மை
29. அடியற்ற மரம் போல்
    விடை: துன்பம், விழுதல், சோகம்
30. இஞ்சி தின்ற குரங்கு போல்
    விடை: துன்பம், வேதனை



தேர்வுக்குறிப்புகள்

31. இடி ஓசை கேட்ட நாகம் போல்
விடை: அச்சம், மருட்சி, துன்பம்
32. இழவு காத்த கிளி போல்
விடை: ஏமாற்றம், நினைத்தது கை கூடாமை
33. உயிரும் உடம்பும் போல்
விடை: ஒற்றுமை, நெருக்கம், நட்பு
34. உள்ளங்கை நெல்லிக்கனி போல்
விடை: தெளிவு
35. ஊசியும் நூலும் போல்
விடை: நெருக்கம், உறவு
36. எலியும் பூனையும் போல்
விடை: பகை, விரோதம்
37. எரிகின்ற நெய்யில் எண்ணெய் ஊற்றினார் போல்
விடை: வேதனையைத் தூண்டுதல்
38. ஒருநாள் கூத்திற்கு மீசை சிரைத்தாற் போல்
விடை: வெகுளித்தனம், அறியாமை
39. கல்லுப்பிள்ளையார் போல்
விடை: உறுதி, திடம்
40. சுதந்திர பறவை போல்
விடை: மகிழ்ச்சி, ஆனந்தம்
41. கடல் மடை திறந்தாற் போல்
விடை: விரைவு, வேகம்
42. கடலில் கரைத்த பெருங்காயம் போல்
விடை: பயனற்றது, பயனின்மை
43. கடன் பட்டான் நெஞ்சம் போல்
விடை: மனவருத்தம், கலக்கம்
44. காட்டாற்று ஊர் போல்
விடை: அழிவு, நாசம்
45. கிணற்றுத் தவளை போல்
விடை: அறியாமை, அறிவின்மை
46. கிணறு வேட்ட பூதம் பிறந்தது போல்
விடை: அதிர்ச்சி, எதிர்பாரா விளைவு
47. குன்று முட்டிய குருவி போல்
விடை: வேதனை, துன்பம், சக்திக்கு மீறிய செயல்
48. குட்டி போட்ட பூனை போல்
விடை: பதட்டம், அழிவு, துன்பம்
49. சாயம் போன சேலை போல்
விடை: பயனின்மை

50. சூரியனை கண்ட பணி போல்
விடை: மறைவு, ஓட்டம்
51. தாயைக் கண்ட சேயைப் போல
விடை: மகிழ்ச்சி
52. இலைமறை காய் போல்
விடை: மறைபொருள்
53. மழைமுகம் காணாப் பயிர் போல
விடை: வாட்டம்
54. விழலுக்கு இறைத்த நீர் போல
விடை: பயனற்றது
55. சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்தது போல
விடை: மிக்க மகிழ்வு
56. உடுக்கை இழந்தவன் கை போல
விடை: நட்புக்கு உதவுபவன்
57. மண்ணுக்குள் மறைந்திருக்கும் நீரைப் போல
விடை: மாந்தருள் ஒளிந்திருக்கும் திறன்
58. இணருழந்தும் நாறா மலரனையார்
விடை: விரித்துரைக்க இயலாதவர்
59. குந்தித் தின்றால் குன்றும் மாளும்
விடை: சோம்பல்
60. வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவது போல
விடை: அறிவற்ற தன்மை
61. வளர்ந்த கடா மார்பில் பாய்வது போல
விடை: நன்றியின்மை
62. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது
விடை: சான்றாண்மை
63. சேற்றில் மலர்ந்த செந்தாமரை
விடை: குடிபிறப்பின் சிறப்பு
64. அனலில் விழுந்த புழுப்போல
விடை: தவிர்ப்பு
65. கண்ணைக் காக்கும் இமை போல
விடை: பாதுகாப்பு
66. நீர்க்குமிழி அன்ன வாழ்க்கை
விடை: நிலையாமை
67. உமி குற்றிக் கைவருந்தல் போல
விடை: பயனற்ற செயல்
68. பல துளி பெருவெள்ளம்
விடை: சேமிப்பு

69. நத்தைக்குள் முத்துப் போல
விடை: மேன்மை
70. ஊமை கண்ட கனவு போல
விடை: கூற இயலாமை, தவிப்பு
71. பூவோடு சேர்ந்த நார் போல
விடை: உயர்வு
72. நாண் அறுந்த வில் போல
விடை: பயனின்மை
73. மேகம் கண்ட மயில் போல
விடை: மகிழ்ச்சி
74. தாயைக் கண்ட சேயைப் போல
விடை: மகிழ்ச்சி
75. சிறகு இழந்த பறவை போல
விடை: கொடுமை
76. மழை காணாப் பயிர் போல
விடை: வறட்சி
77. நட்புக்கு கரும்பை உவமையாகச் சொன்ன இலக்கியம்
விடை: நாலடியார்
78. இயற்கை தவம் என்ற அடைமொழியால் குறிக்கப்படும் நூல்
விடை: சீவக சிந்தாமணி
79. திருத்தொண்டர் புராணம் என்னும் அடைமொழியால் குறிக்கப்படும் நூல்
விடை: பெரியபுராணம்
80. இரட்டைக் காப்பியம் என்ற அடைமொழியால் குறிக்கப்படும் நூல்
விடை: சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை
81. வள்ளலார் என்று போற்றப்படுபவர்
விடை: இராமலிங்க அடிகளார்
82. விருத்தமெனும் ஒண்பாவில் உயர்ந்தவர்
விடை: கம்பர்
83. வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவது போல
விடை: அறிவற்ற தன்மை
84. நீர்க்குமிழி அன்ன வாழ்க்கை போல
விடை: நிலையாமை
85. காராண்மை போல ஒழுகுதல்
விடை: வள்ளல் தன்மை
86. நிலத்தறைந்தான் கை பிழையாதற்று
விடை: துன்பம்

87. விழலுக்கு இறைத்த நீர் போல
விடை: பயனற்றது
88. புதையல் காத்த பூதம் போல
விடை: பயனின்மை
89. தாமரை இலை தண்ணீர் போல
விடை: பற்றற்றது
90. பால்மனம் மாறா குழந்தை போல
விடை: வெகுளி
91. கடல் மடை திறந்த வெள்ளம் போல
விடை: விரைவாக வெளியேறுதல்
92. உடுக்கை இழந்தவன் கைபோல
விடை: நட்பு
93. இடியோசை கேட்ட நாகம் போல
விடை: அச்சம், மிரட்சி
94. புலி சேர்ந்து போகிய கல்லளை போல
விடை: வயிறு
95. சிப்பிக்குள் முத்து போல
விடை: மேன்மை
96. உமிகுற்றி கை வருந்தல் போல
விடை: பயனற்ற சொல்
97. நீரும் நெருப்பும் போல
விடை: விலகுதல்
98. வெள்ளத்தனைய மலர் நீட்டம்
விடை: முயற்சிக்கேற்ற பலன்
99. எட்டாப்பழம் புளித்தது போல
விடை: விலகுதல்
100. கடன்பட்டவர் நெஞ்சம் போல
விடை: வேதனை
101. நவில்தோறும் நூல் நயம்போல
விடை: பண்பாளரின் தொகுப்பு
102. உடுக்கை இழந்தவன் கை போல
விடை: நட்பு
103. அன்றளர்ந்த தாமரை போல
விடை: சிரித்த முகம்
104. பகலவனைக் கண்ட பனி போல
விடை: நீங்குதல்
105. குன்றேறி யானை போர் கண்டது போல
விடை: செல்வத்தின் சிறப்பு

106. கனியிருப்ப காய்கவர்ந்தற்று
 விடை: இன்னா சொல்
107. உள்ளங்கை நெல்லிக்கனி போல
 விடை: தெளிவு
108. பகலவனை கண்ட பனிபோல
 விடை: துன்பம் நீங்கிற்று
109. சிறுதுளி பெரு வெள்ளம்
 விடை: சேமிப்பு
110. தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்
 விடை: பாசம், பந்தம்
111. நகமும் சதையும் போல
 விடை: ஒற்றுமை
112. நீர் மேல் எழுத்து போல
 விடை: நிலையற்ற தன்மை
113. கண்ணைக் காக்கும் இமை போல
 விடை: பாதுகாப்பு
114. அடியற்ற மரம் போல
 விடை: வீழ்ச்சி
115. செல்லரித்த நூலை போல
 விடை: பயனின்மை
116. வேலியே பயிரை மேய்ந்தது போல
 விடை: நம்பிக்கை துரோகம்
117. கிணற்றுத் தவளை போல
 விடை: அறியாமை
118. செவிடன் காதில் ஊதிய சங்கு போல
 விடை: பயனற்றது
119. அச்சில் வார்த்தாற் போல
 விடை: உண்மைத் தன்மை
120. ஊமை கண்ட கனவு போல
 விடை: இயலாமை
121. மதில் மேல் பூனை போல
 விடை: முடிவெடுக்காத நிலை
122. பசுத்தோல் போர்த்திய புலி
 விடை: வஞ்சகம்
123. குரங்கு கையில் பூமாலை போல
 விடை: பயனற்றது
124. நீறு பூத்த நெருப்பு போல
 விடை: பொய்த்தோற்றம்

125. இலைமறை காளிணி போல
விடை: மறைபொருள்
126. அத்தி பூத்தாற்போல
விடை: எப்பொழுதாவது
127. பசுமரத்தாணி போல
விடை: ஆழமாக பதித்தல்
128. நாய் பெற்ற தெங்கப்பழம்
விடை: அனுபவிக்க தெரியாமை
129. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல
விடை: துன்பத்தை
130. மழை காணா பயிர் போல
விடை: வாட்டம் அதிகப்படுத்துதல்
131. திருடனுக்கு தேள் கொட்டியது போல
விடை: தவிப்பு

- அகழ்வாரை தாங்கும் நிலம் போல் – பொறுமை, பொறுத்தல்
- அச்சில் வார்த்தாற் போல் – ஒரே சீராக
- அடியற்ற மரம் போல் – துன்பம், விழுதல், சோகம்
- அத்தி பூத்தாற் போல் – அறிய செல்வம்
- அரை கிணறு தாண்டியவன் போல் – ஆபத்து
- அலை ஓய்ந்த கடல் போல் – அமைதி, அடக்கம்
- அவளை நினைத்து உரலை இடித்தாற் போல் – கவனம்
- அழகுக்கு அழகு செய்வது போல் – மேன்மை
- அனலில் இட்ட மெழுகு போல் – வருத்தம், துன்பம்
- அனலில் விழுந்த புழுப்போல – தவிர்ப்பு
- இஞ்சி தின்ற குரங்கு போல் – துன்பம், வேதனை
- இடி ஓசை கேட்ட நாகம் போல் – அச்சம், மருட்சி, துன்பம்
- இடி விழுந்த மரம் போல் – வேதனை
- இணருழந்தும் நாறா மலரனையார் – விரித்துரைக்க இயலாதவர்
- இலைமறை காய் போல் – மறைபொருள்
- இழவு காத்த கிளி போல் – ஏமாற்றம், நினைத்தது கை கூடாமை
- உடுக்கை இழந்தவன் கைபோல் – நட்பு, உதவுதல்
- உமி குற்றிக் கைவருந்தல் போல – பயனற்ற செயல்
- உமையும், சிவனும் போல் – நெருக்கம், நட்பு
- உயிரும் உடம்பும் போல் – ஒற்றுமை, நெருக்கம், நட்பு
- உள்ளங்கை நெல்லிக்கனி போல் – தெளிவு
- ஊசியும் நூலும் போல் – நெருக்கம், உறவு

- ஊமை கண்ட கனவு போல – கூற இயலாமை, தவிப்பு
- ஊருணி நீர் நிறைதல் – செல்வம்
- எட்டாப்பழம் புளித்தது போல் – ஏமாற்றம்
- எரிகின்ற நெய்யில் எண்ணெய் ஊற்றினார் போல் – வேதனையைத் தூண்டுதல்
- எலியும் பூனையும் போல் – பகை, விரோதம்
- ஏழை பெற்ற செல்வம் போல் – மகிழ்ச்சி
- ஒருநாள் கூத்திற்கு மீசை சிரைத்தாற் போல் – வெகுளித்தனம், அறியாமை
- ஒருமையுள் ஆமை போல் – அடக்கம்
- கடல் மடை திறந்தாற் போல் – விரைவு, வேகம்
- கடலில் கரைத்த பெருங்காயம் போல் – பயனற்றது, பயனின்மை
- கடன் பட்டான் நெஞ்சம் போல் – மனவருத்தம், கலக்கம்
- கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் – துன்பம், வேதனை
- கண்ணைக் காக்கும் இமை போல – பாதுகாப்பு
- கயிரற்ற பட்டம் போல் – தவித்தல், வேதனை
- கல்லுப்பிள்ளையார் போல் – உறுதி, திடம்
- கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடி புகுந்தது போல் – அத்துமீறல்
- காட்டாற்று ஊர் போல் – அழிவு, நாசம்
- கிணற்றுத் தவளை போல் – அறியாமை, அறிவின்மை
- கிணறு வேட்ட பூதம் பிறந்தது போல் – அதிர்ச்சி, எதிர்பாரா விளைவு
- குடடி போட்ட பூனை போல் – பதட்டம், அழிவு, துன்பம்
- குந்தித் தின்றால் குன்றும் மாளும் – சோம்பல்
- குன்று முட்டிய குருவி போல் – வேதனை, துன்பம்
- குன்று முட்டிய குருவி போல் – வேதனை, துன்பம், சக்திக்கு மீறிய செயல்
- சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்தது போல – மிக்க மகிழ்வு
- சாயம் போன சேலை போல் – பயனின்மை
- சிறகு இழந்த பறவை போல – கொடுமை
- சுதந்திர பறவை போல் – மகிழ்ச்சி, ஆனந்தம்
- சூரியனை கண்ட பணி போல் – மறைவு, ஓட்டம்
- செல்வற்கே செல்வம் தகைத்து – அடக்கம்
- சேற்றில் மலர்ந்த செந்தாமரை – குடிபிறப்பின் சிறப்பு
- தாயைக் கண்ட சேயைப் போல – மகிழ்ச்சி

- திருத்தொண்டர் புராணம் என்னும் அடைமொழியால் குறிக்கப்படும் நூல் – பெரியபுராணம்
- தொட்டனை தூறும் மணற்கேணி – அறிவு
- தோன்றின் புகழோடு தோன்றுக – தோன்றாமை நன்று
- நட்புக்கு கரும்பை உவமையாகச் சொன்ன இலக்கியம் – நாலடியார்
- நத்தைக்குள் முத்துப் போல – மேன்மை
- நாண் அறுந்த வில் போல – பயனின்மை
- நீர்க்குமிழி அன்ன வாழ்க்கை – நிலையாமை
- நீரின்றி அமையாது உலகெனின் – ஒழுக்கம் இராது, ஒழுக்கு
- பகல்வெல்லும் கூகையைக் காக்கைப் போல் – எளிதில் வெல்லுதல்
- பல துளி பெருவெள்ளம் – சேமிப்பு
- பாராங்கல் மீது விழும் மழைநீர் போல் – சிதறிப்போதல்
- புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது – சான்றாண்மை
- பூவோடு சேர்ந்த நார் போல – உயர்வு
- மடவார் மனம் போல் – மறைந்தனர்
- மண்ணுக்குள் மறைந்திருக்கும் நீரைப் போல – மாந்தருள் ஒளிந்திருக்கும் திறன்
- மருந்தாகி தப்பா மரம் – தீர்த்து வைத்தல்
- மழை காணாப் பயிர் போல – வறட்சி
- மழைமுகம் காணாப் பயிர் போல – வாட்டம்
- மேகம் கண்ட மயில் போல – மகிழ்ச்சி
- வரையா மரபின் மாரி போல் – கொடுக்கும் தன்மை
- வளர்ந்த கடா மார்பில் பாய்வது போல – நன்றியின்மை
- வள்ளலார் என்று போற்றப்படுபவர் – இராமலிங்க அடிகளார்
- விருத்தமெனும் ஒண்பாவில் உயர்ந்தவர் – கம்பர்
- விழலுக்கு இறைத்த நீர் போல – பயனற்றது
- வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவது போல – அறிவற்ற தன்மை

## 20. எதுகை, மோனை, இயைபு இவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெழுதுதல்

**மோனை** :

ஒரு பாடல்/செய்யுளின் சீர்களிலோ, அடிகளிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை. மோனை இரண்டு வகைப்படும்.

அவை

- அடிமோனை
- சீர்மோனை

### 1. அடிமோனை:

- முதலடி முதல் எழுத்தும் , 2ம் அடியின் முதல் எழுத்தும் ஒன்றி வருவது

**(எ.கா):**

தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்

### 2. சீர்மோனை:

- சீர் தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது சீர்மோனை

**(எ.கா):**

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்கு

சீர்மோனை ஏழு வகைப்படும்

அவை

- இணை **(1,2)**
- பொழிப்பு **(1,3)**
- ஒரூஉ **(1.4)**
- கூழை **(1,2,3)**
- கீழ்க்கதுவாய் **(1,2,4)**
- மேற்கதுவாய் **(1,3,4)**
- முற்று **(1,2,3,4)**



தேர்வுக்குறிப்புகள்

1. **இணை மோனை** : (1,2)

- ஒரு அடியின் முதல் இரு சீர்களிலும் வருகிற மோனை, இணை மோனை.
- (எ.கா): இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

2. **பொழிப்பு மோனை**: (1,3)

- ஒரு அடியின் முதல், மூன்றாம் சீர்களில் வருகிற மோனை பொழிப்பு மோனை
- (எ.கா): அரிக்குரல் கிண்கிணி அரற்றும் சீறடி”

3. **ஒரூஉ மோனை** (1.4)

- ஒரு அடியின் முதல், நான்காம் சீர்களில் ஒன்றாக வந்தால் ஒரூஉ மோனை
- (எ.கா) அம்பொன் கொழிஞ்சி நெடுந்தேர் அகற்றி

4. **கூழை மோனை** (1,2,3)

- ஒரு அடியின் முதல் மூன்று சீர்களிலும் வருகிற மோனை, கூழை மோனை
- (எ.கா): 'அகன்ற அல்குல்' அந்நுண் மருங்குதல்

5. **கீழ்க்கதுவாய் மோனை** (1,2,4)

- ஒரு அடியின் முதல், இரண்டு மற்றும் நான்காம் சீர்களில் ஒன்றாக வருவது கீழ்க்கதுவாய் மோனை
- (எ.கா): இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

6. **மேற்கதுவாய் மோனை**{1,3,4)

- ஒரு அடியின் முதல், மூன்று மற்றும் நான்காம் சீர்களில் ஒன்றாக வருவது மேற்கதுவாய் மோனை
- (எ.கா): அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்

7.**முற்று மோனை** (1,2,3,4)

- ஒரு அடியின் முதல் நான்கு சீர்களிலும் வருகிற மோனை முற்று மோனை
- (எ.கா): கற்க கசடற கற்பவை கற்றபின்

**எதுகை :**

ஒரு பாடல்/செய்யுளின் சீர்களிலோ, அடிகளிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை. எதுகை இரண்டு வகைப்படும்

அவை

- அடி எதுகை
- சீர் எதுகை

1. **அடி எதுகை**

- அடிதோறும் 2 ம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகை

**(எ.கா):**

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு

2. **சீர் எதுகை**

- சீர் தோறும் 2 ம் எழுத்து ஒன்றி வருவது சீர் எதுகை
- **சீர்எதுகை ஏழு வகைப்படும்**

அவை

- இணை (1,2)
- பொழிப்பு (1,3)
- ஒரூஉ (1.4)
- கூழை (1,2,3)
- கீழ்க்கதுவாய் (1,2,4)
- மேற்கதுவாய் {1,3,4)
- முற்று (1,2,3,4)

1. **இணை எதுகை** (1,2):

- ஒரு அடியின் முதல் இரு சீர்களிலும் வருகிற எதுகை இணை எதுகை
- (எ.கா): ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியே



தேர்வுக்குறிப்புகள்

2. **பொழிப்பு எதுகை** (1.3) :

- ஒரு அடியின் முதல், மூன்றாம் சீர்களில் வருகிற எதுகை பொழிப்பு எதுகை
- (எ.கா): தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்

3. **ஒரூஉ எதுகை** (1.4) :

- ஒரு அடியின் முதல், நான்காம் சீர்களில் ஒன்றாக வந்தால் ஒரூஉ எதுகை
- (எ.கா): ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்

4. **கூழை எதுகை** (1,2,3) :

- ஒரு அடியின் முதல் மூன்று சீர்களிலும் வருகிற எதுகை, கூழை எதுகை
- (எ.கா): பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை

5. **கீழ்க்கதுவாய் எதுகை** (1,2,4) :

- ஒரு அடியின் முதல், இரண்டு மற்றும் நான்காம் சீர்களில் ஒன்றாக வருவது கீழ்க்கதுவாய் எதுகை
- (எ.கா): ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

6. **மேற்க்கதுவாய் எதுகை** (1,3,4) :

- ஒரு அடியின் முதல், மூன்று மற்றும் நான்காம் சீர்களில் ஒன்றாக வருவது மேற்கதுவாய் எதுகை
- (எ.கா) : கற்க கசடற கற்பவை கற்றபின்

7. **முற்று எதுகை** :

- ஒரு அடியின் முதல் நான்கு சீர்களிலும் வருகிற எதுகை முற்று எதுகை
- (எ.கா) : துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்கு

## இயைபு :

ஒரு பாடல்/செய்யுளின் சீர்களிலோ, அடிகளிலோ அடியிறுதியில் ஓரெழுத்தோ, பல எழுத்துகளோ ஒன்றிவருவது இயைபு.

(எ.கா) :

நந்தவ னத்திலோ ராண்டி – அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி,
கொண்டுவந் தானொரு தோண்டி – அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!

- இதில் ”ண்டி” என்ற எழுத்துகள் ஒன்றி வருகின்றன.
- **இயைபு இரண்டு வகைப்படும்**

அவை

- அடி இயைபு
- சீர் இயைபு

### 1. அடி இயைபு :

- அடிதோறும் இறுதி எழுத்து, அசை, சொல் ஆகியன ஒன்றிவருவது அடி இயைபு
- (எ-கா) கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும் கொடிகள் வானம் படிதர மூடும்

### 2. சீர்இயைபு:

- ஓரடியுள் இருக்கும் சீர்களின் இறுதி எழுத்து முதலாயின ஒன்றி இயைய வருமாறு தொடுப்பது சீர் இயைபு.
- **சீர்இயைபு ஏழு வகைப்படும்**

அவை

- இணை (1,2)
- பொழிப்பு (1,3)
- ஒரூஉ (1.4)
- கூழை (1,2,3)
- கீழ்க்கதுவாய் (1,2,4)

தேர்வுக்குறிப்புகள்

- மேற்கதுவாய் (1,3,4)
- முற்று (1,2,3,4)

1. **இணை இயைபு** (1,2)

- ஒரு அடியின் 1,2 ஆம் சீர்களின் ஈற்றெழுத்து ஒன்றி வருவது இணை இயைபு
- (எ-கா) : மொய்த்துடன் தவழும் முகிலே பொழிலே

2. **பொழிப்பு இயைபு** (1,3)

- ஒரு அடியின் ஒன்றாம் சீரிலும் மூன்றாம் சீரிலும் இறுதி எழுத்து ஒன்றி வருவது பொழிப்பு இயைபு .
- (எ-கா) : ‘மற்றதன் அயலே முத்துறழ் மணலே’

3. **ஒரூஉ இயைபு** (1.4)

- ஒரு அடியின் ஒன்றாம் நான்காம் சீர்களில் இறுதி எழுத்து ஒன்றி வருவது ஒரூஉ இயைபு.
- (எ-கா) : நிழலே இனியதன் அயலது கடலே

4. **கூழை இயைபு** (1,2,3)

- ஒரு அடியின் ஒன்றாம் இரண்டாம் மூன்றாம் சீர்களில் இறுதி எழுத்து ஒன்றி வருவது கூழை இயைபு.
- (எ-கா) : மாதர் நகிலே வல்லே இயலே

5. **கீழ்க்கதுவாய் இயைபு** (1,2,4)

- ஒரு அடியின் ஒன்றாம் இரண்டாம் நான்காம் சீர்களின் இறுதி எழுத்து ஒன்றி வருவது கீழ்க்கதுவாய் இயைபு.
- (எ-கா) : பல்லே தவளம் பாலே சொல்லே

6. **மேற்கதுவாய் இயைபு** (1,3,4)

- ஒரு அடியின் ஒன்றாம் மூன்றாம் நான்காம் சீர்களில் இறுதி எழுத்து ஒன்றி வருவது மேற்கதுவாய் இயைபு
- (எ-கா) : வில்லே நுதலே வேற்கண் கயலே



தேர்வுக்குறிப்புகள்

## 7. முற்று இயைபு (1,2,3,4 )

- ஒரு அடியின் நான்கு சீர்களிலும் ஈற்றெழுத்து ஒன்றி வருவது முற்று இயைபு
- (எ-கா) : புயலே குழலே மயிலே இயலே

## முந்தைய தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்

1. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு - எதுகை வகையைக் கண்டுபிடிக்கவும். **(2019 G4)**
   a. பொழிப்பு எதுகை
   b. கூழை எதுகை
   c. மேற்கதுவாய் எதுகை
   d. கீழ்க்கதுவாய் எதுகை
2. அழக்கொண்ட எல்லாம் அழப்போம், இழப்பினும் - இந்த அடியில் அமைந்துள்ள எதுகையைத் தேர்க. **(2019 G4)**
   a. கூழை எதுகை
   b. மேற்கதுவாய் எதுகை
   c. கீழ்க்கதுவாய் எதுகை
   d. பொழிப்பு எதுகை
3. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம் இக்குறள்பாவில் இடம்பெற்றுள்ள சீர்மோனை பெயரினைத் தேர்ந்தெடு **(2018 G4)**
   a. கீழ்க்கதுவாய் மோனை
   b. கூழை மோனை
   c. ஒரூஉ மோனை
   d. மேற்கதுவாய் மோனை
4. “விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து

உள்நின்று உடற்றும் பசி” இக்குறட்பாவில் காணலாகும் மோனை எது? **(2018 G4)**

   a. மேற்கதுவாய் மோனை
   b. கீழ்க்கதுவாய் மோனை
   c. கூழை மோனை
   d. ஒரூஉ மோனை

தேர்வுக்குறிப்புகள்

5. அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல் கீழ்க்காணும் விடைகளுள் சரியான விடை எது? **(2016 G4)**
   a. எதுகை மட்டும் வந்துள்ளது
   b. எதுகையும், மோனையும் வந்துள்ளது
   c. எதுகை, மோனை, அந்தாதி வந்துள்ளன
   d. மோனை மட்டும் வந்துள்ளது
6. தொடை விகற்பம் எத்தனை வகைப்படும்? **(2014 G4)**
   a. 40
   b. 35
   c. 25
   d. 45
7. "தித்திக்குந் தெள்ளமுதாய்த்தெள்ளமுதின்"
   கீழ்க்காணும் விடைகளுள் சரியான விடை எது? **(2013 G4)**

   a. எதுகை மட்டும் வந்துள்ளது
   b. மோனை மட்டும் வந்துள்ளது
   c. எதுகை, மோனை, இயைபு வந்துள்ளன
   d. எதுகையும், மோனையும் வந்துள்ளன
8. மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும் மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து - இப்பாடலில் கீழ்வரும் விடைகளில் பொருந்தாததைச் சுட்டுக. **- (2013 G4)**
   a. அடிமோனை
   b. அடி எதுகை
   c. அடி இயைபு
   d. சீர் மோனை
9. "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்" இந்த அடியில் அமைந்துள்ள மோனை வகையைத் தேர்ந்தெடு **(2015 G2)**
   a. கீழக்கதுவாய்
   b. இணை
   c. கூழை
   d. மேற்கதுவாய்
10. சரியான எதுகையைத் தேர்க

"எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப் புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்" **(2016 G2)**

   a. எள்ளறு- வியப்ப
   b. புள்ளுறு - புன்கண்
   c. எள்ளறு - புள்ளுறு
   d. சிறப்பின்-புன்கண்

11. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத் திறந்தாரை எண்ணிக்கொண் டற்று - இதில் அமைந்து வரும் மோனை. **(2017 G2)**
    - **a.** இணை மோனை
    - **b.** பொழிப்பு மோனை
    - **c.** ஒரூஉ மோனை
    - **d.** கூழை மோனை
12. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இலன் - இதில் அமைந்து வரும் தொடைநயம். **(2017 G2)**
    - **a.** அடி முரண் தொடை
    - **b.** அடிமோனைத் தொடை
    - **c.** அடி இயைபுத் தொடை
    - **d.** எதுவுமில்லை

தேர்வுக்குறிப்புகள்

## 21. பழமொழிகள்

1. தன்னுயிர் போல மன்னுயிர் நினை
   Do into others as you would be done by
2. சிறிய பானை சீக்கிரம் சூடாக்கும்
   A little pot is soon hot
3. உடைத்த சங்கு பரியாது
   A cracked bell never sound well
4. அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் தேனும்
   A honey tongue and a heart of gall
5. பொய்யன் உண்மை பேசும் போது யாரும் நம்புவதில்லை
   A liar is not believed when he speaks the truth
6. கதைக்கு காலில்லை
   A lie has no legs
7. ஒரு காசு பேணின், இரு காசு தேறும்
   A penny saved is a penny gained
8. சாம்பல் பூசியவர் எல்லாம் சாமியார் அல்ல
   All are not saints that go to church
9. எல்லா மதங்களும் அன்பை போதிக்கின்றன.
   All roads lead to rome
10. ஓய்வு இல்லாத உழைப்பு உப்பில்லாத உணவு
    All work and no play make jack a dull boy
11. பழியை விட மன்னிப்பு வலிமையானது
    An injury forgiven is better than that revengee
12. தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்
    Better be alone than in bad company
13. அனைவருக்கும் நண்பனாக இரு, ஆனால் நெருங்கி பழகாதே
    Be friendly but not familiar
14. கடனில்லா சோறு கால் வயிறு போதும்
    Better go to bed sleepless than rise in debt
15. பொறுமை கசப்பானது அதன் பலன் இனிப்பு
    Bitter is patience but sweet is it's fruit
16. ஆசை ; வெட்கம் அறியாது
    Love is blind
17. கடுகு போன இடம் ஆராய்வார்; பூசணிக்காய் போன இடம் தெரியாது.
    Penny wise, pound foolish
18. நிதானம் பிரதானம்
    Slow and steady wins the race
19. தாடி வைத்தவர் எல்லாம் தத்துவ ஞானி அல்ல
    The beard does not make philosopher
20. ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை
    The pot call the kettle black
21. கடுகு களவும் களவுதான், கற்பூரம் களவும் களவுதான்
    Theft is a theft, be it stealing a mustard or acamphor

தேர்வுக்குறிப்புகள்

22. கெட்ட பழக்கங்கள் அழையா விருந்தாளிகள்
    Weeds want to sowing
23. ஒன்றும் தெரியாதவனுக்கு எதிலும் சந்தேகம் இல்லை
    Where there is no knowledge; there are no doubts
24. உயிரோடு இருக்கும் போது ஒரு கரண்டி நெய்க்கு வழி இல்லை. ஓமத்துக்கு ஒன்பது கரண்டி நெய்!
25. While he was alive they couldn't not afford one spoonful of ghee, now they spend nine spoons of ghee for the cermonial fire.
26. திடமான தொடக்கம் பாதி வெற்றி
    Well begun is half done
27. நம் தவறுகளை விட மற்றவர் தவறுகளிலிருந்து நாம் நிறைய கற்கலாம்
    We can learn more from others mistakes than from ours
28. மது உள்ளே போனால் மதி வெளியே போகும்
    When ale is in wit is out
29. வீழ்ச்சியின் முன் எழுகிறது தற்பெருமை
    Pride gose before fall
30. செய்தி ஏதும் இல்லை என்பது நல்ல செய்தியே
    No news is good news
31. புதிய துடைப்பம் நன்கு பெருக்கும்
    new brooms sweep clean
32. அரசனை நம்பி புருஷனை கைவிடாதே
    Never quite certainly for hope
33. போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்
    Let by gones be by gones
34. எழுகிறது பெரிதல்ல. இன்னும் அறிந்து சேர்கிறது பெரிது
    It's not a big thing to write but its a great thing to understand and accumulate knowledge
35. சோம்பர் என்பர் தேம்பித் திரிவார்கள்
    Doing nothing is doing I'll
36. இறைக்கின்ற ஊற்றே சுரக்கும்
    Drawn Wells seldom dry
37. வாழ்வதற்க்காக சாப்பிடு, சாப்பிடுவதற்காக வாழாதே
    Eat to live; do not live to eat
38. தானம் கொடுத்த மாட்டை பல் பிடித்துப் பார்க்காதே
    Do not look at gift horse in the mouth
39. பாய்க்குத் தக்கபடி காலை வீட்டு
    Desire according to your limitations
40. தாமதம் தாழ்வுக்கு ஏதுவாகும்
    Delay is dangerous
41. பயனாகாத மூளை பூதத்தின் பணிமனை
    An idle brain is the devils work shop
42. தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அணைக்கும்
    Even if the water becomes hot water, it will quench the fire
43. பேரறிஞர்கள் ஒரே மாதிரியாக சிந்திப்பர்
    Great minds think alike

44. கூழைக் கும்பிடு போடுபவன் ஆபத்தானவர்கள்
    He who bends unnecessarily is dangerous
45. தேவையே கண்டுபிடிப்பின் தாய்
    Necessity is the mother of invention
46. ஒர் ஊர்ப் பேச்சு; ஒர் ஊருக்கு ஏச்சு
    One man's meat is another mans poison
47. வறுமை ஒரு காலம், வளமை ஒரு காலம்
    Sadness and gladness succeed each other
48. ஒரே நாளில் கோட்டையை பிடிக்க முடியாது
    Rome was not built in a day
49. இடிந்த வீட்டில் எலியும் குடி இருக்காது
    Rats desert a falling house
50. உடனே எதையும் நம்புவோர் மோசம் போவார்
    Quick believers need broad shoulder
51. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
    The cat loves fish, but she hates to wet her feet
52. மனைவியில்லாத புருஷன் அரை மனிதன்
    The wife is the key of the house
53. கடந்து போன காலம் கரணம் போட்டாலும் வராது
    Tomorrow never comes
54. துலக்காத ஆயுதம் துருப்பிடித்து ம்ம்
    Too much rest is rust
55. பழம் பழுத்தால், கொம்பிலே தங்காது
    When a fruit becomes ripe, it would be too heavy for the branch to hold it
56. இளமையும் முதுமையும் என்றும் ஒத்துப் போவதில்லை
    Youth and age never agree
57. வானம் சுரக்க, தானம் சிறக்கும்
    When the sky opens up and rains, charity will be abundant
58. இந்த இடம் இல்லாவிட்டால் இன்னொரு சந்தை மடம்
    When God closes one door; he opens another
59. தூங்கும் புலிகளை இடறாதே
    Wake not a sleeping tiger
60. வீட்டுக்கு செல்வம் மாடு, தோட்டத்துக்கு செல்வம் முருங்கை
    The treasure of a house is a cow and treasure of a garden is murungai tree
61. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே
    Trust not broken staff
62. Union is strength
    ஒற்றுமையே பலம்
63. சுவற்றுக்கும் காது உண்டு
    Walls have ears
64. சூடுபட்ட பூனை அடுப்பண்டை சேராது
    Once bitten twice day
65. கரையை அடையும் முன் துடுப்பை எறியாதே
    Never cast the oar till you are out

தேர்வுக்குறிப்புகள்

66. அன்பர் எப்படியோ, தொண்டரும் அப்படியே
Like priest; like people
67. தன் ஊரில் யானை, அயலூரில் பூனை
Every cock will crow upon its dung hill
68. சில விஷயங்களில் எல்லா மனிதர்களும் முட்டாள்களே
Every man is mad on some point
69. ஈடாகாதவனை எதிர்க்காதே
Do not oppose an unequal
70. வீரனுக்கு ஒரு முறை சாவு, கோழைக்கு தினந்தோறும் சாவு
Cowards die many times before their death
71. குள்ள நரி தின்ற கோழி கூவுமா?
Dead men tell no tales
72. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
Death keeps no calendar
73. நாகரிகமாக நடக்க பணம் செலவில்லை
Courtesy costs nothing
74. பிள்ளை பெறும் முன் பெயர் வைக்காதே
Count not you chicken before they are hatched
75. சென்மப் புத்தி செருப்பால் அடித்தாலும் போகாது
Can a leopard Change its spot
76. வைத்தியனுக்கு கொடுப்பதை விட வணிகனுக்கு கொடு
Better pay the cook than the doctor
77. போலி நண்பனை விட நேரிடை எதிரி மேல்
Better an open enemy than a false friend
78. அரை குறை படிப்பு ஆபத்தானது
A little learning is a dangerous thing
79. ஆண்மையற்ற வீரன் ஆயுதத்தை குறை சொல்வான்
A bad work man blames these tools
80. சூரியனை கையால் மறைக்க முடியுமா?
A fog cannot be dispelled with a fan?
81. நீரில் மூழ்குபவனுக்கு துரும்பும் தெப்பமாகும்
A drawing man will catch at a straw
82. நற்குணமே சிறந்த சொத்து
A good reputation is a fair estate
83. நல்லார் பொல்லாரை நடத்தையால் அறியலாம்
A tree is known by it's fruit
84. புலிக்கு பிறந்தது பூனையாகுமா?
A wild goose never lay a lame egg?
85. உடல் வலுவுற்றால், உள்ளம் வலுவுறும்
A sound mind in a sound body
86. வெறுங்கை முழம் போடுமா?
Bare words buy no barley
87. உருவத்தை கண்டு ஏமாறாதே
Appearance is deceitful

88. ஆலோசித்து வாக்கு கொடு விரைந்து நிறைவேற்று
 Be slow to promise but quick to perform
89. முன் எச்சரிக்கையே பாதுகாப்பிற்க்கு பிதா
 Charity begins at home
90. விவேகம் வீரத்தினும் சிறப்பு
 Discretion is better than valour
91. ஒரே நேரத்தில் பல வேலைகளில் ஈடுபடாதே
 Do not have too many irons in the fire
92. தொன்மை நாடி, நன்மை விடாதே
 Don't forsake the good in search for the ancient
93. இறைக்கின்ற ஊற்றே சுரக்கும்
 Drawn Wells seldom dry
94. குறை குடம் கூத்தாடும்
 Empty vessels make the greatest noise
95. தனக்கு வந்தால் தெரியும் தலைவலி
 Every heart hearth its own ache
96. அறிவே ஆற்றல்
 Knowledge is power
97. இடுக்கண் வருங்கால் நகுக
 Laugh away your fears
98. சிந்திய பாலை எண்ணி பயனில்லை
 It is no use crying over split milk
99. அகவிலை அறியாதவன் துக்கம் அறியான்
 Ignorence is bliss
100. இரு கை தட்டினால் தான் ஓசை
 It takes two to make quarrel
101. . பால் சட்டிக்கு பூனை காவல் வைக்கிறதுபோல்
 Asking a cat to guard the pot of milk

– தேர்வுக்குறிப்புகள் தொடரும்....

பகுதி –அ முடிவுற்றது..

பகுதி – ஆ தொடரும்....

தொகுப்பு – தேர்வுக்குறிப்புகள் டெலிகிராம் சேனல்

https://t.me/ungalnoolagamivanvaasagan